Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

டிசம்பர் 04 - 10, 2014

# வாரமலர் தினமுரசு

சினிசிசிட்



THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1095

## சார்க் ஒரு சந்திப்பு





சதிகாரச் சர்வதேசம்

## தடையும் ஆதரவும்

## கடாபி இல்லாத லிபியா



உலக AIDS தினம்

சிறப்புக் கட்டுரை

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## அகங்காரம்

ஒரு மனிதனின் உள்ளத்திலிருந்து எழும் எண்ணங்களும், அவன் உடலில் ஏற்படும் உணர்ச்சிகளும் தான் அவனது ஆயுட்காலம் வரைக்கும் இயக்கிக் கொண்டிருக்கின்றன. பிறந்த நாளில் இருந்து உலகத்தைப் புரிந்துகொள்ளும் அகவைக்குப் பிற்பாடு இவ்வியக்கம் இயக்கத் தொடங்குகிறது.

எண்ணங்களும் உணர்ச்சிகளும் அவன் நோக்குமிடத்தைப் பொறுத்து நல்லவையாகவும் கெட்டவையாகவும் உருப்பெறுகின்றன. இதன் நிமித்தம் அவனுக்கான வாழ்வின் பாதையை சூழ்நிலை நிர்ணயிக்கிறது.

இப்படியான சூழ்நிலையில் கெட்ட எண்ணங்களையும், தீய உணர்ச்சிகளையும் நீக்க முயற்சிக்க வேண்டும். இல்லையேல் நான் என்ற அகங்காரம் மெல்ல துளிர்விடத் தொடங்கிவிடும்.

**அனந்த நாராயணன், கைவேலி**

## ஆன்மீகம்

## சமதர்ம சமூகத்தின் வாழ்வாதாரம்

இயேசு கொடுக்கும் முக்கியத்துவம் எப்பொழு துமே பொன்னுக்கோ பொருளுக்கோ அல்ல. மனிதனுக்கே முதலிடம், முக்கியத்துவம். "ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை." "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" (மத் 9:13) இதே கொள்கைதான் கெட்டவற்றுக்கும். பாவத்தை அல்ல, பாவியை பெரிதாக கருதுபவர். எடுத்துக்காட்டு. ஊதாரி மைந்தன் உவமை, விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்.

இவ்வாறு மனிதனையும் அவனது மனநிலையையும் முதன்மைப்படுத்துவதால் அவர்களிடமிருந்து வெளிப்படும் செயல்களின் எதார்த்தமும் வெளிப்படுகிறது. தியாகம், காணிக்கை, பிறருக்குக் கொடுத்தல் இவற்றின் உட்பொருள், உள்நோக்கம் இவற்றை உணரமுடிகிறது. தன்னில் ஒரு தாக்கத்தை, இழப்பை ஏற்படுத்தாத எச்செயலையும் தியாகம், காணிக்கை என்று கணிக்கமுடியாது.

ஏழைக் கைம்பெண் தன் வறுமையில் இருந்த அனைத்தையும் போட்டாள். இது தியாகம். பணக்காரன் பல கோடியில் பல லட்சத்தில் பலரும் பாராட்டும் மண்டபம் கட்டுவதில் என்ன தியாகம் இருக்கிறது என்பது, இயேசுவின் பாராட்டில் புதைந்திருக்கும் பூதாகாரமான கேள்வி. இந்த கேள்வியின் பதிலே சமதர்ம சமூகத்தின் வாழ்வாதாரம். இதுவே இயேசு விரும்பும் காணிக்கை, தியாகம்.

## அல்லாஹ்வுக்கான அன்பு

அல்லாஹ்வின்மீது ஒரு மனிதனுக்கு கனிந்த அன்பு அவனது அடியான் மீதும் ஏற்படுமாயின் அது களங்கமற்ற அன்பாகவே இருக்கும். அதில் சுயநலநோக்கங்களோ குறுகிய மனப்பான்மைகளோ இருக்காது.

அல்லாஹ் விரும்புகின்ற இடங்கள் எல்லாம் அவன் அடியான் இன்னொரு மனிதனுக்கு அன்பு செலுத்துவான். அல்லாஹ் வெறுக்கின்ற இடங்களில் அவன் தனது அன்பைத் துண்டித்துக்கொள்வான்.


இவ்வாறு எமது அன்பின் வெளிப்பாடு அமையும்போது அது அல்லாஹ்வுக்கான நமது நேசமாகும். இறைதூதருக்கு இறைமறை கூறுகிறது.

நபியே! கூறுங்கள் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பார்களாக இருந்தால் என்னை பின்பற்றுங்கள். அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். உங்களது பாவங்களையும் மன்னிப்பான். அல்லாஹ் பாவங்களை மன்னிக்கும் நிகரற்ற கருணையாளனாக இருக்கிறான். **அல்குர் ஆன் 3:31**

ஆம். நாளை மறுமையில் நம்மைச் சுவனச்சோலைக்கு அழைத்துச் செல்லும் அல்லாஹ்வுக்கான அன்பு.

**எம்.சி.கலீல், கல்முனை -05**

## கவிதைப்போட்டி 1092



● பாராட்டுக்குரியது ●

### உயிர்கொல்லும் அனர்த்தம்

குளிர்கொண்ட வேளையிலே
துணி கொண்டு தலை மூடி
கிலி கொண்ட அண்ணன் தங்கை
உயிர்கொல்லும் அனர்த்தம்
திரும்பியும் வந்து தம்மை
பலி கொள்ளுமா – என
பயங்கொண்ட பார்வையாலே
விழிப்போடு இருக்கின்றார்கள் இங்கே!

இளம்பிறை யோகன்,
புத்தளம்.


### சமாதி

இயற்கையையே அன்னையாய்
நம்பி வாழ்ந்த எம்மீது
ஏனிந்தப் பழிவாங்கல்
எம்மை வாழவைத்த
மண்ணே எமக்குச்
சமாதியானதேனோ?
ஏதும் புரியவில்லை.

ஏ.சீ.ஏ.றகுமான், ஏறாவூர் -06




## கவிதைப் போட்டி இல 1095



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.12.2014
கவிதைப் போட்டி இல. 1095 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### யார் துணை

இயற்கையின் சீற்றத்தால்
இரையாகிப் போயினரே
எம் பெற்றோர்
கூடி இருந்த உறவெல்லாம்
மண்ணுக்குள் மாண்டுவிட
சிறுசுகள் நாம் இன்று
சிறகொடிந்த பறவைகளாய்
போர்வைக்குள் வாடுகிறோம்
யார் எமக்கு துணைவருவார்?

சசிக்குமார் றசி, அச்சுவேலி

### அச்சமெதற்கு...?

இவர்கள் போர்வைக்குள்
பதுங்கி தப்பியோட முயல்வது
குளிருக்குப் பயந்தல்ல
துஷ்பிரயோகத்திற்கோ அன்றி
சித்திரவதைக்கோ
வெருண்டல்ல – இன்று
இப்புவியையே நடுங்கவைக்கும்
'எபோலா' கிருமிகளுக்கஞ்சி...

அ.சந்தியாகோ,கண்டி.

### குமுறும் குழந்தைகள்

போர்வைக்குள் மறைந்து கொண்டு
போர்விமானங்களைப் பார்க்கிறார்கள்
படுத்து உறங்க வீடில்லை
பத்துமாசம் சுமந்துபெற்ற தாயில்லை
குண்டு வீச்சால் எங்கள்
குடும்பமே பலி என்று
குமுறும் குழந்தைகள் இவர்கள்.

எம்.சி.கலீல், கல்முனை–05

### யார் அறிவார்?

பயங்கரவாதக் கொடுமையோ
பாரினைத் தாக்குகிறது - இந்த
இயற்கையின் கொடுமையோ
மனிதனைப் பார்க்கின்றது - அதில்
பெற்றவரை இழந்த - அனாதை
அண்ணன் தங்கையோ - தம்
பயம் கொண்ட பார்வையாலே
எந்தக் கொடுமையை - இங்கே
பார்க்கின்றனரோ யார் அறிவார்?

ஏ.எம்.கமால், புத்தளம்.

### இன்று அன்றே என்றால்...

இடியால் கொட்டிய
இஸ்ரேலின்
இரக்கமற்ற கொதிப்பு
இளம் சிறார்களை
இழிவு நிலைக்குள்ளாக்கியது.
இருக்க இடமற்று
இருக்கும் பயம் போக்க
இந்நிலை கொண்டாயோ.
இன்று கொள்ளும் நிலைமை
இன்று அன்றே என்றால்
இந்நிலைமை இருக்காதே!

க.சீ.செல்வராசர்,
மட்டுநகர்.

## உங்கள் பக்கம்

### இஷ்ரத்திற்கு செயற்படும் தனியார் பேரூந்துகள்

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலே தொடர்ச்சியாக பயணம் மேற்கொண்டு வருகின்ற பொதுமகன் என்றவகையில் குறித்த வீதியால் பயணத்தை மேற்கொள்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் சார்பில் இம்மடலை தினமுரசு வார மலருக்கு எழுதி அனுப்புகின்றேன்.

தனியார் பேரூந்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பயணிக்கின்ற பிரயாணிகளை ஏற்றுவதற்கான பஸ்தரிப்பிடம் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கின்றது.

இருந்தபோதிலும் தனியார் பேரூந்துகள் புறப்படுவதற்கான நேர அட்டவணைகளோ ஒழுங்குமுறைகளோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தனியார் பேரூந்துகள் ஒவ்வொன்றும் தங்கள் இஷ்ரத்துக்குச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதன்போது அவர்களுக்குள் பிணக்குகளும் போட்டிகளும் ஏற்பட்டு இடைநடுவில் முரண்பட்டுக்கொள்வதும் பேரூந்துகளின் கண்ணாடிகளை உடைப்பதும் தொடர்கதையாகவே சென்றுகொண்டிருக்கின்றது. இவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவங்கள் குறித்த பேரூந்துகளில் பயணிக்கின்ற என்போன்ற பிரயாணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

சில பிரயாணிகள் பாதிக்கப்படுகின்ற சம்பவங்களும் நடைபெறுகின்றன. இதுதொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. எனவே, உங்கள் பக்கம் ஊடாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

பாதிக்கப்பட்ட பயணிகள்


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## அமைதியின் சொற்கள்

நான் சொல்வதை நம்புங்கள். போர்கள் வெளியே தொடங்க முன்பே, எப்பொழுதோ அது உள்ளே தொடங்கிவிட்டது. உள்ளே மூளும் போர் மிகவும் பயங்கரமானது. ஏனெனில் அது ஒரு நாளும் அணைக்க முடியாத தீ. அது தொடர்ந்து மூண்டு பற்றிக்கொண்டே போகும். ஒரு சத்தமும் இருக்காது. இது உங்களுடைய நேரம்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்

## வாசகர்சாலை

### அருமை!!!

முரசு பல்வகைப்பட்ட அம்சங்களை சுவையாகச் சுமந்துவருகின்றது. அரசியலில் இருந்து அனைத்தும் என்னைக் கவர்ந்துள்ளது. விளையாட்டு கட்டுரைகள் அருமையாக உள்ளது.

இருந்தாலும் உள்ளூர் விளையாட்டு வீரர்கள் பற்றி முரசு விளையாட்டு பக்கத்தில் பிரசுரிக்கத் தவறுகிறது. 24ஆம் பக்கத்தில் சிலநேரங்களில் மட்டுமே உள்ளூர் விளையாட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே வருகிறது.

ந.மருதன், கிளிநொச்சி

### ஆசிரியரின் கவனத்திற்கு...

வணக்கம்.

ஒவ்வொரு வியாழன்தோறும் தினமுரசை நான் படிக்கத் தவறுவதில்லை. ஏனெனில் குறுக்கெழுத்து போட்டியை செய்வதற்கு ஆவலாகக் காத்துக் கொண்டிருப்பேன். அறிவை வளர்ப்பதற்கு சிறப்பானதாக விளங்குகிறது.

குறுக்கெழுத்து போட்டி எல்லா மட்ட வயதினரும் செய்யும் ஒன்றாகும். குறிப்பிட்ட நேரங்களில் மிகவும் கஷ்டமானதாகக் காணப்படுகின்றது. முரசின் ஆசிரியர் இதைக் கவனத்தில் எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

சி.காவேரி, காலி.

### சிறப்பான கட்டுரை!

சூடு. சுவை. சுவாரசியம் குறையாமல் தினமுரசு வெளிவருகின்றது. 'மூன்றாம் மூன்றாம் பாலினம்' என்ற கட்டுரை சமூகத்தின் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய கட்டுரையாக இருந்தது.

இக்கட்டுரையை பெரிதும் வரவேற்கின்றேன். சமூகத்தில் ஏற்படும் அறியாமை. அந்த அறியாமையின் வெளிப்பாடாக மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயங்கள் தோன்றுகின்ற சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இதுபோன்ற கட்டுரை அவசியமானது.

க.அந்தமான்,
திருகோணமலை.

# வெள்ளத்தில் மூழ்கிய மக்களை மீட்க நடவடிக்கை

## களத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

குடாநாட்டில் அடைமழை காரணமாக மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் மற்றும் மக்களுக்கான நிவாரணம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை உடன் நிவர்த்தி செய்வது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீவிர கவனம் செலுத்திவருகின்றார்.

இதுதொடர்பில், யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களது எண்ணிக்கை, தற்காலிக இருப்பிட வசதி, சமைத்த உணவுகளை வழங்குதல், உலருணவுப் பொருட்களை வழங்குதல், சுகாதார வ்சதிகள், உள்ளிட்ட மக்களுக்கான அவசர தேவைப்



பாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மக்கள் தற்போது வாழ்ந்துவரும் பகுதிகளிலுள்ள வெள்ளத்தை வெளியேற்றுவது மற்றும் அவர்களுக்கு தேவையான கூரைத்தகடுகள், கூரைவிரிப்பு, நிலவிரிப்பு, பாய்கள், போர்வை உள்ளடங்கலான அத்தியாவசிய தேவைகள் குறித்தும் இதில் அவதானம் செலுத்தப்பட்டது.

மக்களுக்கான சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு பொலிஸ், கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், மக்களுக்கான சேவைகளை பிரதேச செயலர்களும், பிரதேச சபை செயலாளர்களும் படைத்தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கும் செயற்திட்டங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறும் இதன்போது கேட்டுக் கொண்டார்.

அத்துடன், கடற்கொந்தளிப்பு காரணமாக நெடுந்தீவிற்கு கடல்மார்க்கமான பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் அவசர தேவைப்பாடுகள் இருப்பின் விமானப்படையின் உதவியை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### மண் சரிவினால் மேலும் இருவர் உயிரிழப்பு

கடும் மழை காரணமாக பொகவந்தலாவ லொயினோன் தோட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த முருகையா குமாரி (வயது 45) மற்றும் முருகையா துஸாரி(18) ஆகிய இருவருமே இந்த அனர்த்தத்தில் மரணமடைந்துள்ளனர்.

இதேவேளை லொயினோன் பிரிவை சேர்ந்த சில தோட்டங்களுக்கு விஜயம் செய்துள்ள தோட்ட அதிகாரிகள் பாதிக்கப்படும் நிலையில் உள்ள வீடுகளை அடையாளம் காணும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கந்தை தோட்டததில், வீடுகள் உடைந்து விழும் நிலையில் காணப்பட்ட 9 குடும்பங்களை அருகிலுள்ள பாடசாலையில் தங்குமாறு குறித்த தோட்ட அதிகாரிகளால் கேட்டுகொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் மேலும் கூறினர்.

# உலக தரத்தில் இலங்கையின் தொழில்நுட்பம்!

உலகின் தொழில்நுட்ப மாற்றத்துக்கேற்ப இலங்கையின் தொழில்நுட்ப வளர்ச்சி முன்னேறியுள்ளதாக, இலங்கை தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தவிசாளர் பேராசிரியர் எல். லக்சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவப்பீட 3ஆவது வருடாந்த ஆய்வு மாநாடு தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உறையாற்றுகையிலேயே [illegible]ர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவப் பீடாதிபதி திருமதி. சரீனா யூ.எம்.ஏ.கபூர் தலைமையில் நடைபெற்ற இவ்வாய்வு மாநாட்டில் பேராசிரியர் எல்.லக்சமன் ரத்நாயக்க தொடர்ந்து உரையாற்றுகையில், பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியில் குறுகிய காலத்துக்குள் தென்கிழக்கு பல்கலைக்கழகம் சர்வதேச ரீதியில் புகழ்பெற்று காணப்படுவதோடு தொழில்நுட்ப ரீதியிலும் பல்கலைக்கழகம் பரிணாம வளர்ச்சி கண்டுவருகிறது என்றார்.

# அவுஸ்ரேலிய வீரருக்கு பிரியாவிடை

அவுஸ்திரேலியா கிரிக்கெட் வீரர் பிலிப் கியூசின் இறுதிக்கிரியைகள் 3ஆம் திகதி நடைபெற்றது. இறுதி மரண நிகழ்வு நியூ சௌத்வேல்ஸ் வட பகுதி நகரான மக்ஸ்விலே உயர் பாடசாலை விளையாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மண்டபத்தின் பார்வையாளர் பகுதி முக்கியஸ்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இறுதி நிகழ்வு நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்ய கிரிக்கெட் அவுஸ்திரேலியா ஒழுங்குகளை செய்திருந்தது. அதேவேளை குறித்த நகருக்கான விஷேட விமான சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இதனால், இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியை பிற்போட்டுள்ள கிரிக்கெட் அவுஸ்திரேலியா, தமது சகவீரரின் இறுதி பிரியாவிடை நிகழ்வில் கலந்து, மறுதினமே போட்டியில் பங்குபற்றுவது வீரர்களுக்கு இயலாத காரியம். வீரர்கள் போட்டியில் பங்குபற்றும் மனநிலையில் இருக்கமாட்டார்கள். அவர்களின் மனநிலைக்கும், மனித பண்புக்கும் நாம் முக்கியத்துவம் வழங்கி போட்டியை பிற்போடுவதாகவும் சூழ்நிலையை உணர்ந்துகொண்டு செயற்படும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியா நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது எனவும் கிரிக்கெட் அவுஸ்திரேலியா பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார்.




# அமெரிக்க தூதரக தாக்குதல் திட்டம்!

## துருவப்படும் பின்னணிகள்...

சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம்மீது தாக்குதல் நடத்த போடப்பட்ட திட்டம் ஒன்று தொடர்பாக கொழும்பு வந்து விசாரணைகளை மேற்கொள்ள அனுமதிக்காக காத்திருக்கிறது, இந்திய மத்திய உளவுத்துறை NIA. இவர்கள் அனுமதிகோரி அனுப்பிய கோப்புக்கள், டில்லியில் கடந்த இரு மாதங்களாக உள்துறை அமைச்சு, மற்றும் வெளியுறவு அமைச்சில் அனுமதிக்காக காத்திருக்கின்றன.

பாகிஸ்தான் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.-யின் ஏற்பாட்டில் போடப்பட்ட திட்டம் இது என்கிறது, மத்திய உளவுத்துறை என்.ஐ.ஏ. (பாகிஸ்தான் அதை மறுத்திருக்கிறது)

37வயதான இலங்கைப் பிரஜை மொஹமெட் சாகிர் ஹுசேன் எனபவர் தமிழக பொலிஸால் கைது செய்யப்பட்டபோது, அவருக்கும் பாகிஸ்தான் உளவுத்துறைக்கும் இருந்த தொடர்பு தெரியவந்தது. அதையடுத்து, இந்த விவகாரத்தில் மத்திய உளவுத்துறை உள்ளே வந்து, சில விசாரணைகளை நடத்தியது.

தற்போது மத்திய உளவுத் துறையிடம் உள்ள விபரங்கள் என்ன?

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி (இவர் உளவுத் துறை ஐ.எஸ்.ஐ.-யின் ஆள் என சொல்லப்படுகிறது) ஒருவரே, தமிழகத்தில் கைது செய்யப்பட்ட சாஹிர் ஹுசேனை கையாண்டவர் என்று தெரியவந்தது.

இலங்கைப் பிரஜை ஹுசேன், இந்த சித்திக் தவிர வேறு சில பாகிஸ்தானிய அதிகாரிகளையும் சந்தித்ததாக கூறியிருக்கிறார். இவர்கள் அனைவரும், இலங்கையில் வைத்தே ஹுசேனை சந்தித்துள்ளனர்.

அதன்பின் ஹுசேன், தாய்லாந்து தலைநகர் பாங்கொங் சென்றிருக்கிறார். அங்கே இருவரை சந்தித்துள்ளார். அந்த இருவரும்தான் சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது தற்கொலை தாக்குதல் நடத்த வேண்டிய மனித வெடிகுண்டுகள் என ஹுசேனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

தாய்லாந்தில் இருந்து இலங்கை திரும்பியபின், பாகிஸ்தான் தூதரகத்தில் பெரிய பதவியில் உள்ள அதிகாரி ஒருவரை சந்தித்துள்ளார், ஹுசேன்.

அப்போது அவர், சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நடத்தப்படவேண்டிய தற்கொலைத் தாக்குதல் பற்றிய மேலதிக விபரங்களை தெரிவித்தார். அதன்படி, இந்த ஆபரேஷனுக்கு கொடுக்கப்பட்ட சங்கேதப் பெயர் - 'திருமண மண்டபம்' (wedding hall). தாக்குதலை நடத்தவேண்டிய இரு மனித வெடிகுண்டுகளுக்கும் கொடுக்கப்பட்ட சங்கேதப் பெயர்கள், 'சமையல்காரர்கள்'(cooks).

"திருமண மண்டபத்துக்குள் சமையல்காரர்கள் வந்துவிட்டார்கள்" என தகவல் போனால், "சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்குள் மனித வெடிகுண்டு நபர்கள் இருவரும் புகுந்துவிட்டார்கள்" என்று அர்த்தம்.

இதுவரை வந்துவிட்ட மத்திய உளவுத்துறையால், இதற்குமேல் இந்த வழக்கில் முன்னேற முடியவில்லை. காரணம், இவர்கள் அவிழ்க்க வேண்டிய மர்மமுடிச்சுகள் இருப்பது, கொழும்பில்.

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தை சேர்ந்தவர்கள், அவர்கள் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.-யின் ஆட்களாக இருந்தாலும், எப்படி உள்ளூர் ஆட்களை இப்படியான நடவடிக்கைகளில் இறக்க முடிகிறது என்பதை தெரிந்து கொளள வேண்டும். அதன்பின், இலங் கையில் இவர்கள் ஒரு வலைப்பின்னலை வைத்திருக்கிறார்களா என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

மத்திய உளவுத்துறை 'ரோ' வுக்கு கொழும்பில் செயற்பாடுகள் உள்ளது. ஆனால், என்.ஐ,ஏ.வுக்கு கிடையாது.

டில்லியில் இருந்து கொழும்பு வரும் என்.ஐ,ஏ. ஆட்களுக்கு, கொழும்பு 'ரோ' சார்பில் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் எந்தளவு ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்பது, ஆண்டவனுக்கே வெளிச்சம்.

எமது ஊகம், நிச்சயம் ஒத்துழைப்பு கிடைக்காது என்பதே.

அடுத்த தெரிவு, இலங்கை உளவுத துறையின் உதவியை பெறுவது. இந்த பிரச்சினையில் தொடர்புடைய மற்ற நாடு பாகிஸ்தான் என்பதால், இலங்கை உளவுத்துறையினர், டில்லியில் இருந்துவரும் என்.ஐ,ஏ. ஆட்களுக்கு பெரிதாக உதவ மாட்டார்கள் என, விமர்சகர்கள் கருதுகின்றனர்.

மற்றொரு விடயம், இலங்கையில் ஐ.எஸ்.ஐ. ஒரு வலைப்பின்னலை வைத்திருக்கிறது என்றால், அவர்களுக்கு கிழக்கு மாகாண தொடர்புகள் இருக்கும். அப்படியான சில பிரதேசங்களுக்குள் உளவுத்துறை 'ரோ' கூட புக முடியாது. அங்கு இலங்கை உளவுத்துறை மனது வைத்தால் தான் சிறு துரும்பளவு தகவலாவது கிடைக்கும்.

இல்லாவிட்டால், பேசாமல் கொழும்பு வந்து, சுற்றிப் பார்த்து விட்டு திரும்ப வேண்டியதுதான்.

இவற்றையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்த என்.ஐ.ஏ. தரப்புக்கள் மாற்றுத் திட்டம் ஒன்றுடன் அனுமதிக்காக காத்திருப்பதாக நம்முடன் தொடர்பில் உள்ள சிலர் தொரிவிக்கின்றனர்.

எனவே, இந்த ஆட்டத்தில் மறைந்திருக்கும் பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வருமா? அல்லது மூடி மறைக்க நடாத்தப்படும் காய் நகர்த்தல்கள் வெற்றியளிக்குமா? எனபதை பொறுத்திருந்துபார்ப்போம்

தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# தாவும் இனம்

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் யார்? யார்? பக்கம் இணைந்து கொள்கிறார்கள் என்பதுதான் இலங்கை மக்களின் தற்போதைய எதிர்பார்ப்புக்குரிய செய்தியாகியிருக்கின்றது.

ஊடகங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. யாரும் கட்சி தாவாது இருந்துவிட்டால் மைத்திரிபால அங்கே போனார். இங்கே போனார் என்றும் மக்கள் வெள்ளம் கட்டுக் கடங்காமல் அலைமோதின என்றும் ஊடகங்கள் செய்திகளை உருவாக்கிக் கொள்கின்ற வசதி உருவாகி உள்ளது.

"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பது போல, தேசிய அரசியல் இரண்டுபட்டுக் கிடக்கின்ற வேளையில் ஊடகங்களுக்கு கொண்டாட்டமாக இருப்பது வழமையே.

இதுநாள்வரை பதவிச்சுகங்களுக்காகவும் குடும்பச்சுகபோகங்களுக்காகவும் அரசியல் கூடாரங்களுக்குள் மயங்கி கிடந்தவர்களுக்கு இப்போது தான் சுயம் தெளிந்திருக்கின்றது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு எந்தக் கூடாரத்துக்குள் இருந்து கொண்டால் எல்லாமும் சௌக்கியப்படும் என்ற தடுமாற்றத்தில் பலபேர் மீண்டும் குரங்குகளாக இருக்கின்றார்கள்.

நவம்பர் மாதம் வரையில் ஊடகங்கள் முதன்மைப்படுத்திய பிரச்சினைகளுக்கு என்னவாயிற்று? தொகுதிகளில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு என்னவாயிற்று. வீதிகளில் இறங்கி, பதாதைகள் ஏந்தி பொதுமக்கள் நடாத்திய போராட்டங்களுக்கு என்னவாயிற்று. எல்லாமுமே மகிந்தவா? மைத்திரியா? என்ற பட்டிமன்ற கூடாரத்திற்குள் புதைந்து போயிற்றோ?

ஊடகங்களும் வசதியாக மறந்து விட்டன. மக்களும் வழமைபோல மறந்துவிட்டார்கள். யாருக்கும் நேற்றைய பிரச்சினைகள் பற்றிய அக் கறை இல்லை. இன்றைய அரசியல் சதிகார மயக்கங்களும் நாளைய அரசிய லுமே எதிர்பார்ப்புக்குரியதாகியுள்ளது.

மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் ஊடகங்கள் என்ற கருத்து இறந்தே போய்விட்டது. இன்று ஊடகங்களின் பிரதிபலிப்பே மக்களுக்கான வழிகாட்டல் என்ற துரதிர்ஷ்டம் சமகாலமாகியிருக்கிறது. மகிழ்ச்சிக்கு வழிகாட்டுவதைவிடவும் துயரங்களையே பல ஊடகங்கள் வழிகாட்டுகின்றன.

ஏனென்றால், மக்களுக்கு துயரங்களும் நாட்டின் குழப்பங்களுமே நாட்டின் நல்ல மூலதனம். வாழ்க ஊடக அ(த)ர்மம்

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழைகாரணமாக மக்கள் முகம் கொடுக்கும் அவலமும் அரசியல் தலைமைகளிடையே ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களை வசதியாகப் பயன்படுத்திக்கொள்ளும் சில மோசடி அதிகாரிகளின் செயற்பாடுகளையும் இங்கு கண்டு கொள்வார் யாருமில்லை. ஊடகங்களுக்கும் இந்த அவலங்கள் வியாபாரத்திற்கு ஏற்றதல்ல என்பதாலா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# சார்க் ஒரு சந்திப்பு

அண்மையில் காத்மண்டுவில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

இதன்போது ஹெரோயின் கடத்தல் வழக்கு தொடர்பில் இலங்கை நீதிமன்றத்தினால் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட இந்திய மீனவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்தமைக்காக இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று மூன்றாவது முறையும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார்.

இது அரசியல் மட்டத்தில் சிறு சலசலப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

குறிப்பாக தமிழக அரசியல் கட்சிகள் தமது கண்டனத்தை வெளியிட்டு இருக்கின்றனர். அதிலும் பா.ஜ.க-வின் கூட்டணிக் கட்சியாக இருக்கின்ற ம.தி.மு.க.வின் தலைவர் வை.கோபாலசாமி மிகவும் தாக்கமான கருத்துக்களை வெளியிட்டுவருகின்றார். இதனால் இருகட்சிகளுக்கும் இடையிலான கூட்டணித் தொடர்பு அறுந்து போவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு தற்போதைய ஆட்சியில் சுகாதார அமைச்சராகவும் ஆளும் கட்சியின் முக்கிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்த, மைத்திரிபால சிறிசேனாவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் களம் குதித்துள்ள நிலையில், இலங்கையின் அரசியலில் தாக்கம் செலுத்தக்கூடிய நாடாக இருக்கின்ற இந்தியாவின் பிரதமர் தற்போதைய ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளமை உள்நாட்டு அரசியலிலும் முக்கியத்துவம்மிக்கதாக அமைந்திருக்கின்றது.

குறிப்பாக, தற்போதைய ஆட்சியாளர்களின் வெளிநாட்டுக் கொள்கை, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கும் தேசிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் அச்சுறுத்தலான ஒன்று என்று கருத்தாடல் உருவாக்கப் பட்டிருக்கின்றது.

குறிப்பாக, சீனாவுடனான இலங்கையின் நெருக்கமும், சீனாவால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட சீனா ஆதிக்கமும் இந்தியாவிற்கு அச்சுறுத்தலானதே என விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டு வருகின்றது.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கையைப் பொறுத்தவரையின் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களே சார்ந்திருக்கும் என்ற எதிர்பார்ப்பு தென்னிலங்கையிலே சில தரப்பினரிடம் காணப்படுகின்றது.

தமிழகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் இந்தியா பற்றிய தென்னிலங்கையின் கணிப்பீட்டில் பாரிய தாக்கத்தைச் செலுத்துகின்றது. எனவே, இந்தியா ஒருபோதும் தமிழ் மக்கள் சார்பான அல்லது தென்னிலங்கையின் விருப்பங்களுக்கு மாறான திசையில் அழுத்தங்களை மேற்கொள்ளும் வகையிலான சூழல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற முன்னெச்சரிக்கையாக சீனாவுடனான நெருக்கத்தினை தற்போதைய இலங்கை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது என்ற விமர்சனமும் காணப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அளவுக்கு மீறிச்செல்வதைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தியா காய்களை நகர்த்துகின்றது என்பதை நிரூபிக்கும் வகையிலான செயற்பாடுகள் அவ்வப்போது இலங்கையில் நடைபெற்றுவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கு உதாரணமாக, பல்வேறு விடயங்களைச் சுட்டிக் காட்டமுடியும். அம்பாந்தோட்டையில் வீரவில துறைமுகத்தினை ஆழமாக்கி அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தை இலங்கை சீனாவிடம் ஒப்படைத்ததன் விளைவாக காலியில் இந்தியாவின் தூதுவராலயம் ஒன்று நிறுவப்பட்டது.

வடக்குக்கான வீதி அபிவிருத்திப் பணிகளில் சீனா கவனஞ் செலுத்தியபோது வடக்கிற்கான புகையிரதப்பாதையை அமைப்பதற்கு இந்தியா முன்வந்தது.

இதேபோன்று இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் இந்தியாவும் தனது இருப்பை நேரடியாகவோ,மறைமுகமாகவோ வெளிப்படுத்தத் தவறுவதில்லை. இவற்றையெல்லாம் அவதானித்து வருகின்ற விமர்சகர்கள், இலங்கைக்குள் சீனாவின் ஆதிக்கம் மேலோங்குவதை விரும்பாத இந்தியாவின் எரிச்சலே இவ்வாறு வெளிப்படுவதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறான பின்னணியிலேயே தற்போதைய இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு தற்போது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கம் ஒன்று ஆட்சியைக் கைப்பற்றினால் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஒன்று ஏற்படும் என்று சகலரும் எதிர்பார்க்கின்றனர். இதையே இந்தியாவும் உள்ளூர விரும்பும் என நம்புகின்றனர்.

ஏனெனில், கடந்த அனுபவத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்குலக நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்ததுடன் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மேற்குலக நாடுகளுடன் நெருக்கமானவர் என்ற கருத்து பல தரப்பிடமும் காணப்பட்டது.

இந்தச் பின்னணியிலேயே தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழலில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி சீனாவின் ஆதிக்கத்தைக் குறைக்கும்முகமாக இந்தியா இராஜதந்திர ரீதியில் சில முயற்சிகளை மேற்கொள்ளும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் நியமனத்தில் இந்தியாவின் பங்களிப்பும் இருக்கின்றது என்ற கிசுகிசுக்களை எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் மிகவும் நாசூக்காக கசியவிட்டிருக்கின்றனர். இவ்வாறான கிசுகிசுக்களில் உண்மைகள் இருக்கக்கூடும் என்ற எண்ணம் சில சாதாரண மக்கள் மத்தியில்கூட ஏற்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்நிலையிலேயே கிசுகிசுக்கள் எதிர்வுகூறல்கள், விமர்சனங்கள் எல்லாவற்றையும் பொய்ப்பிக்கும் வகையில் இந்தியப் பிரதமருடைய கருத்து அமைந்திருக்கின்றது. இதனூடாக இந்தியாவினுடைய இலங்கை ஆட்சியாளர் தொடர்பான விருப்பம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. அத்துடன் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் காணப்படுகின்ற இறுக்கமும் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது இந்தியாவின் மத்திய ஆட்சியில் பா.ஜ.க இருந்தாலென்ன? காங்கிரஸ் இருந்தாலென்ன இல்லை மூன்றாவது தரப்பொன்று ஆட்சியமைத்தாலும்கூட இந்திய வெளியுறவுக் கொள்கை யில் கொள்கை என்பது திடமான ஒன்றாகவே இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையின் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு அதிருப்திகள் அல்லது விமர்சனங்கள் இருந்தாலும் தங்களின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான பல விடயங்களில் இலங்கையை அனுசரித்துக் கொண்டுதான் செல்லவேண்டும். அந்தவகையில் ஏனையவர்களை விட தற்போதைய ஜனாதிபதி தங்களின் ஆட்டத்திற்கு பொருத்தமானவர் என நம்புகின்றார்கள்.

இதுவே நரேந்திரமோடி ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் இலங்கை ஜனாதிபதியின் சாமர்த்தியமான இராஜதந்திர விளையாட்டையும் சுட்டிக் காட்டவேண்டும்.

காத்மண்டு சார்க் மாநாட்டில் பாரதப் பிரதமரைச் சந்திக்க வேண்டிவரும் என்பதை ஏற்கெனவே உணர்ந்திருந்த ஜனாதிபதி அவர்கள், மீனவர் விவகாரத்தைக் கையிலெடுத்து அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியதன் ஊடாக பா.ஜ.க.விற்கு உள்நாட்டில் நற்பெயரையும் அரசியல் இலாபத்தையும் ஏற்படுத்தியிருந்தார்.

அந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரில் சந்திக்க வேண்டி ஏற்பட்ட பிரதமர் நரேந்திர மோடியால் அதுபற்றி பேசாமல் இருக்கமுடியாது. அத்துடன் தேர்தலைச் சந்திக்கவுள்ள ஜனாதிபதி ஒருவருக்கு வாழ்த்துத் தெரிவிக்காமல் இருப்பதும் நட்புநாடு ஒன்றின் தலைவருக்குப் பண்பாக இருக்காது.

இவற்றையெல்லாம் கணக்கிட்டு ஜனாதிபதி நகர்த்திய காய்கள் இக்கட்டான சூழலில் கைகொடுத்திருக்கின்றது என்பதும், அது தேர்தல் அரங்கில் பிரதிபலிக்கும் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.





# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### வதை 142

அந்தக் கன்னியாஸ்திரி என்ன விளக்கம் சொல்லி அந்த மக்களைக் கலைந்து போகச் சொன்னார் என நாம் அவரிடம் கேட்கவில்லை. அவரும் அதைச் சொல்லவில்லை. அவரை அவரது இடத்தில் இறக்கிவிட்டு நாம் புத்தளம் நோக்கிப் பயண-மானோம்.

காலையிலிருந்து பயணம் செய்து பலவிதமான அலைச்சல்களால் நாம் எல்லோரும் களைத்திருந்ததால், அன்று இரவு புத்தளம் நகரில் தங்கிவிட்டு, அடுத்த நாள் காலையில் கொழும்புநோக்கிய எமது பயணத்தைத் தொடர்வோம் என எண்ணினோம். ஆனால் புத்தளத்தில் எங்கு தங்குவது என்ற பிரச்சினை இருந்தது. ஏனெனில், அங்கு பெரும்பான்மையாக முஸ்லீம் மக்கள் வாழ்ந்தாலும் (அப்பொழுது புலிகளால் வடபகுதி முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கவில்லை), அங்கும் பல பாதுகாப்புக் கெடுபிடிகள் இருந்தன.

எம்முடன் பிரயாணம் செய்தவர்களில் ஒருவர், எம்மில் யாருக்காவது அங்குள்ள முஸ்லிம் மக்களில் எவருடனாவது தொடர்பு இருந்தால், அவர்மூலம் ஏதாவதொரு பள்ளிவாசலில் தங்கினால் பாதுகாப்பாக இருக்கும் என அபிப்பிராயம் தெரிவித்தார். அந்த ஆலோசனையைத் தொடர்ந்து எமது சாரதி தனக்குத் தெரிந்த முஸ்லிம் நண்பர் ஒருவரது வீட்டிற்கு வாகனத்தைச் செலுத்தினார். அதற்கிடையில் இடையே வழியில் ஒரு தடவை ரோந்துப் பொலிசார் எமது வாகனத்தை நிறுத்திச் சோதனை செய்தும்விட்டார்கள்.

நாம் அந்த முஸ்லீம் நண்பரைச் சந்தித்து ஆலோசனை கேட்டபோது, புத்தளம் நகர் கூட அப்பொழுது அவ்வளவு பாதுகாப்பான இடமானது அல்ல என்றும், பாதுகாப்பான ஒரே வழி, செலவைப் பார்க்காமல் அங்குள்ள அரசாங்க வாடிவீட்டில் (State Rest House) தங்குவது நல்லது என்றும் ஆலோசனை கூறினார். நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

ஏனெனில் வாடி வீட்டில் தங்குவது என்பது அந்தக் காலத்தில் பணம் படைத்தவர்களினதும், அரசாங்க உயர் அதிகாரிகளினதும் பிதுரார்ஜிதமாக இருந்தது. சாமானியர்களான எமது பொருளாதார நிலைக்கு ஏற்புடையதல்ல என்பதே எமது தயக்கத்துக்குக் காரணம்.

ஆனால் எமது கனடிய வாலிப நண்பர் எமக்கெல்லாம் தைரியமூட்டி, தானே வாடி வீட்டுச்செலவை ஏற்பதாகவும், அங்கே அன்றைய இரவைக் கழிப்போம் எனவும் தெம்பூட்டி எம்மை அங்கே அழைத்துச் சென்றார். அங்கு எமக்கு அதிர்ஷ்டவசமாக இடமும் கிடைத்தது. முதலில் கண்ளப்புத் தீர எல்லோரும் குளித்தோம். அதன்பின்னர் ஓடர் கொடுத்த மது வந்தது. அதன்பின்னர் சுவைக்குப் பெயர்போன புத்தளம் இறால் குழம்புடன் சுவையான இரவு உணவு உண்டோம்.

நாம் அங்கு தங்கியிருந்த போது, அங்கு இரவு உணவுக்காக சில இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள் வந்து சேர்ந்தனர். அவர்களும் உணவுக்கு முன்னர் சிறிது மது அருந்தினர். சிறிது நேரத்தில் அவர்கள் எமது மேசைக்கு வந்து எம்மைப்பற்றி விசாரித்துக் கொண்டு எம்முடன் அளவளாவிப் பழகினர். அவர்களும் நாங்களும் மனம்விட்டுப் பேசி மகிழ்ந்தோம். இந்த நிகழ்வுகள் எல்லாம் எம்மில் பலருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஏனெனில், வெளியே இந்த படை அதிகாரிகள் எம்மைக் கண்டால் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை, எம்மில் பலர் அனுபவரீதியாக அறிந்திருக்கிறோம். இதைத்தான் “இருக்குமிடத்தில் இருந்துகொண்டால், எல்லாம் சௌக்கியமே” என ஒரு பாடல் வரியை கவிஞர் கண்ணதாசன் இயற்றினாரோ என்னவோ? அன்றிரவு நிம்மதியாகத் தூங்கினோம்.

அடுத்த நாள் காலை கொழும்பை நோக்கிப் பயணமானோம். எமது முதல் பயண முயற்சி தோல்வியில் முடிந்தது கவலையே என்ற போதிலும், இந்த அக்கினிப் பரீட்சையில் பங்குபற்றிய ஒரு திருப்தியும் ஏற்படாமல் இல்லை. திரும்பவும் இந்தியா சென்று யாழ்ப்பாணம் செல்லும் எனது திட்டத்தை தூசிதட்டி கைகளில் எடுத்தேன். அதுவரை எனது நண்பனின் பொஸ்வல்பிளேஸ் வீட்டில் தங்குவதற்காக அவனது வீட்டை நோக்கி எனது பயணப்பையைத் தூக்கிக்கொண்டு சலிப்புடன் நடந்தேன்.

யக்காவ இராணுவ முகாம் வரை சென்ற எமது இரண்டாவது பயணம்!

நாம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண முயற்சியை ஆரம்பித்த நேரம் இராணுவத்திடமிருந்து யாழ் கோட்டையைக் கைப்பற்றும் புலிகளின் முயற்சியும், புலிகளிடமிருந்து வவுனியா நகரைக் கைப்பற்றும் இராணுவத்தின் நடவடிக்கைகளும் உச்சக்கட்டத்தை அடைந்து இருந்தன. அதனால் கொழும்புக்கு பல்வேறு அலுவல்கள் நிமித்தம் சென்று திரும்ப முடியாது சிக்கியிருந்த வட பகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் தமது உறவுகள் சம்பந்தமாக மிகுந்த கவலைகொண்டிருந்தனர். அதுவே அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கிடையிலும் தமது பிரயாண முயற்சிகளை மேற்கொண்டதற்குக் காரணம்.

எமது முதல் முயற்சி பொருட்செலவுடனும் அலைச்சலுடனும் தோல்வி அடைந்திருந்தாலும், தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருந்தோம். இன்று 30 வருடப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, வடக்கு கிழக்கில் வீதிகள் எல்லாம் நவீன முறையிலும் சிறப்பாகவும் செப்பனிடப்பட்டு, புலிகளால் தனித் தீவுகளாகத் துண்டிக்கப்பட்டிருந்த அந்தப் பகுதிகள் நாட்டின் ஏனைய பகுதிகளுடனும், வெளியுலகத்துடனும் சிறப்பான முறையில் ஒன்றிணைக்கப்பட்டுவிட்டது. நாட்டு மக்கள் விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்துக்கு எந்த நேரத்திலும் சென்று வரக்கூடிய சூழல் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் இருந்துகொண்டு இலங்கையில் சிங்கள இனவாத எதேச்சாதிகார ஆட்சி நடக்கிறது என்று கதைப்பவர்கள் (இவர்களில் பலர் புலி ஆதரவாளர்கள் என்பது சுவாரசியமான விடயம்) கூட, ஆயிரக்கணக்கில் அங்கு சென்று நல்லூர் திருவிழாவையும் கண்டுகளித்து, ஆனைக்கோட்டைப் பனம் கள்ளையும் ஒரு சுவை சுவைத்து, மினிவான் பிடித்து உறவினர்கள் சகிதம் இலங்கை முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வருகிறார்கள். (திரும்பி வந்தபின்னர் பழக்கதோசத்தில் மீண்டும் இலங்கை அரசையும் சிங்களவர்களையும் வசைபாடுவது வேறு விடயம்!)

யுத்தம் முடிவுற்று ஏறத்தாள நான்கு வருடங்களாகின்ற போதிலும்கூட, இன்றைய இளைஞர்கள் பலருக்கும், புலம்பெயர் நாடுகளில் வாய்ப்பு வசதிகளுடனும் பாதுகாப்பாகவும் தமது தமது குடும்பத்தை வைத்துக்கொண்டு, தமிழீழம் அது, இது என்று கூச்சல்போட்டுத் தாய்நாட்டில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களை மீண்டும் யுத்தத்தீயில் தள்ளிவிடத் துடிக்கும் “புலம்பெயர் தமிழர்கள்’ என்ற புதிய தேசிய இனத்துக்கும் அன்று புலிகளால் ஏற்படுத்தப்பட்டு இருந்த ஜனநாயக மறுப்பு, பிரயாணத் தடை, பொருள் தட்டுப்பாடு என்பன தெரிந்து இருக்க வாய்ப்பில்லை.

அதனால் அந்தக் காலகட்டத்தில் வடக்கு, கிழக்கில் புலிகளின் இரும்புச்சப்பாத்தின் கீழ் சிக்கித்தவித்தவர்களின் துன்பியல் வாழ்வைச் சித்தரிப்பது அவசியமாக உள்ளது.

இதற்கு இன்னொரு காரணமும் உள்ளது.

[வதை தொடரும்...]



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



எட்வேர்ட் உடனடியாக எதுவும் சொல்லவில்லை. பேர்க்ஸை ஒருமுறை தீர்க்கமாகப் பார்த்தார். அதன்பிறகு கேட்டார். “உங்களது பார்வை எவ்வளவு துல்லியமானது என்று யோசிக்கிறேன்”

“பார்வையா?”

“ஆம். கண் பார்வை”

“அதற்கென்ன. நன்றாகத்தான் இருக்கிறது. எதற்குக் கேட்கிறீர்கள்”

“உங்கள் கண்பார்வை நன்றாக இல்லையென்றால்தான் நன்றாக இருக்கும். அப்போதுதான் என்னால் உங்களுக்கும் பணம் கொடுக்க முடியும்”

### ரயிலில் ஏறவந்த புலி

ரெயில்வே கார்ட் பேர்க்ஸிடம் “உங்களுடைய கண்பார்வை துல்லியமாக இல்லாவிட்டால்தான், பணம் கொடுக்கமுடியும்” என்று எட்வோர்ட் கூறியதும் அவர் ஆச்சரியப்பட்டார். இவர் பணம்கொடுக்க முன்வருகிறார் என்றால், ஏதோ ஒரு காரியம் தன்னால் ஆகவேண்டும் என்பது ரெயில்வே கார்ட்டுக்குத் தெரிந்திருந்தது.

“காரியம் ஆகவேண்டுமென்றால் அதற்குத் துல்லியமான கண்பார்வை இருப்பதுதானே நல்லது. இவர் என்ன இப்படித் தலைகீழாகச் சொல்கிறார்” என்றரீதியில் போன்து அவரது நினைப்பு.

“நீங்கள் சொல்வது ஒன்றுமே புரியவில்லை”

“நான் பணம் கொடுப்பதாகச் சொல்வது ஒரு வேலைசெய்வதற்காக அல்ல. எதுவுமே செய்யாமல் சும்மா இருப்பதற்கு.”

“அதற்கும் கண்பார்வைக்கும் என்ன சம்பந்தம்”

“ஒரு குறிப்பிட்ட தினத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ட்ரெயினில் உங்களுடைய பெட்டியில் என்ன நடந்தாலும் அதைப் பார்க்காமல் இருக்கவேண்டும். விஷயம் அவ்வளவுதான். நீங்கள் எதையும் பார்க்கவில்லை. உங்களுக்கு எதுவும் தெரியாது. விஷயம் சிம்பிள். காசு கைக்கு வரும்”

“எதையும் பார்க்காமல் இருப்பதற்கு?”

“அதேதான்”

“பணம் எவ்வளவு?”

“இருநூறு பவுண்ட்ஸ்”

ரெயில்வே கார்ட் கிறுகிறுத்துப் போனார். அவரும் அவருடைய மனைவியும் வாரத்துக்கு ஐந்து நாட்கள் வேலைசெய்தால் கிட்டத்தட்ட மூன்றரை வருடங்களுக்குக் கிடைக்கும் ஊதியம், ஒரே நாளில் கிடைக்கிறது. அதுவும், எதுவும் செய்யாமல் சும்மா இருப்பதற்கு.

“இருநூறு பவுண்ட்ஸ் என்றா சொன்னீர்கள்”

“ஆம்.”

பேர்க்ஸ் தனக்கு முன்னால் இருந்த கிளாஸில் இருந்த விஸ்கியை எடுத்து “மளக்” என்று குடித்தார். “நான் தயார்”

“இதோ பத்து பவுண்ட்ஸ் அட்வான்ஸ். மிகுதிப் பணத்தை வேலை நடைபெறுவதற்கு முதல் கொடுப்போம்”

“நான் என்ன செய்யவேண்டும்”

“மிகவும் சிம்பிள். விரைவில் உங்களை ஒருவர் வந்து சந்திப்பார். அவர் உங்களை ஒரு கேள்வி கேட்பார். உங்களுடைய ரெயில்வே யூனிபோர்மை உங்களது மனைவிதான் தைத்துத்தருகிறாரா என்று கேட்பார். அப்படிக்கேட்டால் அவர்தான் ஆள். அவர் என்ன செய்தாலும் கவனிக்காமல் மறுபக்கமாகப் பார்க்கவேண்டியதுதான் வேலை”

“அவ்வளவுதானா”

“அவ்வளவுதான். அவர் போகும்போது, மீதி 190 பவுண்ட்ஸ் பணத்தைக் கொடுத்துவிட்டுப்போவார். நீங்கள் எதையும் பார்க்கவில்லை. உங்கள் ரயில்வே பணிக்கு ஆபத்துமில்லை. வெரி சிம்பிள்”

“கேள்வி கேட்கும் நபர் எப்போது வருவார்”

“விரைவில் வருவார்”

ஈல் ஸ்கின்னர் என்ற சொற்பிரயோகத்தை நீங்கள் அநேகமாக கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். காரணம் அது இப்போது புழக்கத்தில் இல்லை. 150 வருடங்களுக்கு முன் பிரிட்டனில் இருந்த சொற்பிரயோகம் அது.

அதன் அர்த்தம் - ஒருவகையான இரும்பு வேலை செய்பவர். ஒருவகையான என்று சேர்த்துக் கொள்வது எதற்காகவென்றால், ஆசாமி நேர்மையான அலுவல் செய்பவர் அல்ல.

அந்த நாளைய பிரிட்டனில், எல்லோரும் லைசன்ஸ் எடுத்துத் துப்பாக்கி வைத்திருக்க முடியாது. ஆனால் சட்டவிரோதமாகப் பலர் வைத்திருந்தார்கள். துப்பாக்கி வைத்திருப்பவர்களில் பலர் பெரிய மனிதர்களாக இருந்த காரணத்தால் பிரிட்டிஷ் பொலிஸூம் அவர்களைக் கண்டுகொள்வதில்லை.

(கொள்ளை தொடரும்...)




பெரும்பாலும் சரக்கு லொறிகளில் ஏற்றி அனுப்புவார்கள். வாழைத் தார்கள். கோதுமை மூட்டைகளுக்கு அடியில் படுத்துக்கொண்டு துப்பாக்கிகள் தனியே பயணம்செய்து உரியவர்களிடம் வந்துசேரும்.

அதன் பிறகு ஒரு நேரம் குறித்து. சம்பந்தப்பட்ட பொலிஸ் ஸ்டேசனுக்குப் போய் எதிரே பதுங்கி நின்றுகொண்டு சுட ஆரம்பிப்பார்கள். நான்கைந்து காவலர்கள் இறந்ததும் உள்ளே போவார்கள். தேவைப் பட்டால் அங்கும் தாக்குதல் தொடரும். இல்லாவிட்டால் அங்கிருந்து துப்பாக்கி களை எடுத்துக்கொண்டு கிளம்பி வண்டி ஏறிவிடுவார்கள்.

குண்டு வைப்பதென்றாலும் இதே நடைமுறைதான். முதல்நாள் இரவே குறிப்பிட்ட இடத்துக்குப் போய் வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டு. விடிந்ததும் குண்டுவைத்து விட்டு பஸ் பிடித்துவிடுவார்கள். (மனித வெடிகுண்டுகள் புழக்கத்துக்கு வராத காலம் அது)

மறுநாள் செய்தித்தாள்களில் விசயத்தைப் பார்த்து. உறுதி செய்துகொண்ட பிறகு கொஞ்சம்போல் கொண்டாடிவிட்டு. அடுத்த வேலைகளில் ஈடுபடத் தொடங்குவார்கள்.

இஸ்ரேல் இராணுவம். பாதுகாப்புப் படை இரண்டும்தான் பி.எல்.ஓ.-வினரின் பிரதானமான தாக்குதல்களமாக இருந்தது. சிலசமயங்களில் பொதுமக்கள்மீதும் வன்முறை ஏவப்பட்டிருக்கிறது. 1968ஆம் ஆண்டு டிசம்பரில் காஸா பகுதியில் ஒரு பேரூந்தில் வெடித்த குண்டுதான் ஆரம்பம் என்று சொல்லவேண்டும். (23 பேர் பலி)

அடுத்தடுத்து ஒரு நாள் தவறாமல் எங்காவது குண்டு வெடித்துக்கொண்டே தான் இருந்தது.

இஸ்ரேல் என்ன தற்காப்பு நடவடிக்கை மேற்கொண்டாலும் பி.எல்.ஓ.-வினரின் தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாமல் அது ஒரு நிரந்தரத் தலைவலி என்று ஆகிப்போனது.

ஆகவே. இஸ்ரேல் அரசு பி.எல்.ஓ-வை. ஒரு தீவிரவாத அமைப்பு என்று அறிவித்தது. அதுவரை ஒரு விடுதலை இயக்கமாக மட்டுமே அறியப்பட்டு வந்த பி.எல்.ஓ. அமெரிக்க மீடியாவின் உதவியுடன் பயங்கரவாத அமைப்பாக. தீவிரவாதிகளை உற்பத்திசெய்யும் ஒரு ராட்சஸத் தொழிற்சாலையாகச் சித்தரிக்கப்பட்டது.

இஸ்ரேலும் தன் பங்குக்கு பி.எல்.ஓ. செய்ததுடன் நிறைய புனைவுகள் சேர்த்து உலகெங்கும் அனுதாபம் தேடத் தொடங்கியது.

பி.எல்.ஓ ஒருபோதும் தனது தீவிர வாத நடவடிக்கைகளை அக்காலத்தில் நியாயப்படுத்தியதில்லை. வேறு வழி யில்லாமல் ஆயுதம் தூக்கி இருக்கிறோம். உங்களால் அமைதி வழியில் பலஸ்தீனை மீட்டுத்தர முடியுமானால் செய்யுங்கள் என்றுதான் பி.எல்.ஓ சொன்னது.

அமைதிக்கான எந்த சாத்தியத்தையும் அப்போது இஸ்ரேல்விட்டு வைக்காத காரணத்தால் ஆயுதம்தான் தீர்வு என்று அனைவராலுமே நம்பப்பட்டது.

ஆனால் பி.எல்.ஓ.-வின் நடவடிக்கை களை இஸ்ரேல் அரசு மிகைப்படுத்தி மீடியாவுக்கு தருகிறது என்று எடுத்துச் சொல்ல பி.எல்.ஓ.-வில் யாருக்கும் தெரியவில்லை. பிரசாரம் ஒரு வலுவான சாதனம். எதையும் திரும்பத்திரும்பச் சொல்வதன்மூலம் மக்கள் மனதில் ஆழமாகப் பதியவைத்துவிட முடியும்.

ஆகவே. இஸ்ரேலின் திட்டமிட்ட பிரசார உத்தி பி.எல்.ஓ வுக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது. நான்கு பேர் பலியானார்கள் என்பதை நானூறு பேர் பலி என்றுசொன்னால் அதை இல்லை என்று மறுக்கவேண்டுமல்லவா?





அப்படி மறுத்து. மறு அறிக்கைவிட பி.எல்.ஓ-வில் அன்று யாருக்கும் தெரிய வில்லை. அப்படியே அவர்கள் எடுத்துச் சொன்னாலும் வெளியிடுவதற்கான ஊடக ஒத்துழைப்புகள் இல்லாமல் இஸ்ரேல் பார்த்துக்கொண்டது.

இது மிகப்பெரிய பிரச்சினை இருந்தது. போராட்டம் ஒழுங்காக நடந்தால் போதாது. நிர்வாகமும் சிறப்பாக இயங்கவேண்டும் என்று முதல் முதலில் அப்போது உணரப் பட்டது. ஒரு சரியான. திறமைமிக்க. அனுபவம் வாய்ந்த தலைவருக்காக பி.எல்.ஓ. ஏங்கியது.

1969ஆம் ஆண்டு. பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி அந்தப் பொறுப்புக்கு யசீர் அரபாத் வந்தார்.

1964இல் தொடங்கப்பட்ட பி.எல்.ஓ. வுக்கு 69இல் தான் யசீர் அரபாத் தலை வராக வருகிறார். இடைப்பட்ட காலத்தில் ஒரு மிக முக்கியமான பிரச்சினையை அரபு உலகம் சந்திக்க வேண்டியிருந்தது.

ஆறு நாள் யுத்தம் என்று சரித்திரம் வருணிக்கும் இந்தப் போர் 1967ஆம் ஆண்டு ஜூன் மாதம் இஸ்ரேலுக்கும். எகிப்து - சிரியா - ஜோர்டன் ஆகிய தேசங்களுக்கும் இடையே நடைபெற்றது. யாருமே எதிர்பார்க்காத. சற்றும் முன்னறிவிப்பு பில்லாத. திடீரென்று தொடங்கப்பட்ட இந்த யுத்தத்தின் சூத்திரதாரி. இஸ்ரேல்.

(தொடரும்...)

# காதல் ஊழல்

19



பொன்னம்மா மகன் விடுதலையிடம் விபரம்கூறி புஸ்பாவிடம் தொடர்புகொள்ளும் நேரத்தையும் கூறினாள். குறிப்பிட்ட நேரம் மறு நாள் இரவு எட்டு மணி!

ஆனால். மறுநாள் விடியும்வரை தூக்கத்தை இழந்தான் விடுதலை.

உண்மையில் மனிதனுக்கு எதிர்பார்ப்பு வந்துவிட்டால் அல்லது எதையாவது சாதிக்க நினைத்தால் தூக்கம் என்பது தொலைவில் தான் நிற்கும். எதிர்பார்ப்பின் எதிர்வு மட்டும் இதயத்தில் துடிக்கும். அன்று விடுதலையின் இரவும் அப்படித்தான் அவனை ஆட்டிப்படைத்தது!

ஏதோ ஒரு பெரும் சங்கடத்தோடு மறுநாள் விடிந்து மாலைப் பொழுதையும் அடைந்தது.

எட்டு மணிக்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் எஞ்சியுள்ள நிலையில் அருகிலிருக்கும் கடைக்குப்போய் மீள்நிரப்பும் நூறு ரூபா அட்டைகள் மூன்றையும் வாங்கிக்கொண்டான்.

எட்டு மணிக்கு இன்னும் சில விநாடிகள்தான் உள்ளன!

ஆனால் அவனுக்கு பல மணித்தியாலங்கள் இருப்பது போல்தான் நேரம் நகர்ந்தது. புஸ்பாவிற்கு எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் நாட்கள் நகர்ந்தன.

அன்று எட்டு மணியாகியும் புஸ்பா தொலைபேசியை வழமை போலவே வைத்திருந்தாள். தொடர்ச்சியாக அழைப்புக்கள் வருவதை சமிக்ஞை ஒலிகாட்டிய வண்ணம் இருந்தது. அதன்பிறகுதான் இன்று விஷேட அழைப்புவரும் என்பதை உணர்ந்தவள். உடனடியாக உள் வரும் அழைப்புகள் வரக்கூடிய மாதிரி வழியமைத்தாள்.

அடுத்த நிமிடமே அழைப்புவந்தது. புஸ்பா எதிர்பார்த்திருந்த பெணணின் குரல் வராமல்... ஆணின் குரல்... "ஹலோ புஸ்பாவா " என்று ஒலித்தது. "ஓம் நான் புஸ்பாதான் நீங்கள்..."

"நான் விடுதலை கதைக்கிறேன்"

"சொல்லுங்க அண்ணே... சுகமாக இருக்கிறீங்களா" என்று புஸ்பா நலம் விசாரித்தாள். ஆனால் அவளின் உள்மனதில் உலகம் உள்ளங்கையில் கிடைத்த சந்தோசம். நாம் மானசீகமாக நேசிக்கும் ஒருவர் தானாகவே நம்மை தொடர்புகொண்டால் அல்லது உரையாடக் கிடைத்தால் உள்ளம் எந்தளவுக்கு துள்ளுமோ...?

அதையும் தாண்டி மனம் பெருமிதம் அடைந்தது. ஆனால் அவள்



காதல் கொள்ளவில்லை!

அதற்கும் அப்பால் விடுதலையின்மேல் ஒரு மரியாதை இருந்தது. அதை இன்னும் விபரிக்கவேண்டுமானால் தாய்மேல் சேய்யின் பாசம் போலவே! அன்று ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக உரை யாடியபோதும் விடுதலை எதற்காக தொடர்பு எடுத்தானோ அதை அம்பலப்படுத்தாமலேயே தொடர்பை முடித்துக்கொண்டான்!

அதன்பிறகு அடிக்கடி இருவரும் தொலைபேசியில் தொடர்பை வைத்துக்கொண்டனர்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. புஸ்பா ஓய்வில் இருந்தாள். இரவு எட்டு மணியளவில் விடுதலையின் தொலைபேசி அழைப்பு வந்தது. வழமைபோல் உரையாடிக்கொண்டிருக்கையில் விடுதலை கூறினான்.

"புஸ்பா நான் கேட்பேன் உங்களால் அதை தர முடியுமா?"

"கேளுங்க அண்ணே முடிந்தால் நிச்சயமாக தருவேன்..." என்று புஸ்பா வார்த்தையை வீசினாலும் மனசில் நினைத்துக் கொண்டிருந்தாள். ஏதாவது பண உதவியைத்தான் விடுதலை கேட்கக்கூடுமென்று! அவளுடைய எண்ணங்களை மின்னல் வேகத்தில் உடைத்தெறிந்து எதை கனவிலும் நினைக்காமல் இருந்தாளோ அதையே அவன் குரல் ஒலித்தது.

"புஸ்பா உங்களை மனதார நேசிக்கிறேன்" என்று கூறி முடிப்பதற்குள் தொடர்பை துண்டித்துவிட்டாள்.

மிஹிந்தலை A.பாரிஸ்

(ஊழல் தொடரும்...)




வே. அர்ச்சுனன்

**ஆனால், தமிழ் மக்களுக்குள் அரசியல் தீர்வு குறித்த நம்பிக்கைகள் அற்றுப்போகத் தொடங்கின. புலிகளின் பெருமளவு பிரசாரங்கள் ஊடாக அரசாங்கமே பேச்சு வார்த்தையைத் தொடர ஆர்வமில்லாது இருப்பதாக காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டது. இடைக்கால சபை என்கின்ற மாயமான் தமிழ் மக்களின் மீது அவநம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பியது. இடைக்கால சபை தொடர்பான விவாதம் சூடுபிடித்திருந்த போது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி இந்த விடயம் தொடர்பான தமது தெளிவான கருத்தினை முன்வைத்தது. இடைக்கால சபை யோசனை என்பது தமிழரின் தேசிய இனப்பிரச்சனைத் தீர்வின் இறுதி அம்சங்களுடன் தொடர்புபட்டதாக இருக்கவேண்டும் என்பதுடன் அது பன்முக ஜனநாயகத் தன்மையைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும் என வலியுறுத்தியது.**

# யாழில் இருந்து 18 முள்ளிவாய்க்கால் வரை

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான கோரிக்கை தொடர்பில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் இராஜதந்திர ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை தொடர்பில் இலங்கையுடன் இராஜிய மட்டத்தில் கலந்துரையாடல்களை மிகவும் இரகசியமாக நடத்தி வந்தனர். இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை ஒரு நிபந்தனையாகவே பார்க்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளதாக இலங்கை அரச உயர்மட்ட தலைவர்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் வலியுறுத்தி வந்தார்கள்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பக்க நிலைப்பாடுகளை யும் தங்களது இந்த கோரிக்கை நியாயப்பாடுகளையும் தங்களது வெளிநாடுகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளைகள் ஊடாக புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள மக்களுக்கு விளக்கிவந்ததுடன் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் ஊடாக அந்தந்த தூதுவராலயங்களுக்கும் தங்களது நிலைமைகளை விளக்கியிருந்தனர்.

இதேவேளை இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அலகுகள், அதன் வேலைத்திட்டங்கள் அதனை முன்னெடுக்கும் வழிமுறைகள், அதற்கு அரசாங்கம் எந்த வகையில் ஒத்துழைக்கவேண்டும்? மேற்குலக நாடுகள் இந்தப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு என்னென்ன வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பன போன்ற தங்களது கருத்துப் பரிமாற்றங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்தபோதிலும் அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபையை முற்றுமுழுதாக நிராகரிக்கத் தலைப்பட்டது.

அதாவது, இடைக்கால நிர்வாக சபையென்பது உடனடியாக அவசியம் இல்லை என்றும் பேச்சுக்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து அது தொர்டர்பில் பரிசீலிக்கலாம் என்றும் இலங்கை திட்டவட்டமாக கூறியுள்ளது. இருந்தபோதிலும் இடைக்கால சபை தொடர்பான விவாதம் தேசிய அளவில் தீவிரம் பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இது ஒரு வாய்ப்பாகி போனது. இடைக்கால சபையின் பெயரால் அரசியல் பேச்சு வார்த்தையைத் தள்ளிப்போட தாம் எடுத்த முடிவு தமக்கு இராஜதந்திர ரீதியாக வெற்றியைத் தந்திருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கணக்குப் போட்டார்.

ஆனால், தமிழ் மக்களுக்குள் அரசியல் தீர்வு குறித்த நம்பிக்கைகள் அற்றுப்போகத் தொடங்கின. தமிழீழ விடுதலைப் புலிகளின் பெருமளவு பிரசாரங்கள் ஊடாக அரசாங்கமே பேச்சு வார்த்தையைத் தொடர ஆர்வமில்லாது



இருப்பதாக காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டது. இடைக்கால சபை என்கின்ற மாயமான் தமிழ் மக்களின் மீது அவநம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பியது. இடைக்கால சபை தொடர்பான விவாதம் சூடுபிடித்திருந்த போது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி இந்த விடயம் தொடர்பான தமது தெளிவான கருத்தினை முன்வைத்தது.

இடைக்கால சபை யோசனை என்பது தமிழரின் தேசிய இனப்பிரச்சனைத் தீர்வின் இறுதி அம்சங்களுடன் தொடர்புபட்டதாக இருக்கவேண்டும் என்பதுடன் அது பன்முக ஜனநாயகத் தன்மையைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும் என வலியுறுத்தியது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளோ இறுதித் தீர்வுக்கும் இடைக்கால சபைக்கும் சம்பந்தமே இல்லை என்றும் இறுதித் தீர்வினைப் பற்றிபேசும் சந்தர்ப்பம் இதுவல்ல என்றும் தம்மிடமே வடக்கு, கிழக்கின் ஏகபோக அதிகாரம் கையளிக்கப்படவேண்டும் என்றும் ஒற்றைக்காலில் நின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் மக்கள் நலன்களுக்கு உகந்ததா என்ற கேள்வியெழும் அதே வேளை தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். தமிழ் மக்கள் இடைக்கால சபைக்கான நீண்டகால துயரினை அனுபவிக்கவில்லை. நீடித்தும் நிலையானதுமான தீர்விற்கே அரசியல் பேச்சுவார்த்தை மேசை பயன்படுத்தப் படவேண்டும்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளோ தமது இயக்கத்தின் அதிகாரத்தை எப்படியாவது வலுப்படுத்திவிட வேண்டும். அதற்கு சட்ட அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தனர். இலங்கை அரசாங்கத்துடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் இதுவரையிலான ஒவ்வொரு காலகட்டப் பேச்சுவார்த்தையையும் நாம் எடுத்துப் பார்ப்போமேயானால் தமிழ் மக்களின் நலன்கள் எந்த அளவுக்கு பின்தள்ளப்பட்டு வந்திருக்கின்றன என்பது புரியும். சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்ட பெப்ரவரி 2012 பேச்சுவார்த்தையும் இந்த வழியில்தான் இடைநிறுத்தப்பட்டது.

சமாதானத்தின் வாசற்கதவினை அடையாமல் முரண்பாடுகளின் மொத்த வடிவமாக பேச்சுவார்த்தை மேசை குழப்பப்பட்டதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகபோக அதிகார நிலைப்பாடுதான் பிரதான காரணமாக அமைந்தது என அரசுத் தரப்பினர் தமது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசுமீது தமிழ் மக்களின் நலன்களை அரசு பின்தள்ளுகிறது என்று பல குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து இருதரப்பும் இந்த இடைக்கால நிர்வாகசபை விவகாரம் தொடர்பில் முட்டிமோதி பேச்சுவார்த்தை வாசற்கதவுகளை முழுமையாக அடைக்கின்ற அளவுக்கு நிலைமையைக் கொண்டு சென்ற இந்த நிலையில் இருதரப்பையும் மீண்டும் மேசையில் ஒன்றாக கைகுலுக்க வைப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளை ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் கூட்டாக மேற்கொண்ட போதிலும் இம்முயற்சிகள் எந்தளவு தூரம் வெற்றி அடைந்தது இம்முயற்சி இடைக்கால நிர்வாக சபையை உருவாக்க உதவியதா அல்லது முள்ளிவாய்க்கால் வரை தமிழீழ விடுதலைப் புலிகளை இழுத்துச் சென்றதா என்று தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# கடாபி இல்லாத லிபியா

■ தொகுப்பு: வேணு கிருஸ்ணா

2011 லிபிய எழுச்சி அல்லது 2011 லிபிய உள்நாட்டுப் போர் என்பது லிபியா நாட்டில் அந்த நாட்டின் 40 ஆண்டுகளுக்கு மேலான சர்வதிகார ஆட்சியாளரான கடாபியை எதிர்த்து நடத்தப்பட்ட எழுச்சி. தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டங்களாக பெப்ரவரி 2011 நடுவில் தொடங்கிய இந்த எழுச்சி பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறி உள்நாட்டுப் போர் மூண்டது. கடாபிக்கு எதிரான தேசிய இடைக்காலப் பேரவையின் படைகள் கடாபியின் படைகளை நேட்டோ படைகளின் துணையுடன் தோற்கடித்து லிபியா முழுவதையும் கைப்பற்றியது. ஒக்டோபர் 2011 இல் கடாபி எதிர்ப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டு கொலைசெய்யப்பட்டதுடன் லிபிய எழுச்சி முடிவடைந்ததாகக் கருதப்படுகிறது.

லிபியாவின் படைத்துறை ஒரு பக்கத்தினர் எழுச்சியாளர்களுக்கு ஆதரவு தந்தது. எனினும் படைத்துறையைவிட பலம் பெற்றவர்களான கடாபியின் பாதுகாவலர் படைத்தலைநகரை காவல் காத்து கடாபிக்கு சார்பான வன்முறையில் ஈடுபட்டனர். மார்ச் தொடக்கத்தில் மேற்குநாடுகள் கடாபியை கடுமையாக கண்டித்து, அவரை பதவி விலகுமாறு கேட்டுக்கொண்டனர். அவரது நிதிகளை முடக்கினர். பல்வேறு பொருளாதார படைத்துறை தடைகளை விதித்தனர். யு.எஸ்.ஏ, யு.கே ஆகிய நாடுகள் தாம் படைத்துறை முறையாகவும் தலையிடலாம் என்று எச்சரித்தனர். ஐ.நா கடாபியைக் கண்டித்தது. உக்கிரமடைந்த போரைத் தொடர்ந்து ஐ.நா பாதுகாப்புச் அவை லிபியாவின் கடாபி அரசுக்கு எதிராக மார்ச் 18, 2011இல் வான் தடை விதித்தது. மேலும் தேவைப்பட்ட படை நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் ஐ.நா பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகள் அறிவித்தன. தலைநகர் திரிபோலியும், ஒக்டோபர் 2011இல் கடாபியின் கட்டுப்பாட்டில் இருந்த கடைசி நகரான சிர்டே கைப்பற்றப்பட்டு கடாபி கொல்லப்பட்டார்.

**கடாபியின் ஆட்சியைக் கவிழ்த்த புரட்சியாளர்கள், அங்கே இதுவரை என்னென்ன புரட்சிகளை செய்துள்ளனர்?**

கறுப்பின மக்களை இனச்சுத்திகரிப்பு செய்துள்ளார்கள். கறுப்பினப் பெண்களை தடுப்பு முகாம்களுக்குள் அடைத்து வைத்து, பாலியல் அடிமைகளாக நடத்தியுள்ளனர். பலதார மணச் சட்டத்தை அமுல்படுத்தி பெண்ரிமைக்கு சமாதி கட்டியுள்ளனர். புரட்சிப் படையினால் விடுதலை செய்யப்பட்ட புதிய லிபியாவில், இன்னும் பல அதிர்ச்சிகள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

**"எனது மரணத்தைவிட, லிபியாவின் எதிர்காலம் குறித்துத்தான் அதிகம் கவலைப்படுகிறேன்." - கடாபி**

இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் கூறியது. கடாபியின் பாதுகாப்பு அதிகாரி மன்சூர், அல் அராபியா தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் இருந்து லிபியாவில் யுத்தம் காரணமாக பெருமளவு மக்கள் கொல்லப்பட்டதை யிட்டு கடாபி வருத்தமடைந்திருந்தார், என்றும் மன்சூர் தெரிவித்தார்.

**கடாபியின் மரணத்திற்குப் பிறகு லிபியா எப்படி இருக்கின்றது?**

அநேகமாக, ஊடகங்கள் லிபியா குறித்து செய்தி அறிவிப்பதை இனிமேல் நிறுத்திவிடலாம். லிபியர்கள் எந்தவிதக் குறையுமற்று, சுதந்திரமாக, சுபீட்சத்துடன் வாழ்வதாக நாமும் நினைத்துக்கொள்ளலாம். ஆனால், பிரச்சினைகள் பூதாகரமாக வெளிக்கிளம்பின. அரபு மொழிபேசும் வடஆபிரிக்க நாடுகளில் லிபியா மிகக் குறைந்தளவு சனத்தொகையைக் கொண்டுள்ளது.

இருப்பினும், 140 இனக்குழுக்களைக் கொண்ட சமுதாயத்தில் ஒற்றுமையைக் கட்டுவது சுலபமான காரியமல்ல. 40-க்கும் குறையாத கிளர்ச்சிக் குழுக்கள், கடாபிக்கு எதிராகப்போரிட்டன. இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள், முன்னை நாள் அரச படையினர், இனக்குழுக்களை பாதுகாக்கும் ஆயுததாரிகள் என்று பலதரப்பட்டவர்கள். கடாபியின் கொடுங்கோல் ஆட்சிமீதான வெறுப்பு மட்டும் இவர்களை போராடத் தூண்டவில்லை. தாராளமயப் படுத்தப்பட்ட "கடாபியின் இஸ்லாத்தை" கடும்போக்காளர்கள் அங்கீகரிக்கவில்லை. அதேபோல, கடாபியின் "ஆபிரிக்க சகோதரத்துவம்" இனவெறியர்களின் கண்களை உறுத்திக்கொண்டிருந்தது.

கறுப்பின ஆபிரிக்கர்களையும் சகோதரர்களாக மதித்து, 'ஆபிரிக்க ஒன்றியம்' உருவாக்கப் பாடுபட்ட கடாபியின் கொள்கைக்கு நேர் எதிரானவர்கள், இந்தப் புரட்சிப் படையினர். லிபியாவிற்கு தெற்கில் உள்ள ஆபிரிக்க நாடுகளில் மட்டும் கறுப்பினத்தவர்கள் வாழவில்லை. "லிபியாவின் எல்லைகளுக்குள் வாழும் கறுப்பின பிரஜைகள் குறித்து," இனி உலகம் கேள்விப்படப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் யாவரும் புரட்சிப் படையினரால் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டுவிட்டனர்.

'லிபியப் புரட்சி' ஆரம்பமாகிய



அன்றிலிருந்து, லிபியாவில் சட்டம், ஒழுங்கு குலைந்துவிட்டது. யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அராஜக சூழல் நிலவியது. புரட்சிப் படையினர் கடாபியின் விசுவாசிகளை மட்டும் வேட்டையாடவில்லை. கருநிற மேனியைக் கொண்ட மக்களையும் நர வேட்டையாடினார்கள். போர் ஆரம்பமாகியவுடன், அயல்நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம்புகுந்தவர்களில் பெரும்பான்மையானோர் கறுப்பினத்தவர்கள். போர் ஓய்ந்த பின்னர், அங்கு நடந்த அக்கிரமங்கள் மெல்ல மெல்ல வெளிவருகின்றன. புரட்சிப் படையினரின் முகாம்களை துப்புரவுபடுத்தவும், கடினமான பணிகளை செய்யவும் கறுப்பின ஆண்கள் அடிமைகளாக வேலை வாங்கப்பட்டுள்ளனர். போரிட்டுக் களைத்த புரட்சிக்காரர்களின் பாலியல் இச்சையை தீர்த்துக் கொள்வதற்கு கறுப்பினப் பெண்கள் பயன்பட்டுள்ளனர்.

பிரத்தியேக அகதி முகாம்களில் தனியாக பெண்களை அடைத்து வைத்திருந்துள்ளனர். அகதி முகாமை, இலவச விபச்சார விடுதியாக மாற்றிய சாதனை, புரட்சி அல்லாமல் வேறென்ன? கடாபியின் ஆட்சிக் காலத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைசெய்த கமேரூன் நாட்டை சேர்ந்த பெண் ஒருவர் தெரிவித்தார். "அப்போதெல்லாம் வேலை செய்யும் இடங்களில், சில எஜமானர்கள் அடிப்பார்கள். சிலர் சம்பளம் கொடுக்கமாட்டார்கள். ஆனால், இன்றுள்ள நிலைமை மிக மோசமானது. எல்லா லிபியர்களும் நிறவெறியர்களாக காணப்படுகின்றனர். ஆபிரிக்கர்கள் எல்லோரும் லிபியாவை விட்டு வெளியேறிவிட்டனர்."

தவேர்கா நகரில் வாழ்ந்த மக்கள், 'கறுப்பு லிபியர்கள்' என்பது குறிப்பிடத் தக்கது. லிபிய பிரஜைகளான இவர்கள், சஹாரா பாலைவனவாசிகளான துவாரேக் இனத்தை சேர்ந்தவர்கள். இவர்களது மூதாதையர், நாடோடிகளாக வாழ்ந்தவர்கள். சஹாரா பாலைவனத்தின் வணிகப் போக்குவரத்து, அவர்களது பரம்பரைத் தொழில். கடாபியின் ஆட்சிக் காலத்தில், அந்த இனத்தவருக்கென ஒரு சிறப்புப் படையணி உருவாக்கப்பட்டது. இரு தசாப்தங்களுக்கு முன்னர், சாட் நாட்டுடன் எல்லைத் தகராறு காரணமாகப் போர் மூண்டது. தென் எல்லையில், ஒரு கறுப்பு ஆபிரிக்க நாட்டுடனான மோதலின்போது, துவாரக் சிறப்பு படையணியினர் ஈடுபடுத்தப் பட்டனர். இறுதியாக நடந்த, உள்நாட்டுப் போரில், கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு, கடாபியின் விசுவாசத்திற்குரிய துவாரக் படைகள் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக, மிஸ்ராதா யுத்தத்தில் அவர்களின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்துள்ளது.

தவேர்கா நகரத்தை சேர்ந்த கறுப்பினப் படையினரின் செயலுக்கு பழிவாங்குவதற்காகவே, அந்த நகர மக்களை வெளியேற்றியதாக புரட்சிப் படையினர் தெரிவிக்கின்றனர்.

சுமார் இருபதாயிரம் தவேர்காவாசிகள், திரிபோலியில் உள்ள அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்தது. இறுதி யுத்தம் நடந்த சியேர்ட் நகரில், மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கடாபிக்கு விசுவாசமானவர்கள், சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பதாக, மனித உரிமை நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அதுபோல, தவேர்கா நகரில் வாழ்ந்த, 20000 கறுப்பின மக்களும் எங்காவது கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம்.

லிபியாவின் புதிய ஆட்சியாளர்கள் புரிந்துள்ள போர்க்குற்றங்கள் பற்றிய விபரங்கள், மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருக்கின்றன. கடாபியும், அவரது மகன் முத்தாசினும் உயிருடன் பிடிபட்டு, பின்னர் கொலைசெய்யப்பட்ட விடயம், வீடியோ காட்சிகளாக உலகெங்கும் வலம் வந்தன. இது குறித்தும், நூற்றுக்கணக்கான கடாபி விசுவாசிகளின் படுகொலை குறித்தும் விசாரணை தேவை என்று, மனித உரிமை ஸ்தாபனங்கள் அழுத்தம் கொடுக்கின்றன. மேற்குலகம் அவற்றை எல்லாம் கண்டும் காணாததுபோல நடந்து கொள்கின்றது. புதிய அரசானது, இஸ்லாமிய மத அடிப்படைவாத போக்கில் சென்றதையும், யாரும் பெரிதுபடுத்தவில்லை.

புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்கி வந்த லிபிய இஸ்லாமிய போராட்டக் குழு, கடாபிக்கு எதிரான கிளர்ச்சியில் முன்னணிப் பங்குவகித்துள்ளது. இஸ்லாமிய மத அடிப்படைவாத கொள்கை கொண்ட, அல்கொய்தாவுடன் இணைந்து போராடிய, அந்த அமைப்பின் முக்கிய தலைவர் தாய்லாந்தில் பிடிபட்டார். பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின்கீழ், அமெரிக்கர்களால் கடத்தப்பட்டு, சி.ஐ.ஏ. யினால் இரகசியமாக சித்திரவதை செய்யப்பட்டார். பின்னர், சி.ஐ.ஏ. தனது கைதியை கடாபியின் கையில் ஒப்படைத்தது. அந்த சர்வதேச பயங்கரவாதி வேறு யாருமல்ல, கடாபிக்கு எதிரான புரட்சிப் படையின் தலைமைத தளபதி பெல்ஹாஜ்! மேற்குறிப்பிட்ட விபரங்கள் அடங்கிய ஆவணங்கள், கைவிடப்பட்ட பிரிட்டிஷ் தூதரகத்தில் கண்டெடுக்கப் பட்டன. அந்த ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு, வழக்குத் தொடுக்கப்போவதாக, பெல்ஹாஜ் சூளுரைத்துள்ளார். லிபியாவின் புரட்சியாளர்களுக்கும், மேற்குலகுக்கும் இடையிலான தேனிலவு விரைவில் முறிந்தது. லிபியாவில் எழும் நெருக்கடிகள், மிக மோசமாக உள்ளன.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாக கூறிக்கொண்டு அமெரிக்கா தமது மூக்குகளையும், ஆயுதங்களையும் நுழைத்த லிபியா அராஜகத்திலும், வன்முறையிலும் மூழ்கிக்கொண்டிருப்பது குறித்து மீசையில் மண் ஒட்டவில்லை என்று சாதிக்கிறது.

லிபியாவின் தலைநகர் திரிபோலியில் உள்ள அமெரிக்க தூதரக வளாகத்தை லிபியா டான் (லிபிய விடியல்) என்ற இஸ்லாமிய குழுக்களின் படைகள் சில மாதங்களுக்கு முன் கைப்பற்றியிருக்கின்றன.

லிபியாவில், மிசுராத்தா என்ற கடலோர நகரத்தைச் சேர்ந்த இஸ்லாமிய போராளிகளைக் கொண்ட லிபிய விடியல் குழுவிற்கும், ஓடிப்போன ஜெனரல் காலிபா ஹிப்டருடன் சேர்ந்திருக்கும் கிழக்குப் பகுதி மற்றும் மேற்கத்திய மலைநகரமான சிந்தானைச் சேர்ந்த போராளிகள், கடாபியின் முன்னாள் வீரர்கள் ஆகியோருக்கும் இடையேயான உள்நாட்டுப் போர் தீவிரமடைந்திருக்கிறது.

முன்னதாக, 2012ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ம் திகதி லிபியாவின் இரண்டாவது பெரிய நகரமான பெங்காசியில் அமெரிக்கத் தளம் ஒன்றில் நடந்த தாக்குதலில் அமெரிக்க தூதர் கிறிஸ்டோபர் ஸ்டீவன்ஸ், கடற்படை அதிரடி வீரர்கள் டைரோன் வுட்ஸ், கிளென் டோரத்தி, வெளியுறவுத் துறை தகவல் தொடர்பு அதிகாரி சோன் ஸ்மித் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இப்போது,, லிபிய விடியல் குழு திரிபோலி விமான நிலையத்தை கைப்பற்றியிருக்கிறது. லிபியாவின் இரண்டாவது பெரிய நகரமான பெங்காசியில் ஜெனரல் காலிபா ஹிப்டரின் படைகளுக்கு எதிராக லிபிய விடியல் குழுவினர் வெற்றி பெற்று வருகின்றனர்.

இறுதியில் கடாபியின் தலைக்கு விலை வைத்த நேட்டோ நாடுகள் அவரை பிடித்து கொடூரமாக கொன்றொழித்த இசுலாமிய பயங்கரவாத படைகளை லிபியாவை விடுவிக்க வந்த ஜனநாயக சக்திகள் என்று போற்றினர்.

முழுமையாக பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு சரணடையவில்லை என்பது அமெரிக்காவின் பிரச்சினை. அமெரிக்கா கொண்டு வருவதாகச் சொன்ன ஜனநாயகமும் சுதந்திரமும் அந்த மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்களுக்கானவைதான். கடாபியின் ஆட்சியின்கீழ் லிபிய தேசிய எண்ணெய் கழகத்திடம் உரிமம் பெற்று தொழில் செய்யவேண்டிய அவர்களது அடிமை நிலையை ஒழித்து, லிபியாவின் எண்ணெயை எடுத்து விற்பதற்கான உரிமையை ஈட்டிக்கொடுப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது ஆதாரங்களின் மூலம் அம்பலமானது.

ஈராக்கில், "சாதித்து விட்டோம்" என்று இளைய புஷ் அறிவித்தது போன்று லிபியாவில் கடாபி வீழ்ந்தவுடன், "நாம் அனைவரும் சேர்ந்து வெற்றியை சாதித்திருக்கிறோம்" என்று அறிவித்தார் நேட்டோ தலைவர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ பலமும் தொழில்நுட்ப வல்லமையும், உலகையே அதற்கு அடிமையாக்கும் நோக்கத்துக்கு உதவப் போவதில்லை. ஏகாதிபத்தியங்கள் வெறும் காகிதப் புலிதான் என்பதும் லிபியாவிலும் நிரூபணம் ஆகிக் கொண்டிருக்கின்றது. மற்றொரு புறம் அமெரிக்க உதவியுடன் விடுதலை பெற்றதாக கூறப்படும் நாடுகளின் யோக்கியதை என்ன என்பதை லிபியாவின் நிலையிலிருந்தும் புரிந்துகொள்ளலாம்.

## சதிகாரச் சர்வதேசம்

# தடையும் ஆதரவும்

பிறக்கப் போகின்ற 2015ஆம் ஆண்டு கலகலப்புடன் பிறக்கப்போகின்றது!! மாவையின் அகிம்சைப் போர் தை முதலாம் திகதியும், ஜனாதிபதி தேர்தல் தை எட்டாம் திகதியும் நடைபெறவுள்ளது! புனித பாப்பரசரும் தை மாதம் வரவுள்ளார். எனவே தை மாதம் மிகவும் உற்று நோக்கத்தக்க மாதமாக அமையப்போகின்றது.

இவற்றிலே மிக முக்கியமாக, எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்றாக ஜனாதிபதி தேர்தல் அமையப் போகின்றது என்பதுடன் ஒரே கட்சியினைச் சேர்ந்த இருவர் முட்டிமோதிக் கொள்ள உள்ளனர்! எதிர்க்கட்சிகளின் தேடலில் சிக்கிக்கொண்ட மீனாக, அதுவும் தூண்டிலில் சிக்கியுள்ள மீனாக மைத்திரிபால சிறிசேனா உள்ளார். ஒரு நாள் முதல்வன் என்பதுபோல 100 நாட்கள் ஆயுள்கொண்ட ஒரு பதவியே சிறிசேனாவுக்கு வழங்க உள்ளதாக எதிரணிகள் கூறுகின்றன. இந்த 100 நாள் பதவியும் சிறிசேனா ஜனாதிபதி தேர்தலில் வெற்றிவாகை சூடினால் மட்டுமே கிடைக்கும்.

அரசியல்ரீதியில் மகிந்தவை எதிர்க்கக் கூடிய வல்லமை உள்ளவர் சந்திரிக்கா மட்டுமே. இவரைவிட வேறு எவரும் வல்லமை உள்ளவர்கள் என்று கூறிவிட முடியாது என விமர்சகர்கள் கூறுகின்றனர்.


இருப்பினும் இலங்கையின் இப்போதைய ஆட்சியினை கவிழ்ப்பதற்கான வெளிநாடுகளின் சதியின் பின்னணியிலேயே இவை நடைபெறுகின்றது! இதன் வெளிப்படைச் சக்திகளாக பிரதான எதிர்க்கட்சி உள்ளது. இலங்கை அரசு, சீனாவுடன் கைகோர்த்துச் செயற்படுகின்றது. பாகிஸ்தானுடனும் நட்பினைக் கொண்டுள்ளது. இது இந்தியாவுக்கு பிடிப்பில்லாதுள்ளது. அதேபோல இலங்கைமீது அமெரிக்காவுக்கு ஒரு கண் உள்ளது. சீனா இலங்கையின் செல்லப்பிள்ளையாக வளர்ந்தால் அது தங்களுக்கு பாதிப்பாகலாம் என்ற அச்சம் அண்டை அயல்நாடுகளுக்கு உள்ளது!

இதன் அடிப்படையில் இலங்கையிலே ஒரு ஆட்சி மாற்றத்தினை உருவாக்க முயற்சிக்கப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனை அரசாங்கமும் உறுதிப்படுத்தியே வருகின்றது.

இத்தகைய சதி நடவடிக்கைகளின் ஆரம்பம்தான் மகிந்த அரசிடமிருந்து சிறிசேனாவைப் பிரித்தெடுத்தது! ஆக, பலம்பொருந்திய ஒருவருடன், பலமற்ற ஒருவரை முட்டிமோதவிட்டுள்ளது மேற்குலகம். இந்தச் சதி நடவடிக்கையின் பின்புலம் ரணிலிடம் உள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு திகதி அறிவிப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே ரணில் மேற்குலக நாடுகளுக்கு சூறாவளிப் பயணம் மேற்கொண்டிருந்தார். இவை ஜனாதிபதி தேர்தலுக்கான முன்னேற்பாடு என்பதை அரசியல் அவதானிகள் புரிந்துகொள்ளாமலும் இல்லை.

இலங்கையிலே புரையோடிப் போயிருக்கக்கூடிய இனப்பிரச்சினையை தீர்க்கக்கூடிய வல்லமை யாரிடம் உள்ளது?, பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறைகளை கண்டறிந்து செயற்படப்போகின்ற தலைமை யார்?? என்பதெல்லாம் வெளிச்சக்திகள் எதிர்பார்க்கவில்லை. மாறாக குடும்ப ஆட்சி நடாத்தும் மகிந்தவை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது. இதற்கான சக்திகளாக மேற்குலக நாடுகளின் ஆட்டத்துக்கு தாளம் போடுகின்றது பிரதான எதிர்க்கட்சி.

உண்மையில், சிறிசேனாவைவிட சக்திமிக்க, அரசியல் ஆளுமை உள்ள அதேவேளை, மக்கள் சக்திகொண்ட தலைவர்கள் எதிரணியிலே இருக்கும் போது ஜனாதிபதி மகிந்தவின் அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சரை தேர்ந்தெடுத்துப் பிரித்துப் போட்டியிட வைத்தமை பெரும் ஆச்சரியத்துக்குரியதே. இவரது தெரிவினை பிரதான எதிர்க்கட்சிகள் விரும்பாதபோதிலும் மேற்குலக நாடுகளின் பணபலம், அவர்களின் செல்வாக்கு என்பன இவரது தெரிவுக்கு காரணமாயுள்ளது.



ரணில் விக்கிரம சிங்கதான் வேட்பாளர் என்றனர். பின்பு கரு வந்தார், பின்பு சந்திரிக்கா, பௌத்த துறவி என்று பலபேருடைய பெயர்கள் அடிபட்ட நிலையிலே மைத்திரிபால சிறிசேனாவைக் கொண்டுவந்ததில் பிரதான எதிர்க்கட்சிகளின் சார்பில் சந்திரிக்கா அம்மையாருக்கு பெரும் பங்கு உண்டு. உடைந்துபோயுள்ள, தங்கள் குடும்ப ஆதிக்கத்திலே இருந்த சுதந்திரக் கட்சி இப்போது மகிந்தவின் கரங்களில் போய்விட்டது. இந்த ஜனாதிபதி தேர்தலை வைத்து கட்சியை உடைத்து, தன் பக்கம் இழுக்கக் கூடியவர்களை இழுத்தெடுக்கலாம். மைத்திரியைப் பின்தொடர்ந்து இன்னும் பலரை தன் பக்கம் எடுத்து மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை வளர்த்தெடுக்க சந்திரிக்கா விரும்புகின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சரி, ஒரு பொறுப்புமிக்க அமைச்சு பதவியிலே இருந்த மைத்திரியை தம் பக்கம் கொண்டுவந்த எதிரணி அவர் வெற்றியடைந்தால் தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கவிடப் போவதில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறையை 100 நாட்களில் இல்லாது ஒழித்து அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்படும் எனச் சொல்லப்படுகின்றது.

**அளவெட்டி, ப.உதயகுமார்.**

ஆக, ஒட்டுமொத்த அதிகாரமும் பிரதான எதிரணிகளிடம் போய்விடும். கையொப்பமிடும் வெறும் ஜனாதிபதியாக மட்டும் மைத்திரி இருக்கப்போகின்றார். இவையெல்லாம் நடக்கவேண்டுமானால் மைத்திரி 51 வீதத்துக்கும் மேலான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இது நடக்குமா? என்று பொறுந்திருந்து தான் பார்க்கவேண்டும்.

ஆக, ஒரே வீட்டுக்குள் இருந்தவர்களை பரம எதிரிகளாக்கி முட்டி மோதவைத்ததில் ஒருவேளை எதிரணிகளுக்கு வெற்றி கிடைத்திருக்கின்றது. மேற்கு நாடுகளின் சதிக்குரிய முதற்கட்டப் பணியினை எதிரணிக் கட்சிகள் சிறப்புற செய்து முடித்துவிட்டபோதிலும் மகிந்தவுடன் போட்டியிட்டு மைத்திரிபாலவால் வெற்றிக்கொடி நாட்டமுடியுமா? என்பதும் முக்கிய கேள்வியாக உள்ளது.

புலிகளுடனான யுத்தம் முடிந்து இலங்கையின் நாயகனாக, அதேவேளை இலங்கையின் சிங்கள மக்கள் மத்தியிலே சந்துபொந்தெல்லாம் உலக நாயகனாக வலம்வந்த சரத் பொன்சேகாவை மகிந்தவுக்கு எதிரான பொது வேட்பாளராகக் களமிறக்கியது எதிரணிக் கட்சிகள். நடந்தது என்ன? என்பதனை யாவரும் அறிவீர்கள். எதிரணியினரின் பசப்பு வார்த்தைகளை நம்பி களமிறங்கிய பொன்சேகா சிறைசென்று மீண்டதுதான் மிச்சம்.

இவ்வாறு மக்களின் பெரும் செல்வாக்கு மிக்க ஒருவராலேயே வெல்லமுடியாத பதவிக்கு இப்போது மைத்திரிபாலவும் பலியாகியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினை பொறுத்த மட்டில் செல்வாக்கு இழந்த கட்சியாகவே வலம்வருகின்றது. இருந்தும் மேற்குலகின் சதிவலையிலே போய்விழுந்துள்ள ரணில் ஒருவேளை ஆட்சிக்கட்டில் ஏறினால் மேற்குலகின் தாளத்துக்கே ஆட வேண்டி வரும். ஒரு இறைமை உள்ள நாட்டினை வெளிநாடுகள் பங்கு போட்டுக்கொள்ள ரணில் இடமளிக்கப் போகின்றாரா? என்பது கேள்வியாக உள்ளது.

இலங்கையின் இயற்கைத் துறைமுகம் மீது கண்வைத்துள்ள அமெரிக்கா, இலங்கையிலே தளம் அமைக்கவும் வாய்ப்பாக அமையலாம். இவ்வாறு நடைபெறுமானால் தன் எதிரிகளுக்கு இலக்குவைக்கும் களமாக இலங்கை அமையலாம். இப்போது பரமஎதிரிகளாக உள்ள நாடுகள் ஒன்றையொன்று அடித்துக் கொள்ளவும் உலக யுத்தம் ஒன்று தோன்றவும் வாய்ப்புக்கள் வரலாம். இதனால் இலங்கைக்கு பாதிப்பு உண்டாகும் என்பதனை மறந்துவிட்டு வெளிநாடுகளுக்கு இலங்கையை அடமானம் வைக்க முற்படுகின்றது பிரதான எதிர்க்கட்சி.

இந்த நிலையில் தமிழர், முஸ்லிம் தரப்பு என்ன முடிவினை எடுக்கப் போகின்றனர் என்னும் எதிர்பார்ப்புகளும் பரவலாக எழாமல் இல்லை. முஸ்லிம் கட்சிகள் பல உள்ளன. அவற்றில் சில அரசுடன் இருக்கின்றன. அரசுடன் ஆட்சியிலே பங்கேற்றுள்ள உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, எமது நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயிரோடு இருக்கும் வரை அவருக்கு வாக்களிக்கவும் எமது சமூகம் கடமைப்பட்டுள்ளது என்று பகிரங்கமாக கூறியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் முடிவை தெரிவிக்கவில்லை. அரசுடன் இருப்பதால் அவர்கள் வெளியேறிச்செல்ல வாய்ப்பிருக்காது என்று நம்பலாம். ஆக, பெரும்பான்மையான முஸ்லிம் மக்களின் வாக்குகள் மகிந்தவுக்கு போய்ச்சேர வாய்ப்பு வரலாம்.

தமிழர் தரப்பினை பொறுத்தமட்டில் இதுவரை எந்த முடிவினையும் வெளிக்காட்டாதபோதிலும் ரணிலை ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை என்று சம்பந்தன் தெளிவுபட தெரிவித்துவிட்டார்.

இருந்தும் பொதுவேட்பாளர் அறிவிக்கப்பட்ட நிலையிலே மைத்திரியை சந்திக்கக் கூட்டமைப்பு திகதி கேட்டுள்ளது. திகதி தரமுடியாது என்று மைத்திரி மறுத்துள்ளார் என்றும் செய்திகள் வெளிந்துள்ள நிலையில், கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன், மைத்திரிபால நாட்டின் ஜனாதிபதி முறையினை ஒழிப்பார் என்று தாம் நம்புவதாக தகவல் வெளியிட்டுள்ளார்.

உண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு துரோகக் கும்பல். சுயநலவாதக் கூட்டம். தமிழர்களை சிங்கள அரசியல்வாதிகளிடம் விற்கும் கூட்டம். ஏனென்றால், நேற்று வரை மகிந்தவுடன் சுகாதாரப் பகுதி அமைச்சராக இருந்தவர்தான் மைத்திரி. அவர் இப்போது பொதுவேட்பாளர் மட்டும்தான். மகிந்தவுடன் இருந்தபோது தமிழர் தரப்பினையும் கூட்டமைப்பினரையும் கடுமையாக விமர்சனம் செய்த ஒருவர். கூட்டமைப்பினரின் தவறான வழி நடத்தல்களை கண்டனம் செய்தவர். அவர் இன்று அரசைவிட்டு வெளியேறி விட்டார் என்பதை வைத்துக்கொண்டு அவரை ஆதரிப்பது என்பது வெறும் முட்டாள்தனம். ஏனென்றால், மைத்திரியும் கடும்போக்குள்ள ஒரு அரசியல் வாதிதான். அவர் சேர்ந்திருக்கும் பிரதான எதிரணிக்குள் இருப்பவர்களும் கடும் போக்குடையவர்கள்தான்.

ரணில், சந்திரிக்கா கொண்டுவந்த தீர்வுத்திட்டம் தமிழருக்கு அதிகமான தீர்வு என்று சொல்லி தீர்வுநகலை பாராளுமன்றத்திலே தீயிட்டு கொழுத்தியவர். புலிகளைப் பிரித்து புலிகளை பெயர் இல்லாமலே அழிப்பதற்கு முன்னின்றவர். ஆக, தமிழருக்கு எதிரானவர். இப்படியான துரோக கும்பலுக்கு ஆதரவுவழங்க சம்பந்தன் தரப்பு முடிவு செய்யப்போகின்றது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று மைத்திரியோ, ரணிலோ இதுவரைக்கும் சொல்லவில்லை. மாறாக ஜனாதிபதி முறை ஒழியும் என்று மட்டும் சம்பந்தன் நம்புகின்றார். எமது பிரச்சினை அதுவல்ல; பிரச்சினைக்கு தீர்வுதான் தேவை என்பதனை கூட்டமைப்பு உணரவேண்டும்.

காலத்துக்கு காலம் மக்களை ஏமாற்றி, ஏமாற்றி ருசிகண்ட பூனையாக உள்ள கூட்டமைப்பு இம்முறை ஜனாதிபதி தேர்தலிலும் மக்களை ஏமாற்றப் போகின்றது. மேற்கு நாடுகளின் கரன்சி நோட்டுகள், சதி முயற்சிக்கு, எதிரணிக்கு வந்துசேர்ந்திருப்பதாக தகவல்கள் கசிகின்றன. அந்தக் கரன்சி நோட்டுக்கள் டொலர்களாக தமிழர் தரப்பு அரசியல்வாதிகளுக்கு வந்துசேரக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உள்ளன. கரன்சி நோட்டு கட்டுக்கள் கைமாறும் போது மைத்திரிக்கு வாக்களிக்கச் சொல்லும் காலம் தூரத்தில் இல்லை.

எது எவ்வாறிருந்தாலும் கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் சதி நடவடிக்கையையும், தமிழர்களை அடமானம் வைக்கும் துரோக நடவடிக்கையையும் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே என்பதை தெரிந்து, புரிந்துகொண்டு தக்க பதிலடி கொடுக்க வேண்டும். சிங்களத் தலைவர்கள் எல்லோரும் மோதகமும் கொழுக்கட்டையும்தான். இதனை புரியாத கூட்டமைப்பு தங்களின் சுயநலனுக்கான அறிவிப்பையே வெளியிட உள்ளது.

ஆக, ஒட்டுமொத்தமான செயற்பாடுகளின் பின்னணியிலே மேற்கு நாடுகள் பின்னின்று செயற்பட்டு இலங்கையின் ஆட்சியினைக் கவிழ்த்து தமது சுயநலத்தை நிலைநாட்டத் துடிக்கின்றது. இதற்கு துணைபோகும் சக்திகளாக எதிரணிக் கட்சிகள் உள்ளன.

நாட்டு நிலைமை, இலங்கையின் சுபீட்சம், இறைமை, எதிர்காலம் என்பனவற்றினை மறந்து, தாய்மண்ணை அடமானம் வைத்து, கரன்சி நோட்டை நம்பி அரசியல் பிழைப்பு நடாத்தும் அரசியல்வாதிகளுக்கு சரியானதொரு தீர்ப்பை வழங்கவேண்டிய பெரும் பொறுப்பு மூவின மக்களிடமும் உள்ளன.

மேற்குலகத்தின் சதியினை முறியடிக்க மக்களின் தீர்ப்பே சரியான பாடமாக அமையும் என்பதில் ஐயமில்லை.




## மானுடம் போற்றுவோம்!

அன்பு என்னும் தேரினை
அறிவு கொண்டு செலுத்தினால்
நன்மை கோடி விளையுமே
நரகம் சொர்க்கம் ஆகுமே!

கொள்கை நூறு ஏற்கலாம்
குணங்கள் நூறு இருக்கலாம்
உள்ளம் யாவும் இணைந்திடின்
உலகில் அமைதி நிலவுமே!

எந்த மொழியைப் பேசினும்
எந்த இறையை வணங்கினும்
சொந்த அண்ணன் தம்பி நாம்
துளியும் பேதம் இல்லையே!
சென்ற காலம் சென்றதே
சிதைந்த கோலம் மறைந்ததே
இன்று, நாளை, நம் வசம்
இனியதாக்கிக் கொள்வமே!


உற்ற பிறவி ஒரே முறை
உணர்ந்து நன்கு வாழுவோம்
மற்ற வற்றை ஒதுக்குவோம்
மானுடத்தைப் போற்றுவோம்!

## கடல்களின் இரகசியம்!

- கடல் நீரில் உள்ள உப்பின் சதவிகிதம் 35வீதம்
- பூமியில் உள்ள கடல்களின் மொத்த பரப்பளவு 36.24 சதுர கிலோமீற்றர்கள்.
- கடலில் தண்ணீரின் பருமன் 135.8 கன கிலோமீற்றர்கள்!
- கடலிலிருந்து ஆண்டுதோறும் ஆவியாகும் நீரின் அளவு 3.33 இலட்சம் கன கிலோமீற்றர் நீர்!
- சூரிய ஒளி கடல் நீருக்குள் 100 மீற்றர் ஆழம் வரை ஊடுருவ முடியும்.

## சிறை விதிகள்

17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஒரு கப்பலில், போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்று




கொண்டிருந்தார் ஜோன் ஹவார்ட். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒருவன், அவரைப் பிடித்துச் சென்று சிறையில் அடைத்துவிட்டான்.

ஹவார்ட், சிறையில் மிகுந்த துன்பங்களையும், வேதனைகளையும், சொல்லொண்ணாத் துயரங்களையும் அனுபவித்தார்.

சிறைவாசம் முடிந்து, விடுதலையாகி வெளிவந்தார், ஹவார்ட், தான் சிறையில் அனுபவித்த கொடுமைகளை வைத்தும், மற்ற சிறைச்சாலைகளைப் பார்வையிட்டும், பல நூல்களை எழுதினார். அவரது நூல்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின, அதன்பயனாக, பல நாடுகள் சிறை விதிகளை உருவாக்கின. சிறைகள் சுத்தமாக்கப்பட்டன. காற்றோட்டமாக மாற்றப்பட்டன. கைதிகளின் வேலைக்குச் சம்பளமும் கொடுக்கப்பட்டது. விடிவு காலம் உதயமானது.

## பாப்பா முரசு சிறுகதை

# அரசனும் முயலும்

உழவன் ஒருவனிடம் பெரிய தோட்டம் ஒன்று இருந்தது. அதில் காய்கறிகளை பயிரிட்டான் அவன். நாள்தோறும் ஒரு முயல் அந்தத் தோட்டத்திற்குள் நுழைந்து இலை, பிஞ்சுகளைத் தின்று வந்தது. அதைப் பிடிக்க அவன் பல முயற்சிகள் செய்தான். முயல் அவனிடம் சிக்கவே இல்லை.

எப்படியும் முயலைப் பிடித்தாகவேண்டும் என்று நினைத்த அவன் அரசனிடம் சென்றான். "அரசே என் தோட்டத்தை முயல் ஒன்று பாழாக்குகிறது. நீங்கள்தான் எனக்கு உதவி செய்யவேண்டும்" என்றான். சிரித்த அரசன், "ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா?" என்று கேட்டான்.

"அரசே! அந்த முயலுக்கு மாயமந்திரம் தெரிந்திருக்கவேண்டும். நான் அதைப் பார்த்துக் கல்லையோ, கட்டையையோ வீசினாலும் அவை அதன்மீது படுவது இல்லை" என்றான் அவன்.

"நாளையே வேட்டை நாய்களுடன் நான் அங்கு வருகிறேன். முயலின் மாயமந்திரம் எதுவும் என் வேட்டை நாய்களிடம் செல்லாது. அந்த முயலைப் பிடித்த பிறகுதான் நான் அங்கிருந்து திரும்புவேன்" என்றான் அரசன்.



மகிழ்ச்சியுடன் தன் தோட்டத்திற்கு வந்தான் அவன். இனி முயலின் தொல்லை இருக்காது என்று நினைத்து அரசனுக்கும் அவன் வீரர்களுக்கும் சிறப்பான விருந்திற்கு ஏற்பாடு செய்தான். மறுநாள் படை வீரர்கள், வேட்டைக்காரர்கள், நாய்கள் சூழ அரசன் அங்கு வந்தான்.

எல்லோரையும் வரவேற்ற உழவன் அவர்களுக்குச் சிறப்பாக விருந்து வைத்தான். விருந்து முடிந்தது. மகிழ்ச்சி அடைந்த அரசன், "இன்னும் சிறிது நேரத்தில் அந்த முயல் என்ன கதி ஆகிறது பார்" என்று வேட்டையாடப் புறப்பட்டான்.

வேட்டைக்காரர்கள் கொம்புகளை ஊதினார்கள். வேட்டை நாய்கள் பயங்கரமாகக் குரைத்துக்கொண்டே தோட்டத்திற்குள் பாய்ந்தன. புதரில் மறைந்திருந்த முயல் அச்சத்துடன் வெளியே வந்தது. அங்கிருந்த வேலியை நோக்கி ஓடியது.

அதைப் பார்த்த அரசன், "அந்த முயலைத் தப்பவிடாதீர்கள், பிடியுங்கள்" என்று கத்தியபடி வேலிப்பக்கம் ஓடினான். வேட்டைக்காரர்களும் வீரர்களும் அரசனைத் தொடர்ந்து ஓடினார்கள்.

தப்பிக்க நினைத்த முயல் தோட்டத்திற்குள் அங்கும் இங்கும் ஓடியது. அவர்கள் அனைவரும் அதைத் துரத்தினார்கள். நீண்டநேரப் போராட்டத்திற்குப்பின் ஒரு வேட்டை நாய் பாய்ந்து அந்த முயலைக் கவ்விப்பிடித்தது. வெற்றிப் பெருமிதத்துடன் அந்த முயலை உழவரிடம் காட்டினான் அரசன். இவர்களின் முயல்பிடிக்கும் முயற்சியில் தன் அழகான தோட்டம் முற்றிலும் நாசமாகிவிட்டதை அறிந்து வருந்தினான் உழவன்.

"சிறு வேலைக்குப் பெரியவர்கள் உதவிகேட்பது தவறு என்று உணராமல் போனேனே. என் அழகான தோட்டம் அழித்துவிட்டதே. ஒரு முயல் என்ன ஆயிரம் முயல்கள் பல நாட்கள் வந்திருந்தாலும் இப்படிப்பட்ட அழிவை ஏற்படுத்தி இருக்கமுடியாதே. என் முட்டாள்தனத்தால் பேரழிவைத் தேடிக் கொண்டேன்" என்று வந்திருந்தான் அவன்.

## கார்க் மரங்கள்...




ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் நாடுகளுக்கு ஒயின் நாடுகள் என்ற பட்டப்பெயர் உண்டு. அத்துடன் இந்த நாடுகள் ஒயின் போத்தலைமூட பயன்படும் கார்க் மரங்களுக்கும் பிரபலம். ஸ்பெயினில் அதிக மழையில்லாத பகுதி 'மெசெடா...' இங்கு கார்க் மரங்கள் மிகச் சிறப்பாக வளர்கின்றன. உலகளவில் 2,20,000 ஹெக்டர் நிலப்பரப்பில் கார்க் மரங்கள் பயிரிடப்படுகின்றன. வருடத்திற்கு 2 இலட்சம் டன் கார்க் உற்பத்தியாகிறது.

இவற்றில் போர்த்துக்கலில் 34 சதவிகிதமும் ஸ்பெயினில் 27 சதவிகிதமும் உற்பத்தியாகிறது. இவைதவிர மொராக்கோ மற்றும் அல்ஜீரியா நாடுகளிலும் கார்க் மரங்களை காணலாம். பொதுவாக கார்க் மரத்திற்கு 25 வயதானவுடன், 9 வருடங்களுக்கு ஒருமுறை அதன் பட்டையை உரிக்கின்றனர். முதல் தடவை உரிக்கும் பட்டை அவ்வளவு சிறப்பாக இராது. ஆனால் போகப்போக... சிறந்த கார்க் பட்டைகளை பெறமுடியும்.

கார்க் மரங்கள் பொதுவாக 200 வருடங்கள் வாழ்கின்றன. இவற்றால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதில்லை. சந்தன மரங்கள் போன்று, வெட்டி, கடத்தினால் பயனில்லை. ஆக அப்படியே தொடர்ந்து வளரவிட்டால்தான் மகசூல் நன்றாக இருக்கும். கார்க்கை வைத்து 80 சதவிகிதம் ஒயின் போத்தலுக்கு மூடி மட்டுமே தயாரிக்கப்படுகிறது. மீதிபலவித பொருட்களுக்கு பயன்படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 15.12.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1073**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1071**

எஸ்.திஹாரா,
முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
பரிசுக்குரியவர்: 1071

பாராட்டுக்குரியவர்கள்


01. S.யெஸ்மினி, தினேஸ்நகர், கைவேலி, புதுக்குடியிருப்பு.
02. M.M.M.சாமில் முனவ்வர், அலாப்தீன் மாவத, மிரிஸ்வத்த.
03. யோ.சுபாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
04. ப.ஷர்மி, ஹொரவப்பொத்தானை.
05. அ.சந்தியா, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
07. ந.பாவனா, கரவெட்டி, நெல்லியடி.
08. எம்.கவிந்தன், கோவில் வீதி, புளியங்குளம்.

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 67

வெளிநாட்டமைச்சர் எமது நாட்டு இரகசியங்களை விலைபேசினார் என்ற தகவல் அரசுக்கும் கிட்டியிருந்தது. அதனைத் தீர ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டே பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இனி...



# அற்புதன் எழுதிய இடி அமீன்

பகாயாவின் முகத்தில் மகிழ்ச்சி மலரவில்லை என்பதையும் அமீன் அவதானிக்கத் தவறவில்லை.

கூட்டம் முடிய இருந்த தறுவாயில், தன் மெய்க்காவலர் ஒருவரை தன் அருகே அழைத்த அமீன் அவனது காதருகே கூறினான்.

"மைக்கேல் ஒண்டேகா இங்கிருந்து வீடு திரும்பக் கூடாது ஹசனிடம் கூறிவிடு" அமீனின் மெய்காப்பாளருக்கு பொறுப்பானவன் ஹசன்.

கூட்டம் முடிந்தபின்னர் அமைச்சர்கள் அனைவரும் அமீனிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தனர்.

"மைக்கேல் ஒண்டேகாவின் முறை வந்தது. அவரது கையைப் பற்றிக் குலுக்கிய அமீன் கவலைப்படாதீர்கள். உங்களுக்கு இதைவிட உயர்ந்த பதவி ஒன்றைத் தருவதற்காகத்தான் இந்த மாற்றம்!" என்றான். முதுகில் தட்டிக் கொண்டிருந்தான்.

பகாயாதான் கடைசியாக வந்தாள். புதிய அமைச்சரே வருக!! எப்பேது பதவிப் பிரமாணம் செய்ய போகிறீர்கள். என் காரில் போய்க்கொண்டே பேசலாமா என்றான்.

பகாயாவின் அருகாமை அவளை மிகவும் பாதித்தது. இம்சித்தது. அவளது குத்திட்டு நின்ற முன்னழகுகள் அவனை பிரேமை கொள்ளச் செய்தன.

"வேண்டாம். என்னிடமே கார் இருக்கிறது. நான் நாளைக் காலையில் தங்களைச் சந்திக்கிறேன்!" என்று பணிவோடு கூறினாலும். அவள் பதிலில் எச்சரிக்கை உணர்ச்சியே தெரிந்தது.

"எத்தனை நாளுக்குத்தான் நழுவுவாய் என் கோழிக்குஞ்சே!" என்று தன் மனதுக்குள் நினைத்தவனின் உதடுகளில் புன்னகை அரும்பியது.

"காலைதான் நல்லது. பார்க்கலாம். வாழ்த்துக்கள்!" என்று கூறி அனுப்பி வைத்தான்.


மைக்கேல் ஒண்டேகாவின் வாகனத்தைப் பின்தொடர்ந்த அமீனின் ஆட்களால் அதனை வழிமறிக்க இயலவில்லை. மின்னல் வேகத்தில் அவரது கார் சென்றுவிட்டது.

தான் பின்தொடரப்பட்டதை ஒண்டேகா அறியவில்லை.

தன்னை அவமானப் படுத்திவிட்டதால் அமீனுக்கு தன்மேல் இருந்த சீற்றம் தணித்திருக்கும் என்று கருதினார்.

அத்தகைய நினைப்பால் சுதந்திரமாக உலாவத் தொடங்கினார்.

தனது மகளுக்கு 'பீஸ்' என்று பெயர்



வைத்திருந்தார். சமாதானத்தைக் குறிக்க வைத்த பெயர் அது.

தனது மகளை கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். அவரை நிழலாகத் தொடர்ந்த ஹசனின் கார் அவரது காரை முந்திச்சென்று. அரச ஆய்வு நிறுவனம் இருந்த கட்டடம் அருகே வழிமறித்து நின்றது.

ஹசனின் வண்டியில் இருந்து திமுதிமுவென்று நான்கு பேர் குதித்தனர். ஹசனோடு சேர்ந்து ஐந்து பேர்.

ஒண்டேகா சுதாகரிப்பதற்குள் காருக்குள் இருந்த இழுத்து வீசப்பட்டார். மகள் காருக்குள் இருந்து அழுதுகொண்டிருக்க. அவள் கன்னத்தில் பளார் பளார் என்று ஒருவன் அறைந்தான்.

"ஒண்டேகா தெருவில் வைத்து தாக்கப்பட்டார். எமது நாட்டுக்கு இரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்ற துரோகி!" என்று உரத்துக் கூறியவாறே அவரைத் தாக்கினார்கள்.

பாடசாலைப் பிள்ளைகளும். பொதுமக்களுக்கு அக்காட்சியை தமது கண்களால் கண்டனர்.

முன்பு இரகசியமாக நடத்திய படுகொலைத் தாக்குதல்களை பகிரங்கமாகவே நடத்தத் தொடங்கினர்.

"ஒரு சில படுகொலைகளை தெருவில் செய்து காட்டினால் தான் மக்களிடம் பயம் இருக்கும். எவரும் எதிர்க்கத் துணிய மாட்டார்கள்!" என்று கூறியிருந்தான் அமீன்.

குற்றுயிராகக் கிடந்த ஒண்டேகாவை தமது வாகனத்தில் தூக்கிப்போட்டுக் கொண்டு விரைந்தான்.

சித்திரவதை முகாமில் அவரைச் சந்த்தான் அமீன்.

இந்த அமீன் கொடுத்த வாக்கை மீறமாட்டான். உயர்ந்து பதவி எப்படி இருக்கிறது? என் ஆட்கள்செய்த கௌரவம் போதுமா?' என்று கேட்டுச் சரித்தான். ஒண்டேகா வலியில் முனகினார்.

நான் சொன்னபடி கேட்டு நடத்தால் இங்கேயே சொர்க்கத்தில் இருக்கலாம். மறுத்தால் நரகம்தான்!' என்றவன் ஹசனிடம் கூறினார். இவர் மிக உயர்ந்த பதவியில் இருந்தவர் என்பதால். இவரது உடலை ஹெலிக்கெப்டரில் எடுத்துச் சென்று வானில் இருந்து நைல் நதியில் வீசிவிடுங்கள் அதுதான் உயர்ந்த மரியாதை!"

அமீன் கூறியபடியே நடந்தது. ஆனால் பிணம் மிதந்து கரையைத்தொட்டத்து.

அதற்குமுன்னரே உகண்டா வானொலி பின்வருமாறு அறிவித்திருந்தது.

"முன்னர் வெளிநாட்டமைச்சர் ஒண்டேகாவை இனம் தெரியாத கும்பல் ஒன்று தாக்கி இருக்கிறது. தாக்கியவர்கள் அரச ஆதரவாளர்களாக இருந்தாலும் கைது செய்யப்படவேண்டும்!" என்று அதிபர் கட்டளையிட்டுள்ளார்.

வெளிநாட்டமைச்சர் எமது நாட்டு இரகசியங்களை விலைபேசினார் என்ற தகவல் அரசுக்கும் கிட்டியிருந்தது. அதனைத் தீர 'ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டே பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இவ்வாறு அவசரப்பட்டு அவரைத் தாக்கியதை அதிபர் கண்டிக்கிறார்.

அமீனைச் சந்திக்கப் புறப்பட்டாள் பகாயா.

(தொடரும்)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!

உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 602

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | |
| | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 600 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 சா | 3 ப | 4 ங் | 5 க | 6 ன் |
| 7 ரா | 8 ண | 9 ம் | 10 பு | | 12 ட |
| 13 வ | 14 க் | | 16 கை | 17 பா | |
| 19 மு | 20 கி | 21 ல் | | 23 செ | 24 ம் |
| 25 த | 26 ய | 27 ன | 28 ன் | 29 ஞ் | 30 ச |
| 31 ம் | 32 ம் | 33 மா | 34 ச | 35 சி | 36 ன |

**இடமிருந்து வலம்**

01. இது. ஆத்மார்த்த ரீதியான பிணைவினைக்கொண்டது.
05. உயிருடைய பொருள்: உயிருடையோன்.
07. ஒற்றுமை : நூலின்கண் சேர்க்கப்படும் உபவிஷயம். (குழம்பியுள்ளது)
13. பொழுது கழிப்போன். (குழம்பியுள்ளது)
22. கொப்பூழ் : வயிறு.
27. குந்தியின் மைந்தர்களுள் ஒருவன்.
31. ஏரி மதகுநீர் வழியும் அணைக்கட்டு.

**மேலிருந்து கீழ்**

01. 20ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த சிரேஷ்ட அரசியல்வாதியும் அகிம்சைவாதியுமானவர்.
02. இறுக்கத்தால் புழுங்குதல். (குழம்பியுள்ளது)
03. இது. உயர்ந்த அல்லது பெருந்தன்மையான அல்லது தயாளமான என்ற கருத்தைத் தரும். (திரும்பியுள்ளது)
05. கர்ப்பம் தரித்து 6 ஆம் மாதம் செய்யும் ஓர் சடங்கு. (குழம்பியுள்ளது)
06. தாகப்படு : துன்பப்படு (திரும்பியுள்ளது)
22. சிந்தி : நிதானி. (திரும்பியுள்ளது)
24. சரீரபலம்: நெஞ்சூக்கம். (குழம்பியுள்ளது)
25. நற்குணமுடையாள்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **15.12.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 602
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 600 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

மு.காவியா, ரெட்பானா, விசுவமடு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
03. க.ராம்சரண், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
04. எல்.நடராஜா, பிரதான வீதி, மன்னார்.
05. சௌ.தவபாலன், பருத்தித்துறை வீதி, மட்டுவில்.
06. ம.தனுஜன், புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
07. பி.றொபோர்ட், பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.
08. அ.அபிராமி, கண்டி வீதி, கொடிகாமம்.
09. என்.நவீகா, கோவில் வீதி, மாத்தளை.



## இலியானாவினால் பரபரப்பு!

தென்னிந்திய சினிமா தாண்டி வடஇந்தியாவிலும் பிரபல நடிகையாகிவிட்டார் இலியானா. இவர் சில நாட்களுக்குமுன் ஒரு பத்திரிகையில் "செக்ஸ் வைத்துக்கொண்டால், நம் உடம்பு நல்ல ஆரோக்கியமாக இருக்கும் என்று கூறியுள்ளார். இதுவே பல சர்ச்சைகளை கொண்டுவர, இதேபோல் ஒரு தனியார் தொலைக்காட்சியில் 16 வயது இருக்கும் போதே தன் தந்தையுடன் செக்ஸ் பற்றி பேசியுள்ளேன் என்று அவர் கூற பிரச்சினை பூதாகரமானது. இவ்வளவு ஓப்பனாக இருக்கிறாரே என்று, உடனே அவர் போய்பிரண்ட் பற்றி அனைவரும் கேட்க அது என்னுடைய பேர்சனல் என்று கிளம்பி விட்டாராம்.

## ரசிகர் தொல்லை

ரசிகர்கள் எப்போதும் தங்கள் அபிமான நாயகர்கள்மீது அளவுகடந்த அன்பு வைத்திருப்பார்கள். அது சிலசமயங்களில் வகையில் அவர்களுக்கே அது தொந்தரவா அமையும். இந்த விதத்தில் சூர்யா நடித்து 'மாஸ்' திரைப்படத்தின் முக்கியமான சண் ஒன்று சென்னையில் எடுக்கப்பட்டுவருகிறது. சூர்யாவை காண ரசிகர்கள் கூட்டம் கூட்டம் படக்குழுவிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி பின் பொலிஸார் உதவியுடன் படப்பிடிப்பை நடத்தியுள்ளனர்.

## லிங்காவின் விலை 80

இந்த வருடம் அனைத்து தரப்பு ரசிகர் ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் லிங்கா. சூப்பர் ஸ்டாரை 4 வருடங்க திரையில் காணப்போகிறோம் ரசிகர்கள் ஆவலுடன் இருக் இந்நிலையில் லிங்காவை முழுவது வெளியிடும் உரிமையை ரூ.80 கோடிக்கு வேந்தர் மூவிஸ் வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. ஜெயிக்கிற குதிரை மேல தான பணத்த கட்ட முடியும்.



## பவர் ஸ்டாரின் சிறை அனுபவம்

பேரரசு இயக்கத்தில் நீண்ட இடைவேளைக்கு பிறகுவரும் படம் திகார். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக கிரண்பேடி கலந்து கொண்டார். இதில் பேசிய பவர் ஸ்டார் "நான் திகாரில் இருந்தபோது அங்கிருந்த 1500 தமிழ் பொலிஸார் என்னுடைய ரசிகராகிவிட்டனர். ஒரு நாள் பொலிஸ் ஒருவர் என்னிடம் வந்து உங்களோடு அறையில் இருந்தவர் யார் தெரியுமா? என்றார். நான் தெரியாது என்றுகூற, அவன் பாலியல் வல்லுறவு செய்துவிட்டு உள்ளே வந்தவன் என்று கூறினார். பாலியல் வல்லுறவு கேஸில் வந்தவர்கள் என்றவுடன், நம்மளை ஏதும் பண்ணாமல் விட்டார்களே சாமி என்று எண்ணினேன்." என்று தன் சிறை அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

## ஆரோக்கிய உறவு

சிம்பு, தனுஷ் இருவருமே தற்போது எந்த போட்டியும் இல்லாமல் நண்பர்களாக பழகி வருகின்றனர். அது மட்டுமில்லாமல் வளர்ந்துவரும் தலைமுறை நடிகர்களையும் கைபிடித்து தூக்கிவிடுகின்றனர். அந்தவகையில் விஜய் சேதுபதி தயாரிப்பில் வெளிவரவிருக்கும் படம் ஒரேஞ்சு மிட்டாய். இப்படத்தின் டீசர் வெளிவந்து அனைவரையும் கவர்ந்தது. இந்த டீசரை பாராட்டி தங்கள் டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளனர்.



## பாரதிராஜாவின் ஆதங்கம்

தமிழ் சினிமா போற்றும் இயக்குனர் இமயம் என்றால் பாரதிராஜாதான். இவர் சமீபத்தி ஒரு வார இதழுக்கு பேட்டி அளித்துள்ளார். இதில் விஜய், ரஜினி அரசியல்வருவது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டுள்ளனர். அதற்கு அவர் - அவர்கள் அரசியலுக்குவருவதற்கு என்ன தகுதி இருக்கு?. மேலும் ஊடகம்தான் அவர்களை இந்த ஆர்வத்திற்கு கொண்டுவருவதற்கு காரணம். நீங்கள் அவர்களிடம் என்றாவது ஒஸ்கார் விருது வெல்வீர்களா, என்றுகேட்டு உள்ளீர்களா? எப்போதும் அரசியல் குறித்து மட்டும் கேட்பது எதற்கு? என்று மனதில் பட்டதை கூறியுள்ளார்.

## ஸ்ரீதிவ்யாவிற்கும் சிக்கல்

வருத்தப்படாத வாலிபர் சங்கம், ஜீவா என வரிசையாக ஹிட் அடித்துவிட்டார் ஸ்ரீதிவ்யா. இவர் தற்போது பென்சில், காக்கிசட்டை போன்ற படங்களில் நடித்துவருகிறார். ஆனால், இவர் பிரபலமாவதற்கு முன்னால் இரண்டு சின்ன படங்களில் நடிக்க கமிட் ஆகியிருந்தார். இப்படங்களில் தற்போது நடிக்க மறுப்பதால் தயாரிப்பாளர்கள் இவர்மீது புகார் கொடுத்துள்ளனர்.

ஸ்ரீதிவ்யா தரப்பில் "அந்த படம், பாதியிலேயே நின்றுவிட்டது. அவர்கள் கூறிய குற்றச்சாட்டு மிகவும் தவறானது" எனக் கூறியுள்ளார். இந்த படங்களில் அவர் நடிப்பாரா? அல்லது அவர் தரப்பிலிருந்து ஏதும் புகார் கொடுப்பாரா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



மானே தேனே பேயே

## நாய்கள் ஜாக்கிர

### திரை வி

பொலிஸ் அதிகாரியான சிபி, ஒரு கும்பலால் கடத்தப்பட்ட பெண்ணை காப்பாற்றுகிறார். அப்போது நடக்கும் துப்பாக்கி சண்டையில் சிபிக்கு காலில் குண்டு பாய்கிறது. இதனால் வீட்டில் மனைவி மற்றும் தங்கையுடன் ஓய்வு எடுக்கிறா

இந்நிலையில் பக்கத்து வீட்டில் வசிக்கும் ஒருவர் தான் வெளியூ வரும் நாயை நான்கு நாட்கள் பார்த்துக்கொள்ளும்படி கூறுகிறார். சிபி இ தெரியாமல் அந்த நபர் சிபியின் வீட்டில் நாயைக் கட்டிப்போட்டுவிட்டு வெளியூர்போன பக்கத்து வீட்டுக்காரர் எதிர்பாராதவிதமாக இறந் பொறுப்பு சிபியின்மீது விழுகிறது. இந்நிலையில் அந்த நாய் இராணு மிகுந்த திறமைவாய்ந்தது என்றும் தெரியவருகிறது.

இந்நிலையில் சிபியால் பாதிக்கப்பட்ட கடத்தல் கும்பல் சிபியின் இல்லாத நேரத்தில் கடத்திவிடுகிறது. மனைவி உயிருடன் வேண்டுமென்றால் பெ தரவேண்டும் எனக் கடத்தல் கும்பல் கூறியதால் பணத்தைக் கொடுத்து மனைவியை பணத்துடன் செல்லும் சிபிக்கு தன் மனைவி ஒரு சவப்பெட்டியில் உயிருடன் புதைக்கப்பட ஆறு மணிநேரம் மட்டுமே தனது மனைவி உயிரோடு இருக்க வாய்ப்பு உள்ளது என்ற நி இணைந்து மனைவியை மீட்கப்புறப்படுகிறார் சிபி. மனைவியை மீட்டாரா? கடத்தல் கும்பல் தான் மீதிக்கதை.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் நடித்துள்ளார் சிபி. இதுவரை தனது தந்தை சத்யராஜுடன் படங்களில் நடித்துவந்த சிபி, இந்த படத்தில் தனியாக ஸ்கோர் செய்கிறார். படத்தில் சிபியின் நடிப்பு நாயின் நடிப்புக்கு பல இடங்களில் கைதட்டுகின்றனர். நாய்க்கு டிரைனிங் கொடுத்தவரை தாராளமாக பாராட்டலாம் தெளிவான திரைக்கதையுடன் களமிறங்கியுள்ளார் இயக்குனர் சக்தி சௌந்தராஜன். சிபியைவிட படத்தில் நா என்பது படம் பார்க்கும்போதே தெரிகிறது. இசை மற்றும் ஒளிப்பதிவு ஓ.கே ரகம். மொத்தத்தில் நாய்க்காக ஒருமுை

## தொல்லை

ும் தங்கள் அபிமான
கடந்த அன்பு
து சிலசமயங்களில் பல
கே அது தொந்தரவாக
த்தில் சூர்யா நடித்துவரும்
முக்கியமான சண்டைக்காட்சி
எடுக்கப்பட்டுவருகிறது.
ர்கள் கூட்டம் கூட்டமாக வர,
பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.
வியுடன் படப்பிடிப்பை

## விலை 80 கோடி

னைத்து தரப்பு ரசிகர்களும்
த்துக் கொண்டிருக்கும் படம்
ஸ்டாரை 4 வருடங்கள் கழித்து
காணப்போகிறோம் என்று
கள் ஆவலுடன் இருக்கின்றனர்.
லையில் லிங்காவை தமிழகம்



## கொம்பனை வாங்கியது விஜய் ரிவி

நீண்ட இடைவெளிக்கு பின்னர் மெட்ராஸ் என்ற ஒரே ஒரு வெற்றிப்படத்தை கொடுத்ததால் உற்சாகத்துடன் உள்ளார். அதுமட்டுமின்றி ஒரே வெற்றியில் அவருடைய மார்க்கெட்டும் பலமடங்கு உயர்ந்துவிட்டது. தற்போது கார்த்தி நடித்துவரும் 'கொம்பன்' படம் விரைவில்வர உள்ள நிலையில் அந்த படத்தின் வியாபாரம் தற்போதே தொடங்கிவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

முதல்கட்டமாக கொம்பன் படத்தின் சட்டலைட் உரிமையை விஜய் டிவி நிறுவனம் ரூ.16 கொடுத்து பெற்றுள்ளது. இந்த படத்தின் தியேட்டர் உரிமையைப்பெற இரண்டு முன்னணி நிறுவனங்கள் போட்டி போடுவதாகக் கூறப்படுகிறது.

## ஜெனிலியாவுக்கு ஆண் குழந்தை

நடிகை ஜெனிலியாவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் குழந்தை பிறந்ததாகவும், குழந்தையும் தாயும் நலமாக இருப்பதாகவும், ஜெனிலியாவின் கணவரும், நடிகருமான ரித்தேஷ் தேஷ்முக் தெரிவித்துள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு நடிகை ஜெனிலியா திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்குப் பின்னர் நடிப்பதை நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

## சானியாவின் கணவர் சல்மான்?

டென்னிஸில் உலகளவில் இந்தியாவின் பெருமையை நிலை நாட்டியவர் சானியா மிர்சா. இவர் சமீபத்தில் சல்மான்கான்தான் என் கணவர் என்று கூறியது அனைத்து தரப்பினரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால், அவர் சொல்ல வந்த கருத்தே வேறு, "சமீபத்தில் குத்துச்சண்டை வீராங்கனை மேரிகோம் வாழ்க்கையை மையமாகக்கொண்டு வெளிவந்த படம் மாபெரும் வெற்றி பெற்றது. அதுபோல் என் வாழ்க்கையை படமாக எடுத்தால், என் கணவர் கதாபாத்திரத்தில் சல்மான் தான் நடிக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.



ஜெயிக்கிற குதிரை

## விஷாலின் சவால்

விஷால் தன் தயாரிப்பு படங்களை சொன்ன திகதியில் வெளியிடுவார். அன்றைய தினம் ரஜினி படங்கள் வந்தாலும் அவர் கவலைப்படுவதாக இல்லை. இந்நிலையில் ஆரம்பம், கத்தி போன்ற பிரம்மாண்ட படங்களின்போதும் தன் படமான பாண்டிய நாடு, பூஜை படத்தை ரிலீஸ் செய்து ஹிட் கொடுத்தார். தற்போது மீண்டும் அஜித்துடன் இந்த பொங்கலுக்கு 'ஆம்பள' படத்தின்மூலம் மோதவுள்ளார். இந்த முறை முடிவு என்ன என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.



ு? என்று

## கிரதை

## திரை விமர்சனம்

டன் ஓய்வு எடுக்கிறார்.
ஒருவர் தான் வெளியூர் செல்வதால்தான் வளர்த்து
கூறுகிறார். சிபி இதற்கு மறுக்கவே சிபிக்கு
கட்டிப்போட்டுவிட்டு சென்றுவிடுகிறார்.
பாராதவிதமாக இறந்துவிடுவதால் நாயை வளர்க்கும்
அந்த நாய் இராணுவ முகாமில் பயிற்சிபெற்றது என்றது

த்தல் கும்பல் சிபியின் மனைவியை அவர்
வேண்டுமென்றால் பெருந்தொகை ஒன்றை
கொடுத்து மனைவியை மீட்க செல்கிறார்.
உயிருடன் புதைக்கப்பட்டது தெரியவருகிறது.
பு உள்ளது என்ற நிலையில் நாயுடன்
? கடத்தல் கும்பல் என்ன ஆனது? என்பது

ந்தை ...யராஜுடன் மட்டுமே பெரும்பாலான
த்தில் சிபியின் நடிப்புக்கு கைதட்டாத பார்வையாளர்கள்
ராளமாக பாராட்டலாம்.
யைவிட படத்தில் நாய்க்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்
் நாய்க்காக ஒருமுறை பார்க்கலாம்.

## ஏமாந்தார் அனுஸ்கா

பொங்கலுக்கு வெளியாகவுள்ள அஜித்தின் படம் 'என்னை அறிந்தால்.' இப்படத்தில் அஜித்துடன் நாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டவர் அனுஸ்கா. பின்னர் சின்னக் கதாபாத்திரம் ஒன்றில் இடைச்செருகலாக த்ரிஷா உள்ளெடுக்கப்பட்டார். புற்றீசல் போன்று சிறிது சிறிதாக ஊடுருவிய த்ரிஷாவின் பாத்திரம் தற்போது தனிப்பாட்டுக்கு நடனம் ஆடுவதுவரை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்திருக்கிறது. இதனை ஆரம்பம் முதல் அவதானித்துவந்த அனுஸ்கா தனது பாத்திரத்திற்கு சவாலாக த்ரிஷா வந்திருப்பது மட்டுமன்றி, தான் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதாக அதிருப்தி அடைந்துள்ளார். இதுதொடர்பில் தனக்கு நெருக்கமானவர்களிடம் நம்ப வைத்து ஏமாற்றிவிட்டார்கள் என்று புலம்பிவருகிறாராம்.

## தேன் கிண்ணம்



### முத்துக்கள்

நெஞ்சத்தின் சாயமே
கண்மணியில்
என் செல்லக்காற்று
ஆசைகளைக் கொட்டிச்
சென்றுவிட்டது
மஞ்சள் மணிகளின்
சொந்தக் காரி
என் பக்கம் சாய்ந்து
தூங்கிக் கொண்டிருக்கிறாள்
அவள் எனக்காய்
பூக்கப்போகும்
சில முத்துக்களைப் பற்றி
பகல் கனாவில்
லயித்தியிருக்கிறாள்
என் வலிமையில்
நெரிந்துபோகும்
மெல்லிய தாயே
என்னோடு நீ ஒட்டிக் கொள்ள
தங்கத் தீவில்
என் தாய்
என்ன கடன் கேட்டாளோ.

நெடுந்தீவு ஜீன்ஸ்

### காலமெல்லாம் கண்ணீருடன் நான்...



இதயமே இல்லாத
ஒருத்தியை காதலித்த
குற்றத்துக்காக
காலமெல்லாம்
கண்ணீர் வடித்துக்
கொண்டிருக்கின்றேன்
ஏன் தெரியுமா?
நான் ஏழை என்று
அவள் என்னை
ஏற்றுக் கொள்ளாமல்
விட்டதற்கல்ல...
அவள் தான்
என் எதிர்கால
மனைவியென்று
எண்ணியதற்காக!!!

அளவெட்டி, ப.உதயகுமார்.


### என்னைத் தேடி வந்துவிடு!

இதயங்கள் உனக்காய்
கண்ணீர் வடிக்கின்றது
நினைவுகள் நெருப்பாய் சுடுகிறது
பிரிவுதான் என்னை வதைக்கிறது
உன் முகம் காண மனம் துடிக்கிறது
நீ இல்லாத வாழ்க்கை
பாலைவனமாய் எரிகிறது
எப்போது எம் இதயங்கள்
ஒன்று சேர்வது எனக் கண்ணீர்
வடிக்கிறது
எதற்காக இந்த உயிர் எனக்
கேட்கிறேன் - அது
உனக்காகவே என்பதால்
இன்றுவரை வாழ்கிறேன்
என்னைத் தேடி
வந்துவிடு அன்பே...



சசிக்குமார் றசி.
அச்சுவேலி.

### அதிர்ச்சிக்குள்ளாக்கிய கொஸ்லந்தை



அந்த பிஞ்சு உள்ளங்கள்
கடைசியாக துள்ளுநங்கள் – என
நினைத்து நீயொரு சரித்திரமானாயா?

நீ வராத போது
அந்த உள்ளங்கள்
எழுந்து நடந்தார்கள் – நீ
ஆவேசத்துடன் வந்தபோது
நிரந்தரமாக தூங்கிவிட்டார்கள்!

ஆகாயத்தில்
உன் வளங்கள்
அடிக்கடி சூறையாடப்படுவதாலோ...
நீயும்
பூரண சுதந்திரம் வேண்டி
அன்று மட்டும்
ஆவேசம் கொண்டாயா???

வழமையாக
பெய்கின்ற மழை...
'என்று' நினைத்தோருக்கு
உன் பெயரை
'அனர்த்தம்' என...
ஏன் மாற்றிக் கொண்டாய்?

உயிர்களின் ஆரம்பமே
தண்ணீர்தான் என்று
சொன்ன மழையே...
உயிர்களின் முடிவும்
இப்போது நான்தான் என
சொல்லியிருக்கிறாயோ?

நீ இருள் கொண்டு
வரும்போது மழை என
நினைத்து துள்ளி
விளையாடிய



K.வாலேந்திரன், கொஸ்லந்தை

### வாழவிடு...



முன்னூறு பேர் மரணத்தைத் தொட
முன்னூறு புதைகுழிகள் தோண்ட
முன்னூறு மாதங்களுக்கு மேல்
ஆகிவிடலாம் என்ற கொடூர நினைப்பிலா
இயற்கை அன்னையே!
முன்னூறு வினாடிகளுக்குள்
முன்னூறு ஜீவன்களையும்
தோண்டி எடுக்க முடியா ஆழத்தில்
மண்ணைச் சரித்துப் புதைத்துவிட்டாய்?
பச்சிளம் பாலகர், பருவச் சிட்டுக்கள்
மரணத்தின் விளிம்பிலிருந்த வயோதிபங்கள்
எவரையுமே விட்டு வைக்காது
சகதிக்குள் அமிழ்த்தி சாகடித்து விட்டாயே!

இயற்கை அன்னையே!
உன் இந்த திடீர் சீற்றத்துக்கு
என்னதான் காரணமோ...?
அடிப்படை உரிமைகளெதுவுமின்றி
ஆண்டாண்டு காலமாய் உழைத்து உழைத்து
தம் எலும்பையும் தசையையும் உரமாக்கி
தம் வியர்வைக் குருதியால் ஈரமாக்கி
இத்தேசத்தை வளமாக்கிக் கொண்டிருந்த
இந்த மீரியாபெத்த மக்களைத் தானா
உன் கோரப்பசிக்கு இரையாகத் தேர்ந்தெடுத்தாய்?
நில மகளே...
காலங்காலமாய் உன்னையே
போற்றி பூஜித்து வரும்
இவ் ஏழை மலை மக்களை
இனியேனும் சோதிக்காது
அவர்களை நிம்மதியாக வாழவிடு.



அ.சந்தியாகோ– கண்டி





# சந்தித்தவேளை...

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூஸ் மிகத் துயரமான சூழலில் உயிரிழந்துவிட்டார். கடந்த செவ்வாயன்று எகிறு பந்தொன்றை எதிர்கொண்ட வேளையில் கழுத்துப் பகுதியில் பந்து தாக்கவே, நிலைகுலைந்து அப்படியே சரிந்துபோன அவர் அதன் பின் நினைவு திரும்பவே இல்லை. வியாழன் அன்று அப்படியே அமைதியாகவே நிரந்தர உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். நவம்பர் 30ஆம் திகதி தனது 26 ஆவது பிறந்த நாளைக் கொண்டாட இருந்தவர் ஹியூஸ். 26 டெஸ்ட் போட்டிகள், 25 ஒரு நாள் போட்டிகள் ஒரேயொரு இருபதுக்கு இருபது போட்டியில் விளையாடியவர். மூன்று டெஸ்ட் சதங்கள், இரண்டு ஒரு நாள் சதங்களுக்கு உரிமையாளர். அதேபோல் முன்கண்ட வரிசையில் ஏழு அரைச்சதங்களும், நான்கு அரைச்சதங்களும் பெற்றார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் நிற்கும் இந்திய அணிக்கு எதிரான போட்டிகளுக்குத் தயாராகிக்கொண்டிருந்தவர். இந்தத் திறமைகள் நிறைந்திருந்த இளைஞனுக்கு அஞ்சலிகளும், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு அனுதாபங்களும் மலை போலக் குவிந்து கொண்டிருக்கின்றன.

ஹியூஸ் சென். வின்சன்ட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு ஓடிச்சென்ற பிரபலங்களில் ஷேன் வொட்சன், பிரெட் ஹடின், டேவிட் வோர்ணர், ரசல் டாக், ஸ்ரீவ் ஸ்மித் உள்ளிட்டோரும் அடக்கம். அதற்கு மேலாக பல இலட்சம் பேர் ஹியூஸ் மீண்டெழவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

ஆனால், அவர் எல்லாவற்றையும் கடந்து நித்திய இளைப்பாறலைத் தேடிச் சென்றுவிட்டார். இவரின் மறைவிற்கு மஹேல, டான் லீமன், இங்கிலாந்து அணி, இந்திய அணி, நேதன் லயன், ஸ்ரீவ் ஸ்மித், பிரெட்லீ, ஏ.பி.டி வில்லியர்ஸ் என்று அஞ்சலி அலைகள் பெருக்கெடுத்தோடிக் கொண்டு இருக்கின்றன.

இலங்கைக் கிரிக்கெட் சபை, ஐ.சி.சி ஆகியவையும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஹியூஸின் மறைவுக்கான சம்பவம் அரிதிலும் அரிதான சம்பவம் என்று டாக்டர் தெரிவித்துள்ளார். டாக்டர் பீட்டர் பக்னர் வெளியே வந்து பிலிப் ஹியூஸ் மறைந்துவிட்டார் என்று மிகத் துயரத்துடன் அறிவிக்கிறேன் என்றபோது, விளையாட்டு உலகம்முழுவதும் அதிர்ச்சியில் உறைந்தது. அவரது இழப்பின் துயரத்தில் தினமுரசு குடும்பமும் மிகுந்த மனவேதனையுடன் பங்குகொள்கிறது.

இன்னொரு பக்கம் நியூ சவுத் வேல்ஸ் வேகப் பந்துவீச்சாளர் 22 வயதேயான சீன் அபொட் நிலைகுறைந்து போய் உள்ளார். அவரது பந்துவீச்சையே ஹியூஸ் எதிர்கொண்டிருந்தார். எவ்வகையிலும் எந்தக் குற்றமும் அவர் செய்யவில்லை என்பதே நிதர்சனமான் உண்மை. ஆனால் அபொட் தாங்கமுடியாமல் துடிதுடித்துப் போய் இருக்கிறார்.

இந்த நிலையில் அவருக்கு நாங்கள் துணையாக இருப்போம் என்று நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட் சபை கூறியுள்ளது. அவுஸ்திரேலிய அணியின் வைத்தியர் பீட்டர் புறூக்கனர், அவருக்கு மட்டுமல்ல மைதானத்தில் நின்ற அத்தனை பேருக்குமே மிக அதிர்ச்சியான சம்பவம்தான் அது என்று கூறியுள்ளார். அபொட் வைத்தியசாலைக்கு, ஹியூசைப் பார்க்க வந்தபோது சகல தரப்பினரும் அவருக்கு ஆறுதலையும், மனத்தைரியத்தையும் வழங்கி இருக்கிறார்கள். அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் கணிசமான நேரத்தை அபொட் உடன் செலவழித்துள்ளார். ஹியூஸின் சகோதரியும் இவருடன் கணிசமான நேரத்தைச் செலவிட்டுள்ளார்.

இந்த வளர்ந்துவரும் வேகப்பந்து வீச்சாளருக்கு இந்தக் காலகட்டம் மிகக் கடுமையாகத்தான் இருக்கப்போகிறது. ஆனால் கிரிக்கெட் உலகத்தின் ஆதரவுடன் அவர் மீண்டெழுவார் என்று நம்பலாம்.






## வேகமா? விவேகமா?

கிரிக்கெட் போட்டிகளில் தலைக்கவசம் அணியும் வழக்கம், வேகப் பந்துவீச்சால் வந்துவிடவில்லை. வேகப் பந்துவீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரரை அச்சுறுத்தும் வகையில் விக்கெட்டை அன்றி, வீரரின் உடலைக் குறிவைத்து பந்துவீசத் தொடங்கியபோதே தலைக்கவசம் என்ற ஒன்றும் அவசியப் பட்டது. திறமையாகப் பந்துவீசி விக்கெட்டைச் சரிப்பது சரியா? அல்லது துடுப்பாட்ட வீரரை அச்சுறுத்தி நிலைகுலைய வைத்து விக்கெட் சரிப்பது சரியா?

இது சரியென்றால் கனவான்களின் ஆட்டம் என்பது இதுதானா? உயிர்பறிக்கும் எமனும் கனவான்களில் ஒருவரா என்ற கேள்விக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை. எகிறு பந்துவீச்சு தொடர்கதையாகத்தான் இருக்கப் போகிறது என்பதும் உண்மை.

**இதுபோக இதோ சில இரத்தத் துளிகள் -**

1986 இல் ஜமெய்க்காவில் மேற்கிந்திய வேகப் பந்துவீச்சாளர் மெல்கம் மார்ஷல் வீசிய எகிறு பந்தில் இங்கிலாந்தின் மைக்கட்டிங் உடைய மூக்கு உடைந்தது.

2005 இங்கிலாந்தின் ஹார்மிசன் வீசிய பந்தில் ரிக்கி பொன்ரிங்கின் முகம் பாதிக்கப்பட்டது.

2006 தென் ஆபிரிக்காவின் மக்காயா என்ரினி வீசிய பந்தில், அவுஸ்திரேலிய ஜஸ்ரின் லாங்கர் காயமடைந்தார்.

2014 இந்தியாவின் வருண் ஆரோன் வீசிய பந்தில் இங்கிலாந்தின் ஸ்ரூவட் புரோட் மூக்குடைபட்டார்.

இவை மிகச் சிலவே. சச்சின் உட்பட நூற்றுக் கணக்கான துடுப்பாட்ட வீரர்கள் காயமடைந்த நீண்ட பட்டியல் ஒன்றே உள்ளது.



## மனதார விரும்பினார்

பில்சிமன்ஸ் முன்னாள் மேற்கிந்தியத் துடுப்பாட்ட வீரர். பில் ஹியூஸ் உயிர் பிழைத்துவிடுவார் என்று நம்பிக்கைகொண்டிருந்தவர். என்னைப் போலவே ஹியூசும் எழுந்துவிடுவார் என்றே பில்சிமன்ஸ் கூறியிருந்தார். 1988இல் இங்கிலாந்துப் பந்துவீச்சாளர் டேவிட் லோரண்சின் பந்து வீச்சில் ஹெல்மெட் அணியாமல் விளையாடிய நிலையில் தலையில் அடிபட்டார். அப்பொழுது சிமன்சுக்கு வயது இருபத்தைந்தேதான். மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிமன்ஸ் வைத்திய சிகிச்சைக்குப் பின்னர், ஆச்சரியமான முறையில் மீண்டெழுந்து மேற்கிந்தியத் தீவுக்காக அபாரமாகத் துடுப்பெடுத்தாடினார்.

சிமன்ஸ் தற்போது தொடர்ந்து பேசுகையில், நான் பந்துவீச்சாளர் சீன் அபொட்டுக்காகவும் அனுதாபப்படுகிறேன். அவர் அதிர்ச்சியில் இருந்து மீண்டெழுவார் என்று திடமாக நம்புகிறேன் என்றும் கூறியுள்ளார்.




இன்னொருபுறம், எகிறு பந்துவீச்சு விடயத்தில் ஸ்டுவட் கிளார்க், லாறா போன்றோர் அதற்கு ஆதரவாக பேசியுள்ளனர். ஹெல்மெட் பற்றி சர்ச்சைகளுக்கும் பதில் அளித்துள்ளனர். நடந்துபோனது ஆயிரத்தில் ஒரு சம்பவம். அது துயரமான-துதான். இருந்தாலும் தலைக்கவசம் நூற்றுக்கணக்கான வீரர்களைப் பாதுகாத்துள்ளது. மேலும் எகிறு பந்துவீச்சென்பது, வேகப்பந்து வீச்சாளரின் ஒரு ஆயுதம்.. அதற்கு இப்போது ஒரு வரையறை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எகிறு பந்துவீச்சைத் தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கையெழ நியாயம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். விளையாட்டென்றாலே அதிலே சில, பல ரிஸ்க் இருக்கத்தான் செய்யும். கிரிக்கெட் விளையாட்டில் அது என்றைக்குமே இருக்கத்தான் போகிறது. இந்நிலையில் கிரிக்கெட் துறை அதிகாரிகள் இந்த விடயத்தில் கவலைப்படுபவர்களாகத்தான் இருப்பார்கள். இந்தச் சம்பவம் எப்படி நடந்தது?, இனி நடக்காமல் இருக்க என்ன செய்யவேண்டும்? ஆராய்வதுகூடப் பொருத்தமாகவே இருக்கும் என்று முடிக்கிறார்கள் இவர்கள். இவர்கள் இருவர் மட்டுமல்ல, ஓய்வுபெற்ற பல கிரிக்கெட் வீரர்கள் கூட இவர்களின் கருத்தை ஒத்துக்கொள்கிறார்கள். அதாவது எகிறு பந்துவீச்சைத் தடை செய்யக்கூடாது என்பதே அது.

விவியன் றிச்சட்ஸ் முன்பொரு முறை கூறும்போது, கவசங்கள் அணிந்து மைதானத்தில் இறங்குவது எனக்குச் சம்மதம் இல்லை என்று கூறியிருந்தார். விவியன் றிச்சட்ஸ், அனில் கவாஸ்கார் போன்றோர் தலைக்கவசம் இல்லாமலே இறுதிவரை ஆடி இன்னும் பெயர் புகழுடன் இருப்பவர்கள். ஆனால் சிலர் தலைக்கவசம் அணிந்தும் துரதிர்ஷ்ட சாலிகளாகி விடுகிறார்கள்.




# திருமணத்தை தவிர்க்கும் இன்றைய பெண்கள்



திருமணத்தை தள்ளிப்போடும் பெண்கள் சமீப காலங்களில் அதிகரித்து கொண்டிருக்கிறார்கள். படிப்பதையும், வேலை பார்ப்பதையும் அந்தந்த பருவத்தில் செய்யும் அவர்கள், திருமணத்தை மட்டும் அதற்குரிய பருவத்தில் செய்துகொள்ள மறுக்கிறார்கள்.

படித்து, வேலையில் சேர்ந்து பணம் சம்பாதித்து மகிழ்ச்சியாக வாழும் அவர்கள் திருமணம் செய்து கொண்டால் தங்கள் சுதந்திரம் பறிபோய் விடும் என்று கூறுகிறார்கள். எங்களை பெற்றோர் முழுமையாக கவனித்துகொள்கிறார்கள். நாங்கள் இளவரசிபோல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மகராணி ஆகும் ஆசையில் திருமணம் செய்துகொண்டு மனஉளைச்சல் உடைய நாங்கள் தயாரில்லை என்கிறார்கள். திருமணத்தை தள்ளிப்போடும் பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ, இல்லையோ - அந்த பெண்களின் பெற்றோர் மிகுந்த கவலையில் இருக்கிறார்கள். நம் நாட்டில் 60 சதவீத பெற்றோர் தங்கள் மகளின் திருமணத்தை பற்றி கவலைப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் இந்த சதவீதம் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 28 வயதிற்குள் பெண்களுக்கு திருமணம் நடந்துவிடவேண்டும். 30 வயதை கடந்துவிட்டால் திருமணம் கேள்விக்குறியாகிவிடும். ஆனால் 35 வயதை கடந்த பின்புகூட திருமணத்தை பற்றி யோசிக்காத பெண்களும் இருக்கிறார்கள்.

அவர்கள் பெற்றோருக்கும், சமூகத்திற்கும் சிலநேரங்களில் சுமையாகிவிடுகிறார்கள். திருமணத்தை பெண்கள் தள்ளிப்போடுவதற்கு வலுவான காரணங்கள் இருக்கவேண்டும். நிரந்தரமாக உடல்நலம் சரியில்லை. மனநிலை சரியில்லை. கடுமையான நோய்களின் பாதிப்பு போன்ற காரணங்கள் இருந்தால் பரவாயில்லை.

ஆனால் சுதந்திரம் போய்விடும். மகிழ்ச்சி பறிபோய்விடும். மற்றவர்களோடு அனுசரித்து வாழும் பக்குவம் தனக்கு இல்லை என்பது போன்ற காரணங்களை சொல்லும்போது அது கேலிக்கூத்தாகிவிடுகிறது. கல்வி, சம்பாத்தியம் எல்லாமுமே எதிர்காலத்திற்கான அஸ்திவாரம். திருமணம்தான் பெண்களின் வாழ்க்கையில் திருப்பம்.

இளமையும், அழகும் இருக்கும் பருவத்தில் திருமணம் செய்துகொண்டால் தான் வாழ்க்கையை ருசிக்க முடியும். அப்போது பலரும் தேடிவந்து பெண் கேட்பார்கள். அப்போது பார்க்கலாம்... பார்க்கலாம்... என்று பதில் சொல்லிக்கொண்டே இருந்தால் பார்க்க வந்த ஆண்கள் ஒவ்வொருவரும் வேறு பெண்களை திருமணம் செய்தபடி வாழ்க்கையில் செட்டில் ஆகிக்கொண்டே இருப்பார்கள்.

கடைசியில் தனிமை வாட்டும். அப்போது ஞானோதயம் வரும். திருமணம் செய்து கொள்ளலாம். என்று நினைப்பார்கள். அதற்குள் வாலிபம் கடந்துபோயிருக்கும். அப்போது தேடுதல் வேட்டை நடத்தினாலும் இளைஞர்கள், திருமணத்திற்கு சம்மதிக்கமாட்டார்கள். பெண்கள் பருவத்தில் இருக்கும்போது தன்னை பார்க்க வரும் வரன்களுக்கு நிபத்தனை விதிப்பார்கள்.

அவர்களே முதிர்கன்னியாக ஆன பின்பு அந்த பெண்களை மணக்க விரும்பும் ஆண்கள் நிபந்தனை விதிக்க தொடங்கிவிடுவார்கள். இப்படி கல்யாண மார்க்கெட்டில் ஓரங்கட்டப்பட்ட பெண்கள் ஏராளம் உண்டு. இன்று பெண்களின் கையில் பணம், அழகு, வேலை, கௌரவம் போன்றவை இருக்கலாம்.

அதையே நினைத்துக்கொண்டு அவர்கள் எதிர்காலத்தை முடிவு செய்துவிடக்கூடாது. அவை அனைத்தும் நிரந்தரமானவை அல்ல. காலப்போக்கில் ஒவ்வொன்றாய் கழன்று போய்விடும். இளம் வயதில் அளவுக்கு மீறிய வசதிகளுடன் வாழும் பெண்களின் கண்களை கர்வம் மறைந்துவிடுகிறது.

இன்றைய பெண்களுக்கு நாளைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கணிக்கத் தெரியவில்லை. தனிமையாக, தனியாக அவ்வளவு நீண்ட பயணத்தை மேற்கொள்ள முடியாது. வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் தனிமை ஒரு சாபமாகவும், மரணத்தைவிட கொடியதாகவும் தெரியும்.

பருவத்தை கடந்தும் திருமணத்தை தள்ளிப்போடும் ஒவ்வொருவரும், எதிர்காலத்தில் தனிமையை சந்திக்க விருப்பமனு போட்டவர்களாகத்தான் இருப்பார்கள்.

## கரும்புள்ளிக்கு முற்றுப்புள்ளி

கரட் சாறு - 1 கரண்டி,
தேங்காய் பால் - 1 கரண்டி

இரண்டையும் கலந்து முகத்துக்கு போடுங்கள். பத்து நிமிடங்கள் கழித்து அலம்புங்கள். ஒருநாள் விட்டு ஒருநாள் இப்படி செய்து வரவேண்டும்.

**உங்கள் முகத்தை மெருகூட்ட...**

முல்தானிமட்டி - 1 கரண்டி
தேங்காய் பால் - 1 கரண்டி

இரண்டையும் கலந்து முகத்துக்கு பேக் போடுங்கள். வாரம் ஒருமுறை இந்த பேக் போட்டு வாருங்கள். விரைவிலேயே அழகு மாற்றங்கள் பளிச்சிட ஆரம்பிக்கும். அதிகப்படியாக இருக்கும் எண்ணெயை முல்தானிமட்டி ஈர்த்துவிட, சருமத்தை தேங்காய் பால் மிருதுவாக்கிவிடும்.

**முகத்தில் தோன்றும் கரும்புள்ளிக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒரு அசத்தல் பேக் இருக்கிறது.**

உருளைக்கிழங்கு ஜுஸ் - 1 கரண்டி,
தேங்காய் பால் - 1 கரண்டி,
பயத்த மா - 1 கரண்டி

மூன்றையும் கலந்து பேஸ்ட் ஆக்கி, முகத்துக்கு பேக் போடுங்கள். காய்ந்ததும் அலம்பிவிடுங்கள். வாரம் இருமுறை இந்த பேக் போட்டால்போதும். முகம் பிரகாசமாக ஜொலிக்கத் தொடங்கும்.



## குளிர்கால கூந்தல் பராமரிப்பு



குளிர் காலங்களில் கூந்தல் வறண்டு காணப் படும். எனவே, கூந்தலில் கத்தாழை சாறு தடவி சில நிமிடங்கள் கழித்து மசாஜ் செய்ய லாம். இதனால் கூந்தல் மென்மையாக இருக்கும். வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை ஒலிவ் எண்ணெய் தடவலாம். இதனால் கூந்தலின் ஈரத்தன்மை வலுவடையும், எண்ணெய் சூடுபடுத்தி தலையில் தேய்த்து குறைந்த நேரம் ஊறவிட்டு குளிக்கலாம்.

அதேபோல், மூலிகை சாறு ஏதேனும் தலையில் தேய்ப்பதாக இருந்தாலும், அவற்றை அதிகநேரம் ஊறவிடக்கூடாது. மூலிகை சாறுகள் பெரும்பாலும் குளிர்ச்சி உடையவை.

அவை வெயில் காலங்களுக்கே ஏற்றது. குளிர் காலங்களில் கூந்தலை ப்ரீ ஹேர் விடுவதை தவிர்த்து பின்னுவது நல்லது. இது குளிர்ந்த காற்றில் கூந்தல் வறண்டுபோவதை தவிர்க்கும்.

**தேவையானவை: –** கோதுமை மா - ஒன்றரை கப், ரவா - 1 தேக்கரண்டி, நெய் - 2 கரண்டி, உப்பு - தேவையான அளவு, சீனி - அரை கப், ஏலக்காய்த் தூள் - அரை தேக்கரண்டி.

**செய்முறை: –** கோதுமை மாவில், ரவா, உப்பு சேர்த்து நெய்விட்டு, சிறிது, சிறிதாக தண்ணீர் விட்டு நன்றாகப் பிசைந்து 15 நிமிடம் வைத்திருங்கள். பிறகு, மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளுங்கள். தலைவாரும் சீப்பு ஒன்றை நன்கு கழுவி காயவைத்துக் கொள்ளுங்கள். சீப்பின் பற்களில் ஒவ்வொரு உருண்டையாக வைத்து இரண்டாக (சிப்பி வடிவத்தில்) மடித்துக்கொள்ளுங்கள். (மாவில் கோடு படியவேண்டும்).

பிறகு இதை எண்ணெயில் போட்டு சிவக்கும் வரை பொரித்தெடுங்கள். கடாயில் சீனியைப் போட்டு மூழ்கும் அளவுக்கு தண்ணீர்விட்டு பாகு காய்ச்சுங்கள். சீனி நன்கு உருகி பதம் வந்ததும் ஏலக்காய்த் தூளைப்போட்டு இறக்கி, ஒரு கரண்டியால் பாகை எடுத்து பொரித்து வைத்திருக்கும். பதார்த்தத்தில் சிறிது சிறிதாக ஊற்றி கிளறுங்கள். தீபி காவ்வலு தயார்.




## முகத் தழும்பு மறைய...

**முகத்தில் பருக்கள் உடைந்த பின் ஏற்படும் தழும்புகள் மறைய வேப்பிலையைக் கொதிக்க வைத்த நீரில் தினசரி முகத்தைக் கழுவவேண்டும்.**



**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-448**

**கேள்வி: முகத்தில் பருக்கள் உடைந்தபின் ஏற்படும் தழும்புகள் மறைய என்ன செய்யவேண்டும்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 15. 12. 2014**

**பரிசுப் போட்டி இல :- 446 இற்கான விடை :-**
**மலாலா யூசப்சாய்.**
**பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-**
**பி.எஸ்.ஏ.தாஹிர்,**
**மத்திய வீதி, காத்தான்குடி - 03**

**விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:**

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,**
**பரிசுப் போட்டி இல : 448**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல - 167,**
**யாழ்ப்பாணம்.**

**சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.**

**448**

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ. அட்டை இல : ........................................
விடை : ........................................
........................................
கையொப்பம் : ........................................

# விவசாயிகளுக்கு தீர்வு கிடைக்குமா?

**மட்டக்களப்பு,** அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களில் உள்ளவர்களது பிரச்சினையாக மேய்ச்சல்தரைப் பிரச்சினைகள் வளர்ந்துவருகின்றன. இந்த விடயம் நமது கட்டுரைக்கான விடயப் பரப்பாக உள்ளது.

கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக் காணிகளை ஒதுக்குவதில் பிரச்சினைகள் உள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக் காணிகளில் விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் இணைந்து கோரிக்கை விடுத்தன. நீண்டகாலமாக இருந்துவரும் இந்த கால்நடை வளர்ப்பாளர்களுக்கான மேய்ச்சல் தரைப் பிரச்சினையானது தீர்த்து வைக்கப்படாமலேயே தொடர்ந்தும் காலங்கடத்தல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கு மேல்மட்டத்தில் இருந்துவரும் அழுத்தங்களே காரணம் என கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று, மற்றும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகங்களின் எல்லைப் புறங்களாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையாகவும் விளங்குகின்ற பெரிய மாதவணை, மயிலத்தமடு போன்ற கிராமங்களில் இடம்பெறும் மேய்ச்சல் தரையே பிரச்சினைக்குரியதாக இருந்து வருகிறது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் ஏனைய சில கலந்துரையாடல்களின் போதும் இவ்விடயம் எங்களதும், மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலனத் திணைக்களத்தினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனடிப்படையில் மாவட்டச் செயலகத்தின் பணிப்புரையின் பெயரில் சம்மந்தப்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட வனபரிபாலன திணைக்கள உத்தியோகத்தர்கள், மற்றும் காவற்துறையினர் என்போர் களவிஜயம் செய்து நிலைமைகளைக் கண்டறிந்தனர். மேலும் அத்துமீறுவோரை எச்சரித்ததோடு இடத்தை விட்டு அகலுமாறும் கட்டளையிடப்பட்டது. இருப்பினும் அது நடைபெறவில்லை.

இந்த நடவடிக்கைகளை அத்துமீறிப் பயிர்ச் செய்வோர் தொடர்ச்சியாக அலட்சியம் செய்தே வருகின்றனர். மாறாக அத்துமீறியோர் தங்கள் பயிர்ச் செய்கைப் பிரதேசத்தை விரிவுபடுத்திக்கொண்டே வருகின்றார்கள்.

மாவட்ட வனபரிபாலனத் திணைக்களம், வனக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் காடழிப்போர், காட்டுக்குத் தீயிடுவோர், காடழித்துப் பயிர்செய்வோர், அங்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்போர் என்போரை கைதுசெய்து நீதிமன்றத்தின் முன்நிறுத்தி ஒரு வருட சிறைத் தண்டனை, தண்டப்பணம் அல்லது இரண்டுக்குமான தண்டனையைப் பெற்றுக்கொடுக்கலாம் என்ற சட்டவிதிக்கு இணங்கக் குறித்த அத்துமீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவும் இல்லை.

இந்நிலையில் குறித்த அத்துமீறல் நடைபெறும் பிரதேசத்திற்கு மாவட்ட வன பரிபாலனத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்கள் அத்துமீறிப் பயிர் செய்யப்படும் இடங்களின் செய்மதிப் படக்குறிப்பு விபரங்களைப் (GPS) பதிவு செய்துகொண்டு திரும்பியுள்ளார்கள்.

மேற்படி நடவடிக்கையானது குறித்த பிரதேசத்தை உரியமுறையில் வரைபடத்தில் பதிவுசெய்து குறித்த 3000க்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பைத் தற்காலிக சேனைப் பயிர்ச்செய்கைக்காக வனபரிபாலனத் திணைக்களம் அனுமதித்துள்ளது என்ற புறக்குறிப்போடு அரசாங்க அதிபரை அனுமதிக்கச் செய்து அத்துமீறுவோறுக்கு ஏதோ ஒரு விதத்திலான உரிமம் வழங்கும் தன்மை உடையதாய் அமைகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகிய நீங்கள் உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் குறித்த காணி அபகரிப்பை தடுத்து நிறுத்துமாறும் மாவட்ட வனபரிபாலன அதிகாரியை அழைத்து வனக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 7இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அனைவருடையதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் ஈரளக்குளம் 201ஏ கிராமசேவகர் பிரிவிலுள்ள மாதவணை, புதிய மாதவணை, மயிலத்தமடு, மாந்திரியாற்றுப் பகுதி என்னும் இடங்களிலுள்ள 3000 ஏக்கர் மேய்ச்சல்

### கிழக்கான்

தரைக் காணிகளை பொலநறுவை, அம்பாறை, மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு விவசாயச் செய்கைக்கு வழங்குவதற்கு வனவள திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேபோல் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கச்சைக்கொடி சுவாமிமலை 135சி கிராமசேவகர் பிரிவில் மணல் ஏத்தம் பகுதியிலுள்ள 500 ஏக்கரை கடந்த 3 வருடங்களாக வனவளத் திணைக்களம் வெளிமாவட்ட மக்களுக்கு குத்தகை அடிப்படையில் விவசாயச் செய்கைக்கு வழங்கியிருந்தது. இந்த இரண்டு பகுதிகளும் காலாகாலமாக கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளாக பயன்படுத்தப்பட்டு வந்தவையாகும்.

குறித்த காணிகளில் விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் பெருந்தொகையான கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றி பாரிய நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் குறித்த பகுதி கால்நடைகள் கடுமையான பாதிப்புக்கு உட்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்பது கால்நடை வளர்ப்பாளர்களின் குற்றச்சாட்டாகும்.

அந்தவகையில், மேய்ச்சல் தரைக் காணிகளை விவசாயச் செய்கைக்காக வெளி மாவட்டங்களுக்கு வழங்க உள்ள திட்டத்தை நிறுத்தி பரம்பரையாக கால்நடைகளின் மேய்ச்சல் தரைகளாக விளங்கும் குறித்த காணிகளை அதே கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளாக வழங்க நடவடிக்கை எடுத்தல் சிறப்பாகும்.

இவ்விடயத்தை நன்கு அறிந்துள்ள வனப்பாதுகாப்பு நாயகம், அம்பாறை மாவட்ட அரச அதிபர் மற்றும் அத்துமீறிப் பயிர்செய்யும் விவசாயிகள்மீது அக்கறை கொண்ட அம்பாறை மாவட்ட அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் குறித்த அத்துமீறியோருக்கு அம்பாறை மாவட்டத்தில் காணிகளை வழங்கிச் சட்டவிரோத செயற்பாட்டைத் தடுத்து நிறுத்திச் சட்டமீறல் செய்வோரை நல்வழிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பது அனைவருடைய எதிர்பார்ப்பாக இருந்தாலும் இது சாத்தியப்படாமைக்கு அரசியல், உயர்மட்ட அழுத்தங்களே காரணம் என்று தெரிகிறது.

மட்டக்களப்பிலுள்ள வன வளப்பிரிவு அதிகாரிகளைப் பொறுத்தவரையில் தங்களுக்கு வழங்கப்படும் கட்டளையை நிறைவேற்றுபவர்களாகவே இருக்கிறார்கள். இல்லாது போனால் அவர்களது தொழிலுக்கு ஏற்படும் பிரச்சினையை அவர்கள் கருத்தில் கொள்கின்றனர்.

ஆனாலும், 60ஆம் ஆண்டுகளில் இருந்ததான வரைபடங்களையும் எல்லைகளையும் மீள்நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக ஏற்கனவே இருந்த வரைபடத்திற்கு அமைவாக நடைபெறும் வேலைகள் பல்வேறு சிக்கல்களைக் கொண்டுவருகிறது. இந்த மீள்நிர்ணயச் செயற்பாட்டைச் செய்துமுடிக்கும் வரையிலும், மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் வேறு மாவட்டத்தினரை வராமல் தடுப்பதும், எல்லைமீறிய பிரச்சினைகளுடன் இணைந்த பிரச்சினைகளும் இருந்து கொண்டே இருக்கும்.

---




# வரம்பிட்டு வாழ்வோம்

## விரும்பியதை அடைய...

**பூவுலக மாந்தரின் புனிதமான வாழ்வியலில் பூகம்பத்தை உருவாக்குவது மோகத்தில் ஒரு வகையான காமமேயாகும். மனிதவாழ்வில் மேகங்கள் பலவகையில் ஏற்படுகின்றது. அதில் காமத்தில் வருகின்ற மேகத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக இந்த வாரம் நோக்குவோம்.**

**காமம்** என்பது ஒரு புனிதமான கருப்பொருள். இறைவன் உலகத்து உயிர்களுக்குக் கொடுத்த பேரின்ப பெருவாழ்வுப் பொக்கிஷம். மகரந்தச் சேர்க்கையில் இருந்து மனித உடலுறவுவரை அது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஓரறிவு மரங்களில் இருந்து ஆறறிவு மனிதர்கள் வரை அறிவிற்கேற்ப ஆயுதமாக இறைவன் கொடுத்த வரமிது. வரம்புமீறி வக்கிரம் கொண்டால் எம்மையே அழிக்கும் வச்சுராயுதமாகவும் இது மாறும்.

எமது சமூகத்தில் கலாசாரம் என்கின்ற போர்வையில் இது தொடர்பாக எவரும் பேசுவதில்லை. ஆனால் வளர்முக நாடுகளில் இதனை ஓர் பாடமாகக்கூடக் கற்பிக்கின்றார்கள். இன்றைய எமது சமூகத்தில் பெரியோர் முதல் சிறியோர் வரை துஷ்பிரயோகம் என்கின்ற பெயரில் அதிகரித்துவரும் அசம்பாவிதங்களிற்கு அடிப்படைக் காரணம் இது பற்றிய ஓர் அறிவின்மையாகவும் கூட இருக்கலாம். ஆகவே இது தொடர்பாக வெளிப்படையாகப் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்றாகும்.

ஆறாவது அறிவை எதற்காக இறைவன் மனிதர்களுக்குப் படைத்துள்ளான் என்பது தொடர்பான சிந்திப்பு மாத்திரமே இதற்கான தீர்வினைக் கொண்டுவரும். பகுத்து அறிகின்ற பக்குவமான அறிவினை அனைவருக்கும் இறைவன் படைத்தும் கூட பாதை மாறி நடப்பது எந்த வகையில் நியாயமானது...?

எமது உடலுக்குள் ஊறுகின்ற உணர்வுகளுக்கு விருந்தளிப்பதற்கு ஒரு காலம், ஒரு நேரம், ஓர் இடம் உள்ளது. கண்ட இடத்தில் நின்றதையும் ருசித்தால் தெருவோர ஐந்தறிவு நாய்களிற்கும் எமக்கும் என்ன வேறுபாடு...?

இந்துமதத்தில் இல்லறம் என்ற ஒன்றைப் படைத்த இறைவன் அறங்களில் ஒன்றாக இக்காமத்தை உருவகித்து அதன் தெய்வீக அணுகுமுறைகளைக் காமசூத்திரத்தில் வடிவமைத்துள்ளான்.

எப்படியும் வாழலாம் என்பதற்கு அப்பால் இப்படித்தான் வாழவேண்டும் என்கின்ற சில வரையறைகள் மனிதனிற்கு உண்டு. இரண்டு விடயங்கள் ஓர் தனிமனிதனின் வாழ்வில் சவாலாக இருக்கும்.

- சமூக கௌரவம் (சமூக அந்தஸ்து)
- உணர்வு நிலை மேம்பாடு.

இவை இரண்டும் ஒரு தராசின் இரு பக்கத் தட்டுக்கள். காம உணர்வு நிலை ஒரு தனிமனிதனின் வாழ்வில் கனதியாகும் போது சமூக கௌரவம் கனம் குறைகிறது. மாறாக சமூகக் கௌரவம் சமூக அந்தஸ்து என்கின்ற விடயங்கள் கனதியாகும் போது உணர்வுநிலை மேம்பாடு கனம் குறைகின்றது. இதில் உணர்வு நிலை கனமாகும் மனிதர்களைத்தான் நாம் கெட்டவர்கள் என்கின்றோம். மாறாக சமூக கௌரவம் அதிகரிக்கும் மனிதர்களைத் தான் நாம் நல்லவர்கள் என்கின்றோம். இந்த இடத்தில் தான் இளம் பிள்ளைகளின் திசைமாற்றம் ஏற்படுகின்றது. முன்பாலியல் பருவம், பாலியல் பருவம் என்கின்ற வயதுப் பிரிவில் இவர்கள் இருக்கின்றபோது சமூகக் கௌரவங்கள், சமூக அந்தஸ்து பற்றி இவர்களிற்குத் தெரியாது. உணர்வுநிலை மேம்பாடு மாத்திரமே உத்வேகம் பெறும். இதனால் இவ் வயதுப் பிரிவில் தவறுகள் நடைபெற அதிக சந்தர்ப்பம் உண்டு. இந்த இடத்தில் சமூக கௌரவம், சமூக அந்தஸ்துக்களை ஏதோ ஒரு வழிகளில் புகுத்த எத்தனிக்கவேண்டும்.



இதன்மூலம் உணர்வுகள் அடக்கப்படும் என்பது பொருளல்ல. திசைமாற்றம் ஏற்படும் என்பதேயாகும்.


எந்தவோர் மனித உணர்வுகளையும் அடக்கக் கூடாது. ஏனெனில் அது வேறு வடிவத்தில் விஸ்வரூபமெடுத்து மனித வாழ்வை சீர்குலைக்குமென உளவியலாளர்கள் முன்மொழிகின்றனர். இதனால் தான் மேலைத்தேய நாடுகளில் பாதுகாப்பான உடலுறவுகள் அனுமதிக்கப்படுகின்றது. இதனால் தான் அம்மக்களிற்கு உடலிறுக்கம் தளர்ந்து அதற்கப்பால் அறிவியல் சிந்தனைகளெல்லாம் விருத்தியடைகின்றதெனவும் எம்மவர்கள் கலாசாரம் என்கின்ற பெயரில் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதனால் தான் அதை விடுத்து அப்பால் சிந்திக்க முடியாத கட்டங்கள் உருவாகின்றது எனவும் வாதிடுகின்றனர். இந்த இடத்தில் வேறு துருவத்தில் சிந்தித்தால் உணர்வுகளைப் படைத்த இறைவனிற்கு அன்றே உளவியல் தெரிந்தமையால்தான் சுயஇன்பத்தை சுதந்திரமாய் விட்டுள்ளான். சமூக கௌரவத்துடனும் கட்டுப்படுத்தல் எதிர்விளைவின்றியும் இதன்மூலம் வாழலாமே...!

எது எப்படியிருப்பினும் இது இப்படித்தான் என்கின்ற வரம்போடு வாழ்வோம்.

தொடர் -33

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



**அளுத்கம பொலிஸ் நிலையத்தில் முஸ்லிம் இளைஞர்கள் தாக்கப் பட்ட விவகாரம் – அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் பணிப்பு**

அளுத்கம பொலிஸ் நிலையத்தில் வைத்து முஸ்லிம் இளைஞர்கள் தேரரினால் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பக்கச் சார்ப்பற்ற உரிய விசாரணை ஒன்றினை துரிதமாக முன்னெடுத்து அது தொடர்பிலான முழுமையான அறிக்கை ஒன்றினை ஒரு மாத காலத்திற்குள் மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு களுத்துறை நீதிவான் நீதிமன்றம் 26.11.2014 அன்று உத்தர விட்டது.

அதேவேளை, அளுத்கம வன்முறை களுக்கு மூலகாரணமாக அமைந்த தேரர் ஒருவர் பத்திராஜ கொடை பகுதி யில் வைத்து முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் பக்கச் சார்ப்பற்ற உரிய விசாரணை ஒன்றினை துரிதமாக முன்னெடுத்து அது தொடர்பிலான முழுமையான அறிக்கையையும் குறித்த தினத்தில் மன்றில் சமர்ப்பிக்குமாறும் களுத்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

1489ஆம் இலக்கத்தைக் கொண்ட குறித்த வழக்கு விசாரணைகள் 26.11.2014 அன்று களுத்துறை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பொலிஸாருக்கு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மௌலவி ஒருவர் உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகள் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் தலைமையில் சட்டத்தரணிகளான சப்ராஸ் ஹம்ஸா மற்றும் ரமீஸ்பஷீர ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

பிரதிவாதிகள் மூவருக்கும் ஏற் கெனவே பிணை வழங்கப்பட்டிருந்த நிலையில் அவர்களும் மன்றுக்குச் சமூகமளித்திருந்தனர்.

இந்நிலையில் பிரதிவாதிகள் சார்பில் வாதங்களை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் இட்டுக் கட்டப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பில் தமது கட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் நேர்மையான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தமது கட்சிக்காரர்களை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்தபோது பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து சில தேரர்கள் அவர்களை தாக்கியதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

"அத்துடன் அளுத்கம வன்முறை களுக்கு மூலகாரணமாக கருதப்படும் இந்த வழக்கு மிக நீண்டநாட்களாக முன்னேற்றம் இன்றித் தொடர்கிறது.

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை ஒத்த எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை.

உண்மையில் குறித்த தேரர் தாக்கப்பட்டாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை செய்யவில்லை. வாய்வழியே பரவிய வதந்தியினை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய் துள்ளனர்.

நேர்மையான விசாரணை ஒன்று

> *"பொதுபலசேனா போன்ற அமைப்புகள் தாம் விரும்பும் நபருக்கு ஆதரவை வழங்கும் உரிமையுள்ளது. இதனால், அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது அந்தளவுக்கு சிக்கலானதல்ல.*
>
> *அதேவேளை ஜாதிக ஹெல உறுமய அடுத்த சில தினங்களில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள உள்ளது.*
>
> *குறிப்பாக நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் நாடாளு மன்றத்தின் சுதந்திரம் போன்ற விடயங்கள் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது எமது தேவை. அது பற்றி அடுத்த சில நாட்களில் அறியத்தருவோம் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார்."*

இடம்பெறவே இல்லை.

இது தொடர்பிலான நேர்மையான, துரித விசாரணை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தி சட்டத்தரணிகள் சங்கம் சட்ட மா அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தது.

இதனைத் தொடர்ந்து சட்டமா அதிபர் இந்த சம்பவம் குறித்த துரித, நேர்மையான விசாரணை ஒன்றுக்கு பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

அது தொடர்பான அனைத்து ஆவணங் களையும் மன்றில் சமர்ப்பிக்கிறேன்.

இவற்றை மன்றில் பதிவு செய்ய வேண்டும் எனக்கூறி ஆவணங்களை நீதிவானிடம் சமர்ப்பித்தார். எனினும் இன்றுவரை நேர்மையான துரித விசாரணை ஒன்று இடம்பெறவில்லை" எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். சுஹைர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து சட்ட மா அதிபர் பொலிஸ் மா அதிபர் ஊடாக மேற்கொள்ள உத்தரவிட்ட விசாரணை தொடர்பில் மன்றில் ஆஜராகியிருந்த அளுத்கம பொலிஸாரை நீதிவான் வினவினார்.

தமது உயர் அதிகாரிகளுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்பட்டதா என தமக்கு தெரியாது எனவும் அவ்வாறு பொலிஸ் மா அதிபர் ஊடாக விடுக்கப் பட்ட உத்தரவு தமக்கு கிடைக்கவில்லை எனவும் மன்றில் ஆஜராகியிருந்த பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் துரித பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றினை மேற்கொண்டு குற்றச்சாட்டில் உள்ளவாறு சம்பவம் ஒன்று இடம்பெற்றதா எனவும் ஏனைய விடயங்களையும் உள்ளடக்கிய முழுமை யான அறிக்கையினை மன்றுக்கு சமர்ப் பிக்குமாறும் அளுத்கம பொலிஸாருக்கு உத்தர்விட்ட நீதிவான் மேலதிக விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

பொதுபலசேனா மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு என உத்தி யோகபூர்வமாக அறிவிப்பு இடம்பெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப்போவதாக பொதுபலசேனா உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.



27.11.2014 அன்று கொழும்பில் இடம்பெற்ற செய்தி யாளர் மாநாட்டில் உரையாற்றிய அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் இதனை தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஞானசார தேரர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரியை தோற்கடிக்க தமது அமைப்பு முழுப்பலத்தையும் பயன்படுத்தும் என்றும் நாடுமுழுவதும் சென்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவுப் பிரசாரத்தில் ஈடுபடும் எனவும் நிபந்தனையற்ற ஆதரவை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கும் எனவும் அறிவித்தார்.

மஹிந்தவுக்கு ஆதரவை வழங்கி நாட்டை சூழ்ச்சிகளில் இருந்து பாதுகாக்கப் போவதாகவும் அவர் அறிவித்தார்.

**மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் – ஜாதிக ஹெல உறுமய**

ஜனவரியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் ஏன 27.11.2014 அன்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் ஜாதிக ஹெல உறுமய அமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்துடனான அந்தக் கட்சி யின் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் மூடப்பட்டுவிட்டன என்று ஜாதிக ஹெல உறுமய பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் நல்லாட்சிக்காக நாங்கள் முன்வைத்துள்ள கொள்கை தொடர்பில் நாங்கள் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தவுள்ளடன் அதனூடாக சாதகமான பதிலை எதிர்பார்க்கின்றோம் என்றும் ஹெல உறுமய பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க அறிவித்துள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவையோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்ஹவையோ எமது நாட்டின் தலைவர் களாக்கும் தேவை எமக்கு இல்லையென ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் இணைத் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், ஜனாதிபதி இன்று மின்சாரக் கம்பங்களில் மட்டுமே இருக்கின்றார். மாறாக அவர் மக்களின் மனங்களில் இல்லை.

மிகவும் நாகரிகமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை நாம் ஏற்கவேண்டும்.

எனவே நாம் மாபெரும் சக்தியாக அடுத்த வாரம் வெளிவருவோம்.

எமது இந்த தீரமானம் தீரக்கமானது. ஆனால் அது கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

இந்த நாடு எதிரகால சந்ததியினரின் நலனை நோக்காகக்கொண்டு செயற் படவில்லை. போதைப்பொருள் வியாபாரிகளே இந்த நாட்டை நிர்வகிக்கின்றனர்.

எமக்கு ஜனாதிபதியுடன் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் நீதிக்காகப் போராடுகின்றோம். இலங்கையின் பௌத்த சக்திகள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேனவுடன் இணைந்து எதிர்கால தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனைவரும் காணமுடியும்.

பொதுபலசேனா அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி யுள்ளமை தொடர்பில் கருத்து வெளி யிட்டுள்ள ரத்ன தேரர், எந்த அமைப்பு யாரை ஆதரித்தாலும் இலங்கை பௌத்த சமூகம் தமது அமைப்புடன் அணிதிரளும்.

சமூக பொருளாதார பிரச்சினை சம்பந்தமாக பௌத்தர்களின் எழுச்சி யானது நாட்டின் வரலாற்றில் ஏற்பட்டி ருக்கிறது. இதனால், பௌத்த சமூகம் இந்த காரணத்தின் அடிப்படையில் முன்னோக்கி வருவதைக் காணமுடியும்.

பொதுபலசேனா போன்ற அமைப்பு கள் தாம் விரும்பும் நபருக்கு ஆதரவை வழங்கும் உரிமையுள்ளது. இதனால், அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ஆதரவு வழங்குவது அந்தளவுக்கு சிக்கலானதல்ல.

அதேவேளை ஜாதிக ஹெல உறுமய அடுத்த சில தினங்களில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள உள்ளது.

குறிப்பாக நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் நாடாளுமன்றத்தின் சுதந்திரம் போன்ற விடயங்கள் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது எமது தேவை. அது பற்றி அடுத்த சில நாட்களில் அறியத் தருவோம் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிசாந்த சிறி வர்ணசிங்ஹ மாநாட்டில் குறிப் பிடுகையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஊழலை போஷிக்கவே பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டின் இராஜதந்திர சேவை செயற்திறனற்றுக் காணப்படுகின்றது. நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு எதிரான குற்ற அறிக்கை மிகவும் நீளமானது.

நாட்டுக்கு 'எத்தனோல்' கொண்டு வருகின்றவர்களின் கோப்புகளே ஜனாதிபதியிடம் இருக்கவேண்டும். வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீள்குடியேற்றுவதற்கு ஏன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பயன்படுத்தப் படவில்லை. அதிகாரத்தை ஒருவர் வைத்துக் கொண்டு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

(தொடரும்)

- இலவங்கத்தை நீர்விட்டு மைய அரைத்து நெற்றிமீதும் மூக்குத்தண்டு மீதும் பற்றாகப் போட்டு வைக்க தலைப்பாரம், தலையில் நீரேற்றம், மூக்கடைப்பு ஆகியன குணமாகும்.
- இலவங்கத்தை லேசாக வதக்கி வாயிலிட்டுச் சுவைப்பதால் தொண்டைப்புண் ஆறும். ஈறுகள் கெட்டிப்பட்டு பற்கள் உறுதிபெறும்.
- 100 மி.லி. வெந்நீரில் 8 -10 கிராம் இலவங்கத்தை தூள் செய்துபோட்டு அரை மணிநேரம் மூடி வைத்திருந்து பின்னர் வடிகட்டி வேளைக்கு 4-ல் ஒரு பங்கு அளவு உள்ளுக்கு கொடுப்பதால் பசியைத் தூண்டும், கழிச்சலைப்(பேதி) போக்கும். அத்தோடு

# வாந்தியை கட்டுப்படுத்தும் இலவங்கம் (கராம்பு)

கர்ப்பிணிப்பெண்களின் வாந்தி நிற்கும்.
- இலவங்கமும் நிலவேம்பும் சமன் எடுத்து தூளாக்கி தீ நீர் தயாரித்துக் கொடுக்க பசி உண்டாகும். அயர்ச்சி (சோர்வு) நீங்கும், கடுஞ் சுரத்துக்குப்பின் வந்த களைப்பும் போகும்.
- இலவங்க எண்ணெய் 2 அல்லது 3 துளி எடுத்துக்கொண்டு அத்துடன் போதிய சீனி சேர்த்து உள்ளுக்கு சாப்பிட மயக்கம், பேதி, வாந்தி, செவிநோய், சிவந்த மச்சம், கறுத்த மச்சம் ஆகியன போகும்.
- பல்சொத்தை கண்டபோது பஞ்சில் சிறு அளவு இலவங்க எண்ணெய் தேய்த்து மேலே சிறிதுநேரம் வைத்திருக்க பல் வலி உடனே குணமாவதுடன் சொத்தையும் நாளடைவில் குணமாகும். பற்களின் இடையே வசிக்கும் புழுக்கள் வெளியேறும்.
- இலவங்கத்தை விளக்கில் கொளுத்தி அதனின்று வருகிற புகையை வாயினுள் கொள்வதால் தொண்டைக் கம்மல், தொண்டைப் புண் முதலியன குணமாகும்.
- சிறிது கிராம்பு தூளோடு தேன்சேர்த்து சாப்பிட வாந்தி உடனே கட்டுப்படும்.
- 4 கிராம் கிராம்பை 3லீற்றர் தண்ணீரில் இட்டு கொதிக்க வைத்து பாதியாக சுண்டச்செய்து வடிகட்டி வைத்துக்கொண்டு மூன்று வேளை பருக கொலரா என்னும் வாந்திபேதி குணமாகும்.
- கிராம்பு எண்ணெய் 3 துளியோடு தேனும், பூண்டுச் சாறும் சேர்த்து உள்ளுக்கு சாப்பிட ஆஸ்துமா என்னும் மூச்சிறைப்பு, சுவாச நாள சுழற்றி குணமாகும்.
- இலவங்கத்தை மருந்தாகப் பயன்படுத்துகையில் 3 முதல் 5 கிராம் வரை வெந்நீரோடு எடுத்துக் கொள்ளலாம்.
- பல நல்ல குணங்களை இலவங்கம் பெற்றுள்ள போதும் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டபோதும் இரத்தம் உறையும் தன்மை குறைவாக இருக்கும்போதும் இலவங்கத்தை தவிர்ப்பது நல்லது.





# எடையை குறைக்கும் தூக்கம்!



எடை குறைய டயட், உடற்பயிற்சி எனப் பலர் முயற்சித்துக் கொண்டிருக்கையில், ஒழுங்கான தூக்கம் இருந்தாலே தேவையற்ற எடை குறைய வாய்ப்புள்ளது என புதிய ஆராய்ச்சி ஒன்று தெரிவித்துள்ளது.

தூக்கம் பசித்தன்மையை தூண்டும் ஹோர்மோன் செயற்பாட்டை சீராக்கும். தூக்கமின்மையால் அதிகம் சாப்பிடநேரிடும். சமீபத்திய ஆராய்ச்சி ஒன்றில், சரியாகத் தூங்காத பெண்கள், முறையாகத் தூங்கும் பெண்களைவிட 300 கலோரி அதிக உணவு உட்கொள்வதாகத் தெரியவந்துள்ளது.

அதேபோன்று தொப்பைவர, கவலையும் மன அழுத்தமும் முக்கிய காரணிகள். சரியாகத் தூங்கும் போது இவை இரண்டையும் விரட்டலாம் என்று சொல்லப்படுகின்றது.

7 முதல் 9 மணிநேரம் வரை தூங்கும் பெண்களை விட குறைவான நேரம் உறங்கும் பெண்களுக்கு எடை வேகமாகக் கூடுகிறது. ஏழு மணிநேரத்திற்குக் குறைவாகவோ, ஒன்பது மணி நேரத்திற்கு அதிகமாகவோ தூங்குபவர்கள், மற்றவர்களைவிட, பருமனாகவும், எடைபோடவும் அதிக வாய்ப்புகள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு நன்றாக உறங்கும்போது, அடுத்த ஒரு நாள் முழுவதுக்கும் தேவையான ஆற்றல் கிடைக்கும். உடற்பயிற்சி தூக்கத்தை சீராக்க உதவும் என்பதால், நம் தூங்கும் முறையை சரி செய்வதன்மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஆரம்பிக்கலாம்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே
A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"
வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்
வடபுலத்தான் எழுதுவது...




*சசிகுமார் றசி, அச்சுவேலி.*

# சந்தேகப் புயல்

அவசர அவசரமாக வேலைகளை முடித்த சந்தியா கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் காலை 7 மணியைக் காட்டியது. அதுவரைக்கும் கட்டிலில் உறங்கிக்கொண்டிருக்கும் கணவன் சுரேஸ் அருகில் சென்றவள் என்னங்க 7 மணியாகிவிட்டுது. என்னும் எழும்பாமல் தூங்கிக் கொண்டு இருக்கிறீர்கள். முகூர்த்த நேரம் 10 மணிக்கு. அதுக்குள்ள நாம போகவேணுமல்லே.

“சந்தியாவின் குரல்கேட்டு எழுந்த சுரேஸ் முகூர்த்த நேரத்துக்கு போறதுக்கு நீயா மணப்பெண்... காலங்காத்தாலை சும்மா கொக்கரிக்கிறாய்” என எரிந்து விழுந்தான். இது ஒன்றும் சந்தியாவிற்கு பதிதில்லை. பத்து வருசமாகக் கேட்கும் வார்த்தைகள் தான்.

என்ன செய்வது பெற்றவர்களின் வரட்டுக் கௌரவத்தால் அவள் வாழ்க்கை கண்ணீருடனேயே கழிகிறது. எத்தனையோ கொடுமைகளை எல்லாம் தாங்கி அவள் வாழ்கிறாள் என்றால்... அதற்கு காரணம், அவளின் பத்து வயது மகனுக்காகத்தான்.

இன்று அவளின் தோழி ஒருத்திக்கு திருமணம். அதற்கு போவதற்கே சந்தியா சுரேசை அவசரப்படுத்தினாள்.


திருமண மண்டபத்திற்குள் சென்ற சந்தியாவைக் கண்ட அவள் நண்பர்கள் அவளை நலம் விசாரித்தார்கள். எதற்கெடுத்தாலும் சந்தேகப்படும் கணவன்முன் ஆண் நண்பர்களுடன் கதைக்க தயங்கினாள் சந்தியா. மண்டபத்தில் ஓர் பக்கமாக அமர்ந்தாள். அப்போது அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கௌதம் எதிரில் அமர்ந்து இருந்தான்.

சந்தியாவிற்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. சுரேசின் கண்கள் சந்தியாவையும் கௌதமையுமே நோட்டமிட்டது. அதிலே இருக்கப் பிடிக்காமல் சந்தியா எழுந்து வெளியே வந்தாள். எப்படியாவது சந்தியாவின் நலனை விசாரிக்கவேண்டும் என்ற ஆவலில் கௌதமும் எழுந்து சந்தியா அருகில் சென்றான். அப்போது சுரேஸ் வருவதைக்கண்ட கௌதம் சுவரின் மறைவில் மறைந்துகொண்டான்.

அங்கே வந்த சுரேஸ் ஏய்.. சந்தியா அவன் வருவான் என்று தெரிந்துதான் இவ்வளவு அவசரப்பட்டு வந்தியா? என்னங்க சொல்லிறீங்கள்... உங்கள் வாயில் நல்ல வார்த்தையே வராதா? தோழியின் திருமணம் என்பதால் அவருக்கும் தோழிதான். அதனால் வந்தார். என்னங்க இப்படி எல்லாம் கதைக்கிறீர்கள். அடியே உன் நாடகம் எல்லாம் எனக்கு தெரியுமடி. உனக்கு எத்தனை நாள் சூடுபோட்டும் திருந்த மாட்டியாடி. அந்த வார்த்தைகள் கௌதமை முள்ளாய் குத்தியது. அட. கடவுளே! இவ்வளவு கொடுமை-களை எல்லாம் அனுபவித்தா சந்தியா வாழ்கிறாய்.

நான் பாவியாகிவிட்டேன். கௌதம் கண்ணீர்விட்டு அழுதான். சந்தியா புறப்பட்டு சென்றாள். வீட்டுக்கு வந்ததும் நடத்தவேண்டிய சடங்கு எல்லாவற்றையும் சுரேஸ் நடத்தினான். சந்தியா அழுது குளறினாள். எதுவுமே அறியாத பாவி அவள். இவ்வளவு கொடுமைகளையும் அனுபவிக்கிறாள். சந்தியாவின் நினைவுகள் ஒரு கணம் பின்நோக்கி நகர்ந்தது.

சந்தியா மிகவும் வசதியான குடும்பத்தில் ஒரே பிள்ளையாக பிறந்தாள். சந்தியாவின் பெற்றோர் பணத்திமிரும் வரட்டுக் கௌரவமும் பிடித்தவர்களாகவே வாழ்ந்தார்கள். சந்தியா படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. சாதாரண தரப் பரீட்சையில் அதிவிசேட சித்தி அடைந்தவள். உயர்தரப் படிப்பிற்காக நகர்ப்புறம் பாடசாலை ஒன்று வந்தாள். அங்கேதான் கௌதமை சந்தித்தாள். சந்தியாவின் அழகில் மயங்கிய கௌதம் அவளை ஒருதலையாகக் காதலித்தான். எப்படியாவது அவளிடம் சொல்லவேண்டும் என்று நினைத்தவன்.



ஒரு கடிதம் எழுதி அவளின் புத்தகத்துக்குள் வைத்தான். வீட்டுக்கு சென்ற சந்தியா புத்தகத்தை விரித்தாள். அதற்குள் கடிதம். அதைப் படித்தாள்.

கற்பனையில் என்னை சிறகடிக்க வைத்தவளே

கவி வடிவில் எழுதுகின்றேன் உனக்கொரு புத்தகமே

காலையிலே பூத்துநிற்கும் கல்லூரிப் பூவே

மாலையிலே என் மதிமயங்க வைக்கிறாயே

காலம், எல்லாம் உன் காலடியில் நான் இருக்க

காவியமே என்னை உன்னவன் ஆக்கிவிடு.

அன்புடன் கௌதம்.

கடிதத்தைப் பார்த்த சந்தியாவிற்கு கௌதம்மீது காதல் வந்தாலும் பெற்றவர்களை நினைக்கப் பயமாக இருந்தது. அவனைக் காதலிக்கிறேன் என்று அறிந்தால் தன் படிப்பையே நிறுத்திவிடுவார்கள் என யோசித்தாள்.

அவனைக் காணும் போதெல்லாம் ஒரு புன்னகையையே விட்டுச் சென்றாள். அவன் எழுதிய கவிதையை திரும்பத் திரும்பப் படித்து ரசித்தாள். ஆனால் கல்லூரி முழுவதும் சந்தியா - கௌதம் காதல் எனக் கதை பரவியது. இது எப்படியோ அவள் தந்தைக்கும் தெரிய வந்தது.

சினம் கொண்டு எழுந்த சிங்கம் போல் வெகுண்டெழுந்தார். அவளை வீட்டுக்காவலில் வைத்தார். சந்தியா, எவ்வளவோ போராடினாள். தான் கௌதமை காதலிக்கவில்லை என்றும் தன்னை படிக்கவிடுமாறும் கெஞ்சிக் கேட்டாள். வரட்டுக்கௌரவம் பிடித்த தந்தை அவள் சொல்லுவது எதையும் கேட்கவில்லை.

தன் அந்தஸ்துக்கு ஏற்றமாதிரி மாப்பிள்ளை பார்த்து சுரேசை கட்டி வைத்து வீட்டோடு மாப்பிள்ளை ஆக்கினார். ஆரம்பத்தில் நல்லவனாக நடித்த சுரேஸ் கொஞ்சநாள் போக தன் சுயரூபத்தை காட்ட ஆரம்பித்தான்.

குடித்துவிட்டு வருவது... “நீ இன்னொருத்தன் மனைவிதானேடி” என சந்தியாவை கொடுமைப்படுத்துவது. இதை எல்லாம் பார்த்த அவளது பெற்றோர் தலையில் அடித்துக் கொண்டனர். கிளியை வளர்த்து பூனையின் கையில் கொடுத்த மாதிரி ஆகிவிட்டதே என கலங்கினார்கள். தாங்கள் தவறு செய்துவிட்டோமே என்று கண்ணீர் வடித்தனர்.

நாளடைவில் நோய்வாய்ப்பட்டவர்களாய் ஒருவர்பின் ஒருவராக போய் சேர்ந்துவிட்டனர். எல்லாமே விதி என நினைத்த சந்தியா வாழ்க்கைச் சக்கரத்தை கண்ணீருடன் ஓட்டுகிறாள். நினைவில் இருந்துமீண்ட சந்தியா கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தெறிந்துவிட்டு தன் கடமைகளை செய்ய ஆரம்பித்தாள்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. சந்தியா கோயிலுக்கு போவதற்காய் ஆயத்தமாகிக் கொண்டு இருந்தாள். அப்போது வாசலில் தபால்காரன். சந்தியா நீங்கள்தானே... ஓம் நான்தான் இந்தாங்க... உங்க பெயருக்குத்தான் கடிதம். கடிதத்தை வாங்கிய சந்தியா அவசரமாக பிரித்துப் பார்த்தாள்.

என் மனச்சோலையில் மணம் வீசிச் சென்ற

மாற்றான் தோட்டத்து மல்லிகையே - உன்

நிழலைக்கூட நான் தொட்டத்தில்லை. ஆனாலும்

விதி உன்னை வாழவிட்டதில்லை.

நான் தவறு செய்துவிட்டேன் சந்தியா உன் கழுத்தில் தாலி ஏறிய அன்றே என் கழுத்தில் தூக்குக்கயிறு ஏறியிருக்க வேணும். நான் இன்றுவரை உயிரோடு இருந்ததால் இவ்வளவு கொடுமைகளையும் சந்தித்துவிட்டாய். இனிமேலாவது உன் வாழ்வில் வசந்தம் வீசட்டும். இந்த மடல் உன் கைக்கு கிடைக்கும்போது என் உயிர் அந்த உடல் உன்வாசல் கடக்கும்.

அன்புடன் கௌதம்.

சந்தியாவின் கையில் இருந்த கடிதம் நழுவி கீழே விழுந்தது. அங்கே வந்த சுரேஸ் அதை எடுத்துப் பார்த்தான். அப்போது கௌதமின் உடல் பாண்ட் வாத்தியம் முழங்க, சோக கீதம் இசைக்க அவள் வாசலைக் கடந்தது.

சுரேஸ் செய்வதறியாது திகைத்து நின்றான். தான் செய்த தவறை அப்போதுதான் உணர்ந்தான். சந்தியாவிடம் மன்னிப்புக்கேட்டான். “கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதுக்குங்க...” என சந்தியா தேம்பித்தேம்பி அழுதாள். அவள் கண்ணீர் சுரேசின் கல் மனதையும் கலங்கவைத்தது.

சந்தேகப் புயல் என் வாழ்க்கையை சிதறடித்துவிட்டதே என அப்போதுதான் உணர்ந்துகொண்டான்.

# காதல் திருமணமா?

மகனுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. மகனுக்குப் பார்த்த பெண்ணுக்கு பெரிய நிறுவனத்தில் வேலை. கிராமத்தில் இருக்கும் தனது அம்மாவிடம் இதைச் சொல்லக் கிளம்பினார் வேலாயுதம்.

அம்மா பழமைவாதி. வேலை பார்க்கும் பெண் என்று சொன்னால் என்ன சொல்வார்களோ? என்று நினைத்துக் கொண்டே, கிராமத்தில் உள்ள அம்மாவின் வீட்டுக்குள் நுழைந்தார் வேலாயுதம்.



வேலாயுதத்தின் அம்மாவுக்கு வயது 85. நகரம் எல்லாம் எனக்கு ஒத்துவராது என்று சொல்லி, கிராமத்திலேயே தங்கிவிட்டவர். வேலாயுதம் சொல்லியதை எல்லாம் கேட்டுவிட்டு, “இது காதல் திருமணமா?” என்று கேட்டார் அம்மா.

வேலாயுதம் பதற்றத்துடன் அவசர அவசரமாக மறுத்தார். “இல்லையில்லை... பெரியவங்க பார்த்துச் செய்யிற மேரேஜ்தான்”

அம்மா சொன்னார்: “என்னடா... பிள்ளை வளர்த்திருக்கே? நகரத்திலே வளர்ந்த பையனுக்குக் காதல் பண்ணக் கூடவா தெரியாது?”




# உலக எயிட்ஸ் தினம்

அளவெட்டி, ப.உதயகுமார்

**இன்று** நாம் விஞ்ஞான யுகமொன்றிலே நீண்டதூரம் முன்னேறிப் பயணித்துக் கொண்டிருந்தாலும், புதுப்புது வரவுகளை மனிதனால் கண்டுபிடிக்க முடிந்தாலும், நோய் ஒன்றுக்கான மருந்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது கவலைக்குரிய செய்தியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

வராமல் தடுக்கலாம், வந்தால் தடுக்கமுடியாது. அது மரணத்தின் வாசல்வரை கூட்டியேபோகும். அது தான் எயிட்ஸ். எயிட்ஸ் என்பது ஒரு சாதாரண நோய் அல்ல, இது ஒரு ஆட்கொல்லி நோயாகவே வலம்வந்து கொண்டிருக்கிறது!

மனிதகுலத்தை அச்சுறுத்தவென்று தோன்றிய நோயாக எயிட்ஸ் உள்ளது. எயிட்ஸ் எனும் கொடியநோய் மனித குலத்தினை அச்சுறுத்திவருகின்ற போதிலும், அதனால் உண்டாகக்கூடிய விளைவுகளும் தாக்கங்களையும் மனித குலம் கண்டுகொள்வதேயில்லை.

ஏனென்றால், இன்றைய நவீன உலகம் புதுப்புது வரவுகளை மனித பாவனைக் கென்று தந்தவண்ணமுள்ளது! இந்தப் புதிய வரவுகள்மூலம் சிறியோர் முதல் பெரியோர்வரை இத்தகைய புதிய பொருட்களை பாவிப்பதன்மூலம் உண்டாகக்கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்புகள் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு உள்ளது. கணினி, மற்றும் கான்போன் மூலம் இணையத்தளம் மூலமாக ஆபாசப்படங்களை நிறையவே காணலாம், போதாக்குறைக்கு மெமறிகாட் வழியாகவும் ஆபாசப் படங்கள் வந்துள்ளது! இவற்றின் ஆதிக்கம்தான் எயிட்ஸின் ஆதிக்கம். அதிகரிக்க முக்கிய காரணியாக உள்ளது!

எயிட்ஸ் என்பது ஆண் - பெண் பாலுறவுமூலமே பரவிவருகின்றது. கண்டதும் காதலாகி, அது காமமாகி இறுதியில் பாலியல் உறவுவரை உறவுகள் கொண்டுசெல்கின்றது! இதைவிட பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்துச்செல்கின்றது. இத்தகைய பாலியல் தொழிலாளிகளுடன் பாதுகாப்பற்ற வகையிலான பாலுறவு கொள்வதனால் எயிட்ஸ் இலகுவாக தொற்றிக் கொள்கிறது!

கணவன், மனைவி தவிர்ந்த அறிமுகமற்றவர்களின்மூலம் உண்டாகக் கூடிய பாலுறவும் எயிட்சை தொற்ற வைக்கும் நிலைமை உள்ளது!

வெளிநாடுகளுக்கு தொழில் பெற்றுச் சென்றவர்கள் மூலமாகவே இலங்கை யில் எயிட்ஸ் தொற்று அறிமுகமாகி உள்ளது! இங்கிருந்து பணிக்காக வெளிநாடு சென்றவர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள விபச்சாரப் பெண் களுடன் உடற்சுகம் கண்டு, உடலிலே எயிட்சையும் காவிக் கொண்டுவந்து இலங்கையில் பரப்பியுள்ளனர்.

இந்த நோயானது ஒருவருக்கு தொற்றுமானால் அது வீரியம் அடைந்து தாக்கத்தினை உண்டு பண்ண நீண்ட கால வருடங்களாகும். இது வளர்ந்தவர் களிடம் 08 தொடக்கம் 12 வருடங்கள் வரையும், சிறியவர்களாயின் 02 முதல் 05 வருடங்கள் வரை நோயின் அறிகுறி தோன்ற காலங்கள் எடுக்கும். இதனால் தான் இந்த நோயின் கொடூரம் உடனே யாருக்கும் புரிவதில்லை.

## எயிட்ஸ் எவ்வாறு, எங்கே தோன்றியது?

எயிட்ஸ் என்பது கியூமன் இம்டிப்பி சியன்சி என்னும் வைரசினால் உண்டாகின்றது. அக்கொயட்டு இம்யூன் டிப்பியன்சி சின்ட்ரோம் (ACGUI RED IMMUNE DEFICI ENCY SYNDROM) அதாவது உருவாக்கப்பட்ட நோய் எதிர்ப்புத்தன்மை குறைவின் காரணமாக ஏற்படும் நோய் அறிகுறிகளின் தொகுப்பு எனப் பொருள்படும்.

1981ஆம் ஆண்டு அமெரிக்காவிலேயே இந்நோய் பற்றி முதலில் கண்டறியப் பட்டன. எயிட்ஸ் நோயானது ஆபிரிக்கா காட்டில் காணப்பட்ட 'கிறீன் பீஸ்' என்ற குரங்குகளின் உடலில் உள்ள சிமியின் இம்யூனோ 'டிப்பியன்சி' அக்குரங்குகளின் இறைச்சியை அல்லது இரத்தத்தை பச்சையாக மனிதர் உட்கொண்டதனா லேயே, மனித உடலுக்குள் நுழைந்ததன் விளைவாக மனிதனுக்கு எயிட்ஸ் நோய் உண்டாகியது. இது 1930-களில் இடம் பெற்றிருப்பதாக விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

1960-களில் ஆபிரிக்க நோயாளர் களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தப் பரிசோதனைகள்மூலம் எயிட்ஸ் பரவி உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை போன்ற வேகத்தில் எயிட்ஸ் கிருமிகள் உலக நாடுகள் எங்கும் பரவிவருகின்றமை அச்சுறுத்தலாகவே உள்ளது.

பயங்கரவாதத்தின் பயங்கரவாத செயல்களினால் உண்டாகக்கூடிய பயங்கரத்தைவிட எயிட்சின் தாக்கம், மிகமோசமாகவுள்ளது. அதனால்தான் உலகம் இன்று இதனை ஒழிப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

நாகத்தின் நஞ்சிலிருந்து தப்பிவிடலாம், துப்பாக்கி ரவையிலிருந்தும் தப்பிவிடலாம், ஆனால் எயிட்சின் பிடியிலிருந்து யாருமே தப்பிப் பிழைக்கவே முடியாது, தப்பியதாக சரித்திரமே இல்லை.

உயிரினத்தின் செயற்பாட்டோடு சேர்ந்திருக்கின்றது எயிட்ஸ், மனித குலத்தின் இன்றியமையாத ஒன்றுடன் பிணைந்திருக்கின்றது. அதனால்தான் அதனை நீக்குவது, தடுப்பது கடினமாக உள்ளது.

பிறசந்ததியைப் பெருக்குவது, வளர்ப்பது உயிரினத்தின் இயல்பு, அவசியமானது, இனப் பெருக்கம் உயிரின உற்பத்திக்கூறாக கருத வேண்டிய பொருளாக, கடப்பாடு உடையதாக மனிதனுக்கு உள்ளது. எதிர் பாலார் இருவர் சேருவதால் உண்டான உயிரின உற் பத்தி மட்டுமல்ல, அந்தச் சேர்வில் உண்டான சுகம், அணைப்பிலே உண்டான இன்பம் அது ஒரு கலையாகவே வளர்ந்துள்ளது. அதனால் உண்டான அலைவு இன்று கொலையாகவே மாறியுள்ளது.

இந்தியா, இலங்கை போன்ற தெற்காசிய வளர்முக நாடுகளிலேயும் பெருந்தொகையானவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளமை வெளிப்படையான உண்மையாகும். உலகில் இத்தொற்றுடன் வாழ்பவர்களின் எண்ணிக்கை 40 மில்லியனாக இருப்பினும் இந்தியாவில் 5.7 மில்லியன் பேரினையும், தாண்டிவிட்டது. இந்த நோய் இலங்கையில் கிட்டத்தட்ட 900 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இதேவேளை 2013 வருடம் 196பேரும் 2014ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் வரையும் 169 பேர் இனம் காணப்பட்டு உள்ளனர். இவர்களில் அதிகூடிய எச்.ஐ.வி, தொற்றுள்ளவர்கள் கொழும்பிலும், அதற்கு அடுத்ததாக கம்பஹா மாவட்டமும் உள்ளது! இலங்கையிலும் எயிட்சின் தாக்கம் பெருமளவு அபாயம் உள்ளது என்பதையே மேற்படி புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றது!

## எதனால், எவ்வாறு உண்டாகின்றது?

*01. ஒரினச்சேர்க்கை மூலம்.*

*02. பாதுகாப்பற்ற பாலுறவு மூலம். தாய்க்குப் பின் வயிற்றிலிருக்கும் கருவுக்கும்.*

*03. வேறொருவருக்கு பாவிக்கப்பட்டு தொற்றுநீக்கம் செய்யப்படாத ஊசி மற்றும் சில வகை உபகரணங்களைப் பாவிப்பதன் மூலம்.*

*04. தொற்றுள்ளதா? என்பதனை கண்டறியப்படாத குருதியினை இன்னொரு வருக்கு ஏற்றுவதன்மூலம், போன்ற காரணி களால் இந்த நோய்க்கான தொற்று ஏற்படு கின்றது என்று விஞ்ஞான ஆய்வுகள்மூலம் தெரியவருகின்றது.*

## யாழ்.மாவட்டமும் எயிட்சும்

யாழ்.மாவட்டத்தில் மாறிவரும் சமூகச் சூழலும், எச்.ஐ.வி-யை எதிர் கொள்ளக்கூடிய சவால்களைப் பற்றி எடுத்து நோக்குவது நன்றென்று எண்ணுகிறேன்.

ஒரு காலமதில் யாழ். மவாட்டம் கலாசாரத்தின் சின்னமாக விளங்கியது. இறுக்கமான கலாசாரப் பின்னணியும், பண்பாட்டு விழுமியங்களுக்கும் பெயர் போன இடமாக இருந்த யாழ்.மாவட்டம் இப்போது கலாசார சீரழிவுகளுக்குள் சிக்கித் தவித்து திணறிக் கொண்டிருக் கின்றது.

A9 பாதை திறக்கப்பட்ட பின்னர் தான் குடாநாட்டில் கலாசார சீரழிவுகளின் தாக்கம் உண்டாகத் தொடங்கியது.

யாழ்.மாவட்டத்தில் 1993ஆம் ஆண்டு தான் முதலாவது எயிட்ஸ் நோயாளி இனம் காணப்பட்டுள்ளார். இதுவரை 30 இற்கும் மேற்பட்டவர்கள் எச்.ஐ.வி. தொற்றுடன் உயிருடன் இருப்பதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

யாழ்.மாவட்டத்தினை பொறுத்த மட்டில் எயிட்சை எதிர்கொள்ளக்கூடிய காரணிகளில் வெளிநாட்டு மோகமும், கணினி, வீடியோ, கான்போன், இறுவெட்டு க்கள் மெமறிக் காட் என்பனவற்றுடன், கணவனை இழந்துள்ள சில இளம் பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

வெளிநாடுகளுக்கு செல்வோர்கள். அங்குள்ள நாட்டுக் கலாசாரங்களுக்கு தங்களை மாற்றிக்கொள்வதுடன், பாலியல் தொழிலாளர்கள்மூலம் எயிட்சினை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர்.

கடந்த காலப்போரும் வடக்கிலுள்ள இளம்பெண்களை விதவைகளாக்கி உள்ளது. இவர்களில் 18 முதல் 35 வயதுக்குட்பட்டோர் ஏராளம் பேர் உள்ளனர். என்னதான் கலாசார விழுமியங் களுடன் கட்டுப்பாடுகளுடன் வாழ முற்பட்டாலும் பாலுணர்வுகள் தூண்டப்பட்டு, அதுவே தொழிலாக மாறக்கூடிய சம்பவங்களும் நடக்காமல் இல்லை.

எனவே எச்.ஐ.வி என்கிற எயிட்ஸ் பாலுணர்வுக்கு அடிமையாவோரை, பாதுகாப்பற்ற பாலுறவை மேற்கொள் வோரை ஒருபோதும் விட்டு வைக்காது.

எயிட்ஸ் நோயாளிகளை சமூகம் தள்ளிவைத்துப் பார்க்கின்றது. இது மிகப்பெரும் கொடுமையான விடயமாகும். எயிட்ஸ் தொற்றுள்ளவர்களுடன் கை குலுக்குதல், சாதாரணமாகக் கட்டி அணைத்தல், ஒன்றாக சேர்ந்து விளையாடுவது, உடைகளை மாறி அணிவது, ஒரே மலசலகூடங்களை பாவிப்பது, நீராடுதல் என்று எதனையும் செய்யலாம். இதன்மூலம் எச்.ஐ.வி தொற்றும் என்பதெல்லாம் பொய். எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களும் மனிதர்கள்தான், என்பதனைப் புரிந்துகொள்ளல் வேண்டும்.

இவற்றினை தடுக்கவும், விழிப்புணர்வு ஊட்டுவதும் முக்கியமாகும். பாடசாலை மாணவர்கள், மற்றும் சனசமூக மட்டங் கள், மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் பிரசாரம் செய்யவேண்டியது அவசியம். இன்னும் கிராமப்புற மக்களுக்கும் படிக்காதவர்களுக்கும் இது பற்றிய தெளிவின்மை இல்லை.


இடம்பெயர்ந்தோர் முகாம் பகுதி மக்களையும் விழிப்பூட்டவேண்டியது அவசியம்.

இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை, என்றாலும் இந்த நோய் வராமல் தடுக்கமுடியும். மரணத்தை மட்டுமே பரிசளிக்கக்கூடிய இந்த நோயினை வராமல் தடுப்பதே ஒவ்வொருவர் முன்பாகவும் உள்ள கடமையாகும்.

இதனை சவாலாக எண்ணி வாழ் வோமானால் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று நிம்மதி யுடன் வாழலாம். இல்லாதுவிட்டால்...???

**எயிட்ஸ் நோயாளிகளை சமூகம் தள்ளிவைத்துப் பார்க்கின்றது. இது மிகப்பெரும் கொடுமையான விடயமாகும். எயிட்ஸ் தொற்றுள்ளவர்களுடன் கை குலுக்குதல், சாதாரணமாகக் கட்டி அணைத்தல், ஒன்றாக சேர்ந்து விளையாடுவது. உடைகளை மாறி அணிவது. ஒரே மலசலகூடங்களை பாவிப்பது. நீராடுதல் என்று எதனையும் செய்யலாம். இதன்மூலம் எச்.ஐ.வி தொற்றும் என்பதெல்லாம் பொய். எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களும் மனிதர்கள்தான். என்பதனைப் புரிந்துகொள்ளல் வேண்டும்.**

**மரணத்தை மட்டுமே பரிசளிக்கக்கூடிய இந்த நோயினை வராமல் தடுப்பதே ஒவ்வொருவர் முன்பாகவும் உள்ள கடமையாகும்.**





# கனவோடு பேசுதல்

கன்னிமாட இருளை நிலவு கழுவி
சலவை செய்து கொண்டிருந்தது.
ஆடவர் நுழைய அனுமதி இல்லை.
கன்னிமாடக் கட்டுப்பாடு அதுதான்!

கட்டுப்பாடு போட்டாலும்
காற்றும் – காதலும்
எங்கும் துரிதகதியில் புகுந்துவிடும்!

காற்றுக்கும் – காதலுக்கும்
இதுவரை யாரும்
வேலி கண்டுபிடிக்க முடியவில்லை
ஆற்றைக் கூட அணைபோட்டு
தடுக்கலாம் காற்றைத் தடுக்க
எந்தக் கருவியாலும் முடியாது!

காற்றைத் தடுத்தால்
உயிர் கூட்டைவிட்டுப் போய்விடும்
காதலைத் தடுத்தால்
வாழ்க்கை பட்டுப் போய்விடும்!

காதலர்கள் சுவாசிக்கும்
காற்றிலும் காதல் கலந்திருக்கும்!
காதலரின் இதயத் துடிப்பிலும்
காதல் ஓசை கேட்டுக்
கொண்டிருக்கும்!

கடலுக்குள் அலையடிப்பது மாதிரி
காதலர் நெஞ்சுக்குள்
காதல் அலை வீசியடித்துக்
கொண்டிருக்கும்.

கோவில் மணியோசை ஒலித்தால்
ஊருக்கே அது கேட்கும்
காதல் மணியோசை
ஒலித்தால்
இருவர் மனதுக்குள்
மட்டுமே எதிரொலிக்கும்!

ஊசித்துளை வழியாக
ஒட்டகம் நுழைய முடியாது!
ஒரு துளையும் இல்லாது
போனாலும் காதலர்
தங்களுக்குள் தாங்கள்
நுழைந்து கொள்ளமுடியும்!

கன்னிமாடத்தில்
மஞ்சத்தில் மலர்ந்து
கிடந்தாள் சொர்ணா.
அவள் மனதில்
பரவிக் கிடந்தான் செழியன்!

கன்னிமாடக் கட்டுப்பாடு கடந்து
காளை புகுந்து கிடந்தான் இதயத்தில்.

நேரில் கிடைக்காத யோகம்
சில நேரங்களில் நினைப்பில்
கிடைக்கிறது! நினைப்புக்கு
வெட்கமும் இல்லை!
வேறெந்த விவஸ்தையும் இல்லை!
கற்பனைக்கு சிறகு முளைக்க
நினைப்புகள் நெடும் பனையாக
வளரும்!

விழித்திருக்கும் போது
நெஞ்சில் நிரம்பிவழியும் நினைப்புகள்
விழிகளை மூடிக் கொள்ளும் போது
கனவாகி உருவாகிக் கனவாகின்றன!

கனவு பொல்லாதது கனவு
யார் தடுத்தாலும் நில்லாதது!

'சொர்ணா! என் கண்ணே!
மஞ்சத்தில் நீ புரளும்போது – என்
நெஞ்சத்தில் ஆசை புரள்கிறதேயடி
கண்ணே! உன் பட்டுடலும், எழும்
மொட்டுக்களும் விரல் அளவும்
இல்லாத இடைக் கட்டழகும்
கட்டுக்குழல் அழகும், சுட்டுவிழி எழிலும்
பட்டுப் பட்டுப் பிரிகின்ற செவ்விதழ்
அழகும் முத்தைப் பழிக்கின்ற
கொத்துப் பல் அழகும்
பித்தைத் தருகின்றதே என் முத்து
நகைக்காரி! கட்டியணைக்கட்டுமா?
முத்துக் குளிக்கட்டுமா?
சொல்லிவிடு கண்ணே!
அள்ளியணை பெண்ணே!"

மன்றாட்டமா? திண்டாட்டமா?
சம்மதம் சொல்ல வெட்கம் வரும்
மன்மத பாணங்கள் மனதில் எழும்!
உச்சியில் ஆசை தாவிவிட
தலை தாங்காது குனியும் –
தரை நோக்கும்!

"வெட்கத்தை மூட்டை கட்டிவிடு
வெப்பத்தை விரட்டக் கொட்டிக்கொடு
வெல்லத்தைப் பழிக்கும்
இதழ் சுவையை வெள்ளமென
நீ விரைந்து கொடு!"

வேண்டினான் – விரைந்தான் –
விழுந்து போனான் கை வீசினான்
– பற்றினான் கவிழ்ந்து போனான்
தடுத்தாள் – மறுத்து நடித்தாள்
மகிழ்ந்து போனாள் சிணுங்கினாள்
சிரித்தாள் – சிலிர்த்துப் போனாள்!

விரல் பற்றினான் – பற்றினாள்
விரல்களை மோதவிட்டாள்.
கன்னமும் கன்னமும் சேர்ந்து
கொள்ள எண்ணத்தால்
சம்மதம் சேர்ந்து கொள்ள
எண்ணத்தால் சம்மதம் பகிர்ந்து
கொண்டான், காதருகே காதல்மொழி
பூசினாள். தேனருவி என
நெஞ்சினில் வாங்கினாள்!

தோள் பற்றினான் – துவண்டாள்
மடியினில் சரிந்தவள் புரண்டாள்
மங்கிய நிலவினில் மடியினில்
மலர்க்கொடி! பொங்கிய கனிகளை
வண்டெனத் தாவினான்!

வியர்வை நெற்றியில்
முத்துக்கோர்க்கும்
விழந்ததை நினைத்து
வெறுப்புச் சேரும்
சின்னதா இரவு? சினம் கூடும்
மன்மத நினைவோடு யாகம்
முடியும்!

போகாதே நில்! போகாதே நில்!
மூழ்கிப் படித்த புத்தகத்தை
விடியலின் கரம் மூடிவிட்டதே!
மீதிக் கதையை படிக்க வேண்டாமா
போகாதே நில்! போகாதே நில்!

களுக்கென்று நகைத்தாள்
கண்மணி சொர்ணா.
கண்டது கனவு
கண்ணுக்குள் வந்தவர் காதலர்!

"கனவே நன்றி! கனவே வாழி!
மனதைக் கவர்ந்தவர்
மனதில் உள்ளதை
தூதெனச் சுமந்து வந்தாய் வாழி!

வீட்டுக்கு வந்தவர்
யாரெவர் எனினும்
விருந்து கொடுப்பது நம்
குணமாகும்! கனவே நீயோ
நெஞ்சுக் கூட்டுக்குள் வந்தாய்
உனக்கென்ன விருந்து
செய்யப் போகிறேன்?
கனவே உனக்கென்ன
கைமாறு செய்யப் போகிறேன்?"

கனவோடு பேசினாள்
கன்னிமாட அழகி!

ஆம்! காதலர் மனம் கனிவானது
அது காதலுக்கு உதவும்
புல்லையும் வாழ்த்தும்
பூவையும் போற்றும்!

இதோ திருவள்ளுவர் காட்டும்
காதலியும் கனவோடு
பேசுகிறாள் கேளுங்கள்.

**"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய் வேன்கொல் விருந்து"** அதிகாரம்: 122 குறள்: 1211

## சிந்தியா பதில்

**மகிந்தவுக்கும், மைத்திரிக்கும் உள்ள பலமும் பலவீனமும் என்ன சிந்தியா?**

**ஏ.சிவகுமாரன், மட்டக்களப்பு.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு நன்கு பரீட்சயமான தேசிய அரசியல் தலைவர். மைத்திரிபாலவோ இப்போதுதான் தேசிய அரசியலுக்குப் பழக்கப்படுத்துகின்றனர்.

**சிந்தியா! யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக சில இடங்களில் நிலத்தடி நீரில் எண்ணெய் கழிவுகளால் நீர் மாசுபடுகின்றமை நடந்து வருகின்றது?**

**எம்.ஷர்மி, கொழும்பு–06.**

சில இடங்களில் என்பது தவறான தகவல். குறிப்பாக சுன்னாகத்தில் மின் பிறப்பாக்கிகளின் பாவனைக்கு உபயோகிக்கப்பட்ட கழிவு எண்ணெய் நிலத்துக்குக் கீழே இறங்கி நிலத்தடி நீரில் கலந்துவிட்டதால் கடந்த இரண்டு வருடங்களாக குடிநீர் மாசடைந்து வருவதாக மக்கள் முறையிட்டுள்ளனர்.

இதுதொடர்பான விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளது. நீதிமன்றம் விடயத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான உத்தரவை விடுத்துள்ளது. இதுதவிர பொதுவாகவே யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மலக்கழிவுகள் குடிநீரில் கலந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மொத்தத்தில் யாழ்.குடாநாட்டு குடிநீர் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துவருகின்றது.

**சிந்தியா! யாழ்.மாவட்டத்தில் எயிட்ஸ் அபாயம் அதிகரித்து வருகிறதாமே?**

**உ.பவித்திரன், அளவெட்டி.**

கடந்த மாதம் வெளியாகிய ஒரு அறிக்கையின் விபரமானது. யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதாகவும், பலர் தமக்கு எயிட்ஸ் நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பதை துணிந்து பரீட்சித்துக் கொள்ள முன்வராமல் இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது. பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுடனான தொடர்புகள் மூலமாகவே தொற்று ஏற்படுவதாக அந்த அறிக்கை தெரிவித்தது. கடந்த காலங்களை விடவும் கடந்த மாதத்தில் அதிகமான எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தி எச்சரிக்கை செய்துள்ளது.

நீண்டகாலமாக எயிட்ஸ் நோய் தொற்று தொடர்பான தகவல்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தபோதும், வெளியே கூறினால் இங்கு இருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் பண்பாடு, கலாசாரம் கேள்விக்குட்படுத்தப்படும் என்ற குறுகிய மனோநிலை காரணமாக திட்டமிட்டு மறைக்கப்பட்டுவந்தது.

இப்போது விடயம் மறைக்கப்பட முடியாத கட்டத்தை அடைந்துவிட்டுள்ளது.

**சிந்தியா! மகிந்தவை சர்வதேச நீதிமன்றத்தில் ஒருபோதும் நிறுத்தமாட்டேன் என்கிறாரே மைத்திரி?**

**க.செல்வமணி, யாழ்ப்பாணம்.**

மைத்திரியின் இந்த அறிப்பானது, மைத்திரி உள்ளூர் மற்றும் வெளி நாட்டுச் சதிகாரர்களுடன் சேர்ந்து ஏற்கெனவே மகிந்தவுக்கு துரோகம் செய்துவிட்டார்.

அடுத்ததாக ஆட்சியைக் கவிழ்த்து நாட்டுக்கு துரோகம்செய்து யுத்தத்துக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் படையினரையும் காட்டிக் கொடுத்துவிடுவார் என்று பெரும்பான்மை சிங்கள மக்களிடையே தற்போது ஏற்பட்டுள்ள மைத்திரி மீதான கோபத்தை தணிப்பதற்காகவே மைத்திரி இப்படி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார்.



**சிந்தியா! மீண்டும் அரசியலில் காலடி எடுத்து வைத்திருக்கும் சந்திரிக்கா அரசியலில் த டம் பதிப்பாரா?**

**எம்.எச்.மஷாகிர், புத்தளம்.**

இதுவரையான தகவல்களின்படி மீண்டும் வெளிப்படையான அரசியலில் ஈடுபடும் எண்ணம் தனக்கு இல்லை என்று சந்திரிக்கா அம்மையார் கூறி வருகின்றார். ஆனால் திரைமறைவில் இருந்துகொண்டு வெளிப்படையாக அரங்கேறப்போகும் பல துரதிர்ஷ்டச் சம்பவங்களின் இயக்குநராக இருக்கப் போகின்றார் என்பது மட்டும் உண்மை.

**சிந்தியா! அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர் கியூஸைத் தொடர்ந்து போட்டி நடுவரும் வம்சப் பந்துவீச்சு மூலம் மரணமடைந்துள்ளாரே?**

**க.நிலக்ஷன், திருகோணமலை.**

துரதிர்ஷ்டவசமாக நடந்த துயரம் நிறைந்த சம்பவங்கள் அவை. கிரிக்கெட் விளையாட்டு இருக்கும்வரை இவர்களின் மரணம் ஏற்படுத்திய துயரங்களும் நீங்காமல் இருக்கப்போகின்றது. அவர்களின் குடும்பத்தாரின் துயரத்தில் உலக கிரிக்கெட் ஆர்வலர்களும் பங்கெடுத்துக் கொண்டுள்ளார்கள். நாமும் அதில் பங்கெடுப்போம்.

**சிந்தியா! இளையராஜாவின் இனிமையான ராகங்களில் உங்களை மிகவும் கவர்ந்த பாடல் எது?**

**எஸ்.மக்ஸ்மிலா, மன்னார்.**

அப்படி இதுதான் என்று கூறமுடியாத தர்மசங்கடமான கேள்வியை கேட்டு விட்டீர்கள். எத்தனையோ புதிய பாடல்கள் தொண்ணூறுகளுக்குப் பின்னர் வந்திருந்தாலும், இளையராஜாவின் காலத்தில் வெளியாகிய பாடல்கள் என்றும் இனிமையானவை. அந்தப் பாடல்கள் இன்னும் மனிதம் உள்ள காலம்வரை வாழும்.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

**வணக்கமுங்கோ. தேர்தல் நெருங்குது. தேர்தல் களத்தில சூடான பல சமாச்சாரங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் நடக்கப்போகுது. இதுபற்றி முத்துத்தம்பி அண்ணை என்ன சொல்லுறார் எண்டு கொஞ்சம் விசாரிச்சுப் பாப்பம்.**

**கா.பூ:-** முத்துத்தம்பி அண்ணை! என்ன மாதிரி ஜனாதிபதி தேர்தல் நிலவரங்கள் கிடக்கு.

**மு.தம்பி:-** நான் நினைக்கிறன்ரா அப்பு! இப்போதைக்கு எதையும் சொல்லேலாது போல கிடக்குது. மைத்திரி பிரிஞ்ச உடனை எழும்பின பரபரப்பை அலையாய் மாத்தாம கோட்டை விட்டுட்டினமோ என்ட சந்தேகம் எனக்கு இருக்கு. இப்ப இருக்கிற அமைதியைப் பார்த்து ஆரம்பமே சரியில்லை எண்டு சனத்தின்ர மனசிலை பட்டுச்சுது எண்டால் மைத்திரி ஐயாவுக்கு ஆப்பு நிச்சயம் ஆயிடும்.

**கா.பூ:-** நீங்கள் இப்பிடி சொல்லுறியள். வாக்களிப்புக்கு இன்னும் நாள் கிடக்கிறபடியாலை கடைசி நேரத்திலை சொல்லியடிக்கிறதுக்குத்தான் மேடம் இப்ப அமத்தி வாசிக்கிறா எண்டு அவேயின்ரை தரப்பு ஊடகங்களிலை சொல்லிக்கொண்டு இருக்கு.

**மு.தம்பி:-** எட தம்பி... உந்த ஊடகங்கள்தான் இப்ப போன கிழமை பிரேக்கிங் நியூஸ் (Breaking News) போட்டு கிரிக்கெட் ஸ்கோர் சொன்ன மாதிரி, இருபது தாவுது, முப்பது தாவுது எண்டு சொல்லிக்கொண்டு இருந்தவை. வரவு-செலவுத் திட்டம் தோலைஞ்சுது எண்டும் ஆரூடம் சொன்னவை. பிறகு என்ன நடந்தது எண்டு பாத்தனிதானே

இந்தக் காலத்து சில ஊடகங்கள் சொல்லுறதை அப்படியே விழுக்கினம் எண்டால் நாங்கள் மொக்கேனப்படவேணும்.

**கா.பூ:-** அது எண்டால் உண்மை தானுங்கோ. அதுசரி. இப்ப யார் யாரின்ர பக்கம் எண்டதுதான் ஒரே பேச்சாய் கிடக்குது. முன்னம் மகிந்த மாத்தையாவுக்குத்தான் சப்போர்ட் எண்டு சொன்ன சிலர் இப்ப தொனியை கொஞ்சம் மாத்திச் சொல்லத் தொடங்கியிருக்கினம். உதைப் பற்றி என்ன நினைக்கிறியள்?

**மு.தம்பி:-** யார் வெல்லுவினம், தோற்கினம் என்கிறதுக்கு அங்காலை மைத்திரியின்ரை வருகை தேர்தலை சூடாக்கியிருக்குது எண்டு மட்டும் தெரியுது. ஆளும் கட்சியின்ர வாக்கு வங்கி பிரியப் போகுது எண்டு மட்டும் தெரியுது. ஆனா அது என்ன வீதத்தில பிரியப் போகுது என்கிறதிலதான் தேர்தல் முடிவு தங்கியிருக்குது. இப்பிடியான சூழ்நிலையில எங்கடை சிறுபான்மை கட்சிகளின்ர முக்கியத்துவம் எகிறி இருக்குது. உந்தத் திடீர் எகிறலை பயன்படுத்திக் கொள்ளுறதுக்கு சில கட்சிகள் முயற்சிக்கினம்போல இருக்கு.

**கா.பூ:-** அப்பிடியெண்டால் அண்ணை இந்தச் சூழலிலை கூட்டமைப்புக்காரர் எப்பிடிக் கையாளவேணும் எண்டு நினைக்கிறியள்?

**மு.தம்பி:-** கூட்டமைப்பைப் பொறுத்த வரையில எங்கட பிரச்சினையளுக்கு 'Better' யார் எண்டு பாத்து முடிவு எடுக்கவேணும். இதுவரை இரண்டு பேரின்ர கதையளைப் பாத்தால் மைத்திரியர் தமிழ் மக்களின்ர பிரச்சினையைப் பற்றி வாய்திறந்து சொல்லேல்லை. போதாக்குறைக்கு இந்த விஷயத்திலை இனவாதம் பேசி குழப்பிறதையே தொழிலாய் வைச்சிருக்கிற சில கட்சிகள் அவரோட சேருவினம் போலக் கிடக்குது. அப்பிடிச் சேர்ந்தால் அவையளின்ர எதிர்ப்பை மீறி செய்யிறளவுக்கு இவரிட்ட கட்ஸ் இருக்கிறதாயும் தெரியேல்லை.

மற்றப் பக்கம் மகிந்தரைப் பாத்தால் இப்ப அவருக்கு சிறுபான்மை கட்சியின்ர ஆதரவு தேவைப்படுது. இந்த நேரத்தில கை கொடுத்து எங்கட பேரம்பேசும் பலத்தை காண்பிச்சால் நெஞ்சை நிமித்திக்கொண்டு கதைக்கலாம். அவர் முடிவு எடுத்திட்டால் பேரினவாத கூக்குரலுக்கு மசிஞ்சும் கொடுக்க மாட்டார். அதைவிட ஏதோவொரு வகையில, தமிழ் மக்களுக்கு அரசியல தீர்வு குடுப்பன் எண்டு வெளிப்படையாய் சொல்லுறது அவர் மட்டும்தான்.

அதனாலை கூட்டமைப்பு மட்டுமில்லை எல்லாக் கட்சிகளுமே நிதானமாய் முடிவு எடுக்கோணும்.

**கா.பூ:-** இந்த இடத்திலை நான் ஒண்டைச் சொல்லோணும் அண்ணை. இப்பிடித்தான் 2007ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டக் காலத்திலை இந்த அரசாங்கம் தத்தளிச்சுக்கொண்டு இருந்தது. அப்ப பாராளுமன்றத்தில இருந்த 22 கூட்டமைப்புக் காரரும் சும்மா கொட்டாவி விட்டுக்கொண்டு இருக்காமல், சில கோரிக்கைகளோட ஆதரவு கொடுத்திருந்தால் சில கட்சிகள் தலையெடுத்திருக்கவே முடிச்சிருக்காது. இப்பவும் அந்தத் தவறை செய்யாதேங்கோ எண்டுதானே சொல்லுறியள்.

**மு.தம்பி:-** ஓமடாப்பு அது உனக்கு விளங்குது. அந்த சாணக்கியன்கள் விளங்கிக் கொள்ளவேணும். அப்பதான் சனத்துக்கு விடிவு கிடைக்கும். பொறுத்திருந்து பாப்பம்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

## வரலாறு படைத்த வல்லுநர்கள்

# நீராவிக்குக் கழவாளமிட்டவர்



கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வயல் வெளிகளும், காடுகளும், ஆங்காங்கே ஒரு சில தொழிற்சாலைகள் இருந்தன. கைத்தொழில் கலை வல்லவர்கள் இருந்தார்கள். கருமான், தச்சர், நெசவாளர் இவர்களெல்லாம் தொழில் செய்ய வில்லையா? செய்தார்கள். உடல் உழைப்பினால் பொருட்களை உற்பத்தி இருந்தன. இந்த இயந்திரங்களை இயக்க மனிதசக்தி இல்லாமல் புதிய ஒரு சக்தியைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்ற ஒரு தவிப்பு ஏற்பட்டது. காற்று, நீர், விலங்குகள் ஆகியவற்றின் சக்திகளைப் பயன்படுத்திவந்தனர். ஆனால், இவைகளுக்கும் மேலாக ஒரு சக்தி தேவை என்று கருதினான் மனிதன்.

நீராவி என்று ஒரு சக்தியைக் கண்டார். நியூகோமன் என்பவர். ஆனால் இவர் இதற்குத் தீ இயந்திரம் என்றுதான் பெயர் கொடுத்தார். உண்மையில் இன்றைய நீராவி இயந்திரத்தின் முழுமையான காரியத்தை அது செய்யவில்லை தான். ஆனால் நீராவியின் சக்தியைப் பயன்படுத்தி புரட்சிகளைச் சரிசெய்யலாம் என்பதற்கு வழிகாட்டியது நியூ கோமனின் இயந்திரம்தான். நியூ கோமனின் இயந்திரத்தில் பல முன்னேற்றங்களைச் செய்து நீராவியின் சக்தியைப் பயன்படுத்திப் பலன் காணும் இயந்திரத்தை உருவாக்க வந்தார் ஜேம்ஸ்வார்ட். இனி ஜாமி, நியூ கோமனின் இயந்திரத்தை எப்படி மாற்றினார் என்பதைப் பார்ப்போம்.

ஜாமி என்ற ஜேம்ஸ் வாட் உடல்நலமாக இருக்கும்போது பள்ளிக்குச் சென்று பயிலும் நாட்களில், அவரது ஈடுபாடு ஜியாமிதியில் அதிகமாக இருந்தது. அம்மாவினுடைய அடுப்பங்கரைத் தரையில், சாக்பீசினால் கணித வரைபடங்களை வரைந்த பையனான ஜாமி, புகழ்பெற்ற பொறியியல் கலைஞர்களில் ஒருவர் என்று எல்லோராலும் நினைக்கும்படியான நிலையான புகழைப்பெற்றார்.

1755இல் ஈரக்காற்று நிறைந்த தன் தாயகத்திலிருந்து லண்டனுக்கு வந்தார் வாட், விஞ்ஞானக் கருவிகள் செய்யும் ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்தார். கப்பல் கட்டும் தொழிலுக்குத் தேவையான ஸெக்ஸ்டண்டுகள், காம்பஸஸ்கள் ஆகியவற்றையும் மற்றும் ஜியாமிதிக்கான கருவிகளையும் தயாரிப்பவர் இவர். சில வருஷங்களில் இத்தயாரிப்பு முறைகளில் தேர்ச்சி பெற்றுத் திறமையடைந்த வாட், ஸ்கொட்லாந்துக்குத் திரும்பி, சொந்தமாகவே கிளாஸ்கோவில் இம்மாதிரியான கருவிகளைத் தயாரிக்கும் கடையைத் திறந்தார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(04.12.2014 தொடக்கம் 10.12.2014 வரை)

## மேடம்

வங்கிகள்மூலம் புதிய வீடு நிலங்கள் வாங்குவதற்கான எண்ணங்கள் சற்று கால தாமதமாகவே நிறைவேறும். விவசாயம் செய்பவர்கள் சற்று கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயங்களுக்காகப் புதிய முயற்சிகளில் தலையிட்டு வெற்றிபெறுவீர்கள். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகிவிட்டுக் கொடுத்துப் போவதன் மூலம் மனம் நிறைவடைவீர்கள். வங்கிகளின் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் உதவி தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வடமேற்குத் திசையில் இருந்து நற்செய்திகள் வந்துசேரும். வெகுகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த பூர்வீகச் சொத்துக்கள் சட்டபூர்வமாக கைக்கு வந்துசேரும்.

## துலாம்

இதுநாள்வரையில் தடைப்பட்டு வந்த காரியங்களை மனத்தைரியமுடன் சற்று பிரயாசையுடன் செய்து முடிப்பீர்கள். தந்தை – மகன் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு விலகும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த உதவித் தொகைகள் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. புதிய வீடு வாகனங்களை வாங்க வாய்ப்பு உள்ளது. பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச்சஞ்சலமும் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலை விலைக்கு வாங்காதீர்கள்.

## இடபம்

நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக வெகு தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் பெரிய மனிதர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் நினைத்த இடத்திற்கு பணிஇடமாற்றமும் ஏற்படலாம். புதிய வீடு நிலம் வாங்குவதற்காகப் போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னடைவு ஏற்படலாம். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுப்பணிகளில் பங்குகொண்டு மனநிம்மதி அடைவீர்கள். பயணங்களின் மிகுந்த கவனமுடன் இருக்கவும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பொதுவாக இது ஒரு சுமாரான சந்தோசம் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

குடும்பச்சொத்து விசயங்களில் வழக்கு சம்பந்தமான முயற்சிகளைச் சற்று தள்ளி போடுதல் உகந்ததாகும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்று நீடிக்கும். நண்பர்களுடன் பணப் பிரச்சினைகள் சம்பந்தமாக மனக்கசப்புகள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் மற்றும் உறவினர்களால் தேவையில்லாத மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். கொடுக்கல், வாங்கலில் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. குடும்பத்தில் மருத்துவச்செலவுகளுக்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். பழுதுபட்ட ஆலயப் பணிகளில் பங்குகொண்டு நற்பெயர் புகழடைய வாய்ப்பு உள்ளது.

## மிதுனம்

மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். விவசாயம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த அரசு சம்பந்தமான உதவிகள் கிடைக்கும். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் பொருள்வரவும் மனமகிழ்ச்சியும் வந்து சேரும். பணத் தேவைகளுக்காக பூர்வீகச் சொத்துக்கள் சிலவற்றை விற்பதன் மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். புதிய தொழில்செய்வதற்கான முயற்சிகளில் வங்கிகளில் இருந்து நல்ல தகவல்கள் கிடைக்கும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய விவசாயங்களின்மூலம் எதிர்பாராத நல்ல இலாபம் அடைவீர்கள்.

## தனுசு

அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதில் மனநிறைவை அடைவீர்கள். தந்தை மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீரும். இதுவரையில் நெருக்கடியில் இருந்து வந்த பணத் தட்டுப்பாடுகள் நீங்கிப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். பங்காளிகளுடன் கூட்டுத்தொழில் முயற்சிகளை தவிர்த்தல் நல்லது.குல தெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவீர்கள். பெண்களிடம் கவனமாகப் பேசிப்பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளை தவிர்க்கலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணத் தகவல் மையங்கள் மற்றும் நண்பர்களின் உதவிகளால் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது.

## கடகம்

பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி மனநிம்மதியும் சந்தோசமும் அடைவீர்கள். காதல் போன்ற பெண்களின் விசயங்களில் மற்றவர்களின் உதவிகள் கிடைக்கும். நீண்டகாலமாகப் பிரச்சனைகளில் இருந்துவந்த அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும் மருத்துவச் செலவுகளும் உண்டாகலாம்.குல தெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நன்மையைத் தரும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வந்து போகும். வெகுநாட்களாக காணாமல்போன பொருட்கள் காவல்துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும்.

## மகரம்

காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் செய்து ஏமாற்றம் அடையாதீர்கள். பழுதுபட்ட ஆலயங்கள் மற்றும் வீடு வாகனங்களைப் புதுப்பிப்பதற்கான பணிகளில் ஈடுபடுவீர்கள். மனைவியின் உடல்நிலையில் சில பாதிப்புகள் ஏற்படுவதன்மூலம் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். நாட்பட்ட தீராத நோய்கள் தீரவேண்டி புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நல்ல பலன் அடைவீர்கள். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் புதிய பிரச்சினைகள் வர இருப்பதால் பயணங்களைச் சற்று தள்ளிப் போடுதல் நல்லது. பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

## சிங்கம்

பெரியவர்களின் தலையிடுதலால் கிடைக்கும். தீராத நாட்பட்ட நோய்களுக்காக மருத்துவச் செலவுகளைச் செய்யும் பொருட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். கடன்கொடுத்து இருந்த நீண்டகாலமாக வராத பணம் திரும்பக் கை வந்துசேரும். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீருவதற்கான வாய்ப்பு உள்ளது. கணவன் – மனைவி உறவுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும். குடும்பத்தில் திருமணம்போன்ற சுபகாரியங்களை நடத்துவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்று முயற்சியுடன் செய்து முடிப்பீர்கள்.

## கும்பம்

சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. புதிய கடன்களை வாங்கினால் திருப்பி செலுத்த இயலாமற் போக வாய்ப்பு உள்ளதால் கடன்வாங்குவதை தவிர்க்கவும். மிக நீண்டகாலமாக நினைத்துக் கொண்டு இருந்த தீர்த்த யாத்திரைகள் சென்றுவர வாய்ப்பு உள்ளது. தேவையில்லாத புதிய நண்பர்களின் தொடர்புகளால் வீண் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளவேண்டாம். கொடுக்கல் வாங்கல் தொழில்செய்பவர்கள் புதிய கடன்கொடுப்பதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் காரணமில்லாத மனக்கசப்புகளும் மருத்துவச்செலவுகளும் ஏற்படலாம். பழைய கொடுக்க வேண்டிய கடன்களால் மீண்டும் தொல்லைகள் வந்துசேரும்.

## கன்னி

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் தடைகள் ஏற்படலாம்.காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. பொதுக் காரியங்களில் தலையிட்டு நற்பெயர், புகழ் அடைய வாய்ப்பு உள்ள காலமாகும். தீராத நோய்கள் தீரவேண்டி நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கல் சம்பந்தம் ஆகிய பிரச்சினைகளில் உறவினர்களின் தலையிடுதலால் ஓரளவு மனநிம்மதி அடைவீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல முடிவுகள் வந்துசேரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

விட்டுப்போன கணவன் – மனைவி உறவுகளில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி மீண்டும் ஒன்றுசேருவார்கள். உடல்நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. பூமி நிலம் சம்பந்தமான வழக்குகள் மற்றும் பிற வழக்குகளில் இருந்து விடுதலை கிடைக்கும் காலமாகும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுத்தொண்டுகளில் கவனமுடன் பணியாற்றுவது சிறந்தது. குழந்தைகளுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கும் காலமாகும். உத்தியோக விசயமாகப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நல்லது.







காதல் திருமணம் செய்ய நான் ரெடி என்று கூறியுள்ளார் 63 வயதை எட்டியுள்ள பிரபல கவர்ச்சி நடிகை ஜீனத் அமன். 1980களில் மிக ஆபாசமான பாலியல் பலாத்கார காட்சிகளில் நடித்தும், கவர்ச்சி நடனம் ஆடியும் பலரது தூக்கத்தை கெடுத்தவர் ஜீனத் அமன்.

1985ஆம் ஆண்டு, மசார் கான் என்பவரை திருமணம் செய்து இரு ஆண் குழந்தைகளுக்கு தாயானார். இந்நிலையில் 1998ஆம் ஆண்டு மசார்கான் உடல்நலக் குறைவால் மரணமடைந்தார். இதன்பிறகு மகன்களுடன் தனியாக வாழ்ந்துவருகிறார்.

இம்மாதம் 19ஆம் திகதி ஜீனத் அமான் தன 63ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய ஜீனத் அமன், புதிய வாழ்க்கை துணையை தேடுவதாகக் கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், எனது இரு மகன்களும் படித்து முடித்து நல்ல நிலைக்கு வந்துவிட்டனர். இப்போது அவர்கள் வாழ்க்கையை அவர்கள் பார்க்கும் பக்குவம் கிடைத்துவிட்டது. இனிமேல் எனது வாழ்க்கையை பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

எனது இதயத்தில் தற்போது யாரும் இல்லை என்றபோதிலும், யாரையாவது ஒருவரை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில்தான் உள்ளேன். காதலுக்கும், திருமணத்திற்கும் நான் தயாராக உள்ளேன்.

உலகில் நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள் என நம்புகிறேன் என்றும் காதல் இன்னும் உலகில் உள்ளது என்று நினைக்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

## ஆச்சரிய தகவல்



இந்தியாவின் வடக்கே உள்ள வாரணாசியில் உலகிலேயே மிக அதிக வயதான மனிதர் ஒருவர் வாழ்வதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. வாரணாசியில் வாழ்ந்துவரும் மகாஸ்தா முராசி என்ற அந்த 179 வயது முதியவர் 1835ஆம் ஆண்டு பிறந்ததாக தெரிவித்ததாக தெரிகிறது. பெங்களூரில் பிறந்துவளர்ந்த இவர் கி.பி.1903ஆம் ஆண்டு முதல் வாரணாசியில் வாழ்ந்துவருவதாக தெரிவித்துள்ளார்.

957ஆம் ஆண்டுவரை அவரின் 122 வயது வரை காலணி தைப்பவராக இருந்த அவர் பின்னர் ஓய்வுபெற்றுள்ளார்.

மகாஸ்தா முராசியின் பிறப்பு சான்றிதழ், அடையாள அட்டைகள் அனைத்துமே அவர் 1835ஆம் ஆண்டு பிறந்தவர்தான் என்கின்றன.

ஆனால் இதுவரை இவர் 179 வயதுடையவர் தான் என்பதை உறுதிப்படுத்த எந்த மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு நடாத்திய மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பெரும் திருவிழாவாக நடைபெற்றிருந்தது. இரண்டாவது ஆண்டாக நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் இப்போட்டித் தொடரில் வலிகாமம், வடமராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து தகுதிகாண் போட்டிகள் நடாத்தப்பட்டு இரு அணிகள் முதன்மைச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இதில் தீவகப் பிரதேசத்திலிருந்து வேலணை துறையூர் ஐயனார் அணியும், மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும், யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும், தெல்லிப்பளை நாமகள் அணியும், வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், நவிண்டில் கலைமதி அணியும் தகுதி பெற்றிருந்தன.

நடப்புச் சம்பியன் என்ற நாமத்துடன் இறுதியில் களமிறங்கிய நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் கலைமதி அணியை வீழ்த்தி இரண்டாவது முறையாகவும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் டிசம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 18 வியாழக்கிழமை (04.12.2014) பக்கங்கள் IV ஓசை – 065

## மைத்திரி வரமுடியாது

### • ஜே.வி.பி. பழமைவாத குழு திட்டவட்டம்


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க 1971ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி போராட்டத்தில் கலந்து கொண்டோர் அமைப்பு முன்வந்துள்ளது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் நிகழ்வு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் ஒருங்கிணைப்பாளர் நெல்ஸன் எதிரிசிங்க தலைமையில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த இவ்வமைப்பின் முக்கியஸ்தர் சந்திரமோகன் பேசுகையில்,

1971 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டத்தில் கலந்து கொண்ட நாம் IV ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் புதிதாக இனம் காணும் தொழில் முயற்சியாளர்களுக்கும் உதவுவேன்



(யாழ்ப்பாணம்)

சிறுதொழில் முயற்சியாளர்களது உணவுசார் உற்பத்திகள் சுத்தமானதும், சுகாதாரமானதுமான முறைகளில் முன்னெடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர்கூடத்தில் நேற்று இடம்பெற்ற சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு தொழிற்துறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# முதல்வர் விக்கி — அமைச்சர்களை மாற்ற இரகசியத் திட்டம்

## வினைத்திறன் வாய்ந்த உறுப்பினர்கள் உள்ளனராம்

வடக்கு மாகாண சபை அமைச்சரவையில் விரைவில் சில மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

இந்த மாற்றங்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் வெளிவராத நிலையில் இன்று நடைபெறவுள்ள மாகாணசபை அமர்வில் இது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபையில் விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சராக பொ.ஐங்கரநேசன், கல்வி விளையாட்டுத்துறை அமைச்சராக த.குருகுலராஜா, மீன்பிடி வர்த்தக வாணிப கிராமிய போக்குவரத்து அமைச்சராக சட்டத்தரணி பா.டெனீஸ்வரன், சுகாதார அமைச்சராக ப.சத்தியலிங்கம் ஆகியோர் பதவி வகித்து வருகின்றனர்.

முதலமைச்சரிடமும் சில அமைச்சுப் பொறுப்புக்களும் இருக்கின்றன. இந்த நிலையிலையில் மாகாண அமைச்சுக்களில் சில மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று மாகாண சபை வட்டாரங்களில் இருந்து நம்பகரமாகத் தெரிய வருகிறது.

அமைச்சுக்களின் துறைகளிலேயே இத்தகைய மாற்றங்கள் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

இதற்குரிய விசேட கூட்ட IV ஆம் பக்கம் பார்க்க

## மேஜர் அல்விஸ் - டக்ளஸ் நேரில் கலந்தாய்வு

மாவட்டக் கட்டளைத் தளபதியாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் மரியாதையின் நிமிர்த்தம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்று IV ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் அரசுடன் இணைந்திருக்கும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் சீரான முறையில் இடம்பெறுகின்றன.

ஏற்கனவே கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தநிலையில் அந்தக்கட்சி ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## கொல்லப்பட்ட இடங்கள் இன்று வள்ளிபுனத்தில் ஆய்வு

விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக கூறப்படும் முன்னாள் பொலிஸ் மற்றும் படை அதிகாரிகள் உட்பட 80 பேர் எரிக்கப்பட்ட இடம் தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து 2 ஆம் நாளான நேற்றும் இடம்பெற்றுள்ளது.

மேற்படி ஆய்வுகள் நேற்று முன்தினம் 9 அமைப்புக்கள் இணைப்பில் தொடக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் 2 ஆம் பகுதி ஆய்வுகள் நெடுங்கேணியின் எல்லைப் பகுதியில் உள்ள வனத்தில் இடம்பெற்றுள்ளது.

2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொழும்பு கல்கிசை IV ஆம் பக்கம் பார்க்க

## ஐரோப்பிய தீர்மானத்தை இலங்கை வரவேற்றுள்ளது

விடுதலைப் புலிகள் குறித்து, ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக, ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த தீர்மானத்தை வரவேற்பதாக இல்ங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட பட்டியலிலிருந்து நீக்குமாறு, ஐரோப்பிய நீதிமன்றம் கடந்த ஒக்ரோபர் 16ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதனை அடுத்து, புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இந்தத் தடை நீக்கத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்ய உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த இந்தத் தீர்மானம் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் விடுதலைப் புலிக IV ஆம் பக்கம் பார்க்க




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசிய மில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3917)

# யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்




(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு நேற்று யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் இடம்பெற்றது.

டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஒரு கட்டமாக பெருமளவிலானோர்கள் இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டனர். அத்துடன் மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை வெளிக்கெணரும் வகையில் இரண்டு கால்களையும் இழந்த என்.நிமலனின் இன்னிசை நிகழ்வும், பாடல்கள் என்பவற்றுடன் இரா.செல்வவடிவேல் தலைமையில் மாற்றுத் திறளானிகள் வழங்கிய பட்டிமன்றம் என்பன இடம்பெற்றன.

இதில் நல்லைக் குருமாணி சோமசுந்தர பரமாச்சர்ய சுவாமிகள் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு நல்லாசிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் பெருமளவான மாற்றுத்திறனாளிகள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (இ, 25)

## தொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

இதம் நிறுவனத்தினூடாக தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கான தொழில் முயற்சி உபகரணங்கள் இன்று பயனாளிகளுக்கு வழங்கப் படவுள்ளன.


நிறுவனத்தில் தொழிற் பயிற்சி பெற்று தொடர்ச்சியாக கைத் தொழில்களை மேற்கொண்டுவரும் 36 பயனாளிகளுக்கு ஏறக் குறைய 17 இலட்சம் ரூபா செலவில் இவ்வுபகரணங்கள் வழங்கப்ப டுகின்றன. சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், கோப்பாய், தென்மராட்சி பிரதேச செயலர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இன்று காலை 11 மணியளவில் ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள இதம் நிறுவனத்தில் வைத்து இவ் உபகரணங்களை வழங்கப்படவுள்ளது. (இ)



## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680, 077 592 5088.
(C/3589)



வேலணை தெற்கு ஜே.19 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட அம்பிகைநகர் பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையினால் கிராம மக்களின் குடிமனைகள் வெள்ளத்தில் மூழ்கி காணப்படுவதைக் காணலாம். (21)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | PROGRAM NAME |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | HELLO DD |
| Am 10.30 | மக்கள் முகம் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | அட்டகாசம் (அதிரடி திரைப்படம்) |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிராதான செய்தி |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | கலவரம் (திரைப்படம்) |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## கலைவிழா

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் முன்பள்ளி கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளித்தலைவர் எம். ஜெயதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வடமராட்சி வலய முறைசாரக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகி இராசகுமாரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (01)



**வாழ்க வளமுடன்**
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பெயர் : சி.பிரணவீ
முகவரி : கருங்காலி காரைநகர்.
அகவை 1 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



**வாழ்க வளமுடன்**
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பெயர் : பி.நிவேதிகா
முகவரி : வற்றாப்பளை, முள்ளியவளை
அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



**வாழ்க வளமுடன்**
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பெயர் : க.அபிஷா, க.அபிஷேத்
முகவரி : சந்தை வீதி கொடிகாமம்
அகவை 8 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 313
திகதி - 2014.12.02
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து
10 37 43 54 L

பரிசுத் தொகை ரூபா. 18,542,680/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 12 | 600,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 190 | 190,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 361 | 361,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8850 | 531,000/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4671 | 186,840/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 115536 | 2,310,720/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16746 | 334,920/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 18,542,680/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,514,480/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 18,768,860/-
2014.12.05ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.
(C/3918)

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

# வாழ்வில் மறுமலர்ச்சியேற்பட்டு மக்கள் இன்புற்று வாழ வேண்டும்

## 'ஓம் நமச்சிவாய' பிரார்த்தனையில் சிவஸ்ரீ சபா.தெரிவிப்பு



(சித்தன்கேணி)

தமிழ்மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்றும், இந்த நாடு எல்லாம் வல்ல அருளாசியைப் பெற்று இன, மத நல்லிணக்கத்துடன் திகழ வேண்டும் எனும் நோக்கில் நேற்று சிவ ஆராதனை 'ஓம் நமச்சிவாய' என்ற ஓசை மந்திரத்துடன் ஆரம்பமானது.

சர்வமத இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள் தலைமையில் சிவ ஆராதனை சித்தன்கேணி சிவன் தேவஸ்தானத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சிவலிங்கப் பெருமானுக்கு திருமஞ்சன அபிஷேகம் நடைபெறும் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டு பரவசமடைந்தனர்.

வடக்கின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்த சிவாச்சாரியார்கள், திருமுறையாளர்கள், பண்ணிசையாளர்கள் சிவனின் பெருமைகளைக் கூறும் பாடல்களை ஓதி ஓங்கி ஒலித்த வண்ணம் இருந்தனர்.

இந்த 'ஓம் நமச்சிவாய' மந்திர ஓசை சித்தன்கேணி சிவன் ஆலயம் ஊடாக அகில உலகமெங்கும் பரவக்கூடியதாக இணைய வசதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அழகுதரும் காட்சிகளுடன் யாழ்.புகையிரத நிலையம்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனைக்கு அமைவாக யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை அழகுபடுத்தி செழுமைப்படுத்தும் வகையில் வரையப்படும் ஓவியங்களை அமைச்சர் நேரில் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அமைச்சர் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

புகையிரத நிலையத்தை அழகுபடுத்திச் செழுமைப்படுத்தும் வகையில் ஓவியங்கள் வரையப்பட்டு வருகின்றன.

இதனிடையே ஓவியருடனும், அமைச்சர் கலந்துரையாடினார்.

இதன்போது, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

# யாழ்.பொதுசன நூலகத்தில் நூலகர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் பொது நூலகத்தினால் யாழ்.மாநகர சபையின் பொதுசன நூலகத்தில் கடமையாற்றும் நூலகர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் செயலமர்வு நூலகத்தின் சிறுவர் பகுதியில் இடம்பெற்று வருகின்றது.

இச்செயலமர்வில் சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த நூலகம் சார் நிபுணர்களால் தற்கால தகவல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப நூலகர்களைத் தயார்ப்படுத்தும் செயற்றிட்டங்கள், குழுச் செயலமர்வுகள் மூலம் செய்முறைகளாக பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

அதேநேரம் யாழ்.நகரப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கும் பிறிதொரு பிரிவாக யாழ்.பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் ஆங்கிலம் சார்ந்த பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்செயலமர்வுகள் கால ஒழுங்குப்படி நடைபெற்று வருவதுடன், இந்த வருடத்தில் இரண்டாவது செயலமர்வு இதுவாகும்.

இச்செயலமர்வுகள் இன்றுடன் நிறைவடைகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உலர் உணவு பொதிகள் வழங்கல்



தென்மராட்சியில் வெள்ளத்தினால் பாதிப்படைந்த பகுதி மக்களுக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உலர் உணவுப்பொதிகளை நேற்று வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி. சாந்தசீலன் அஞ்சலிதேவியும் கலந்து கொண்டார்.

# கால்நடை வளர்ப்போர் சங்கத்திற்கு புதிய இயக்குநர் சபை தெரிய வேண்டும்

### பயனில்லாத சண்டிலிப்பாய் சங்கம் என அங்கத்தவர்கள் விசனம்

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வினைத்திறன் வாய்ந்த இயக்குநர் குழாம் விரைவில் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

அத்துடன் மக்களுக்கு வெளிப்படையாகச் சேவையாற்றக் கூடிய தலைவர் நியமிக்கத்தக்க வகையில் தற்போதைய இயக்குநர் சபை உடன் கலைக்கப்பட வேண்டும் என சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களால் வெளிப்படையாக தெரியப்படுத்தப்படாத நிர்வாகக் குழுவினால் நிர்வாகம் முறைகேடாக நடத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் நீண்ட காலமாக பொதுக்கூட்டம் நடத்தப்படாது அங்கத்தினருக்கு நன்மை பயக்காத நிலையில் சங்கம் இயங்கி வருகின்றது.

அத்துடன் கூட்டுறவு ஆணையாளரின் அனுமதி பெறப்படாத வகையில் முறையற்ற நியமனங்களும், சம்பளங்களும் வழங்கப்படுகின்றன.

சங்க விதிகள், உப விதிகளுக்கு மாறாக சங்கச் செயற்பாடுகள் இருப்பதனால் சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை கலைத்து 28 கிராம அலுவலர் பிரிவிலும் உப அலுவலக ரீதியாக ஆகக்குறைந்தது பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், நவாலி ஆகிய மூன்று பிரிவுகளுக்கு தனித்தனியான கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை முன்மொழியுமாறு சங்க அங்கத்தவர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரையும், கூட்டுறவு ஆணையாளரை யும் கோரியுள்ளனர்.

இதேவேளை, கடந்த காலத்தில் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய க.தனலிங்கத்தை மீண்டும் பொது முகாமையாளராக நியமிப்பதற்கு சங்க அங்கத்தவர்கள் உச்சக்கட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## தீப்பற்றியது மோட்டார் சைக்கிள்

வவுனியா நகரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பெற்றோல் நிரப்பிய மோட்டர் சைக்கிள் வெடித்து தீப்பற்றி எரிந்ததில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்பிய பெல்லி ரக மோட்டார் சைக்கிள் வெடித்து தீப்பற்றியது. இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமாகியுள்ளதுடன் அதன் சாரதியும் பெற்றோல் நிரப்பிய ஊழியரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# அடைமழை பாதித்த மக்களுடன் ஐங்கரன்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினுடைய பணிப்புரைக்கமைய வலிகாமம் கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான புத்தூர் கிழக்கு, அச்சுவேலி தெற்கு, அக்கரை ஆகிய கிராமங்களை ஈ.பி.டி.பியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளரும், வலி. கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐங்கரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்று மேற்படி பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களுக்கான உடனடி நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான அருளானந்தம் றஜீவன், கதிர்காமு சந்திரபோஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு நிர்வாக உப செயலாளர் மாணிக்கம் சந்திரசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# உடைக்கப்பட்ட வேணன்கட்டு மீள புனரமைப்புச் செய்யப்பட்டது

(காரைநகர்)

காரைநகரில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால் மழைநீர் தேக்கம் அதிகரித்து வேணன் அணைக் கட்டு உடைந்த நிலையில் நன்னீர் கடலுக்குள் பாய்ந்துகொண்டு இருந்தது.

நேற்றையதினம் இவ்விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு காரைநகர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும், பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் கொண்டு வந்தார்.

நேற்றையதினம் அமைப்பாளர் கண்ணன் நேரில் சென்று பார்வையிட்டபோது தேக்கத்தில் இருந்த மழை நீரானது வேகமாகக் கடலுக்குள் பாய்ந்து செல்கின்ற நிலை காணப்பட்டதனால் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுயற்சி செய்தபோதும் பயனளிக்கவில்லை.

நேற்றுக்காலை 51 ஆவது பாதுகாப்பு படையணியின் பொறுப்பதிகாரி மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரியுடன் கண்ணன் தொடர்பு கொண்ட நிலையில் காலை 10.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரை சுமார் 2000 மண் மூட்டைகள் கொண்டுவேணன் அணைக்கட்டின் உடைந்தபகுதியை அடைக்கும் பணி இடம்பெற்றது.

இதனால் மழைநீர் கடலுக்குள செல்லவிடாது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.


இதேவேளை, இன்னும் மேலதிகமாக 80 ஆயிரம் மண் மூட்டைகள் தேவைப்படும் என்றும் இன்று மழைநீரினைக் கடலுக்குள் செல்லவிடாது முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என யாழ் மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள் அதிகாரி கருணாநிதி தெரிவித்தார்.

# வறுமைப்பட்ட மக்களுக்கு சேவையாற்றவே மோ.சைக்கிள்

## – வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி

(கிளிநொச்சி)

அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாக மக்களுக்கான சேவைகளை இலகுபடுத்தி விரைவுபடுத்தக் கூடிய வகையில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுவதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்ற வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் வாழ்வின் எழுச்சி திணைக்கள பணியாளர்கள் தமது பணிகளை இலகுவாக முன்னெடுக்கும் வகையில் இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன.

இதனூடாக இம்மாவட்டத்திலுள்ள மக்களுக்கு இலகுவானதும் துரிதமானதுமான சேவைகளை செய்ய வேண்டுமென்பதுடன் மக்களுக்கான சேவைகள் செயற்றிறன் மிக்கதாக இருக்க வேண்டுமென்பதற்காகவுமே இவை வழங்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டம் மட்டுமல்லாது வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களைக் கொண்டு உத்தியோகத்தர்கள் தமது பணிகளை சிறப்பாகவும், இலகுவாகவும் முன்னெடுத்து வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதன்மூலமே வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்கள் உரிய பயன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசின் இத்திட்டம் நல்லதொரு வாய்ப்பு என்றும் தெரிவித்தார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் உரையாற்றினார்.

தொடர்ந்து வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன் மற்றும் பிரதித்திட்டப் பணிப்பாளர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை பூநகரி பிரதேச செயலர்கள் மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### ஐரோப்பிய...

ளுக்கும், அவர்களுக்கு ஆதரவான அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகவும், ஜரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் உறுப்பு நாடுகள் எடுக்கும் சகல வகையிலான நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

### மேஜர்...

முன்தினம் இடம்பெற்றது. கடந்தமாதம் 29 ஆம் திகதி யாழ். மாவட்டக்கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் பதவி யேற்றுக்கொண்டார்.

இந்நிலையில் நேற்றைய தினம் மரியாதையின் நிமித்தம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக்கலந்துரையாடினார். இதன்போது யாழ்மாவட்டத்தின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக இச்சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

### மைத்திரி...

இக்கட்சிக்காக பல தியாகங்களைச் செய்துள்ளோம் சரியான கொள்கையின் அடிப்படையில் சென்று கொண்டிருந்த இக்கட்சி இன்று திசை மாறிச் செல்கின்றது. இதனை கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் என்ற ரீதியில் எம்மால் அனுமதிக்க முடியாது.

1971 ஆம் ஆண்டு முதல் இக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் றோஹன விஜய வீரவுடன் இணைந்து செயற்பட்டவன் நான் கடந்த இரு தடவைகள் போன்றல்லாது தமிழ் மக்கள் இம்முறை நன்கு சிந்தித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வேண்டும். தாய் நாடு அல்லது மரணம் எனும் தொனிப்பொருளில் அப்பொழுது நடைபெற்ற இப்போராட்டத்தில் நாம் சிறையில் அடைக்கப்பட்டோம். அப்போது நான் பாடசாலை மாணவனாக இருந்தேன்.

வயது சென்ற நாம் இப்போது ஏன் இங்கு வரவேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். பிள்ளைகள் வழிதவறிச்செல்லும் போது எந்த வொருபெற்றோராலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு தான் நாம் பல போராட்டங்களுக்கும் பலரின் உயிர்த் தியாகங்களுக்கும் மத்தியில் கட்டியெழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியை பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பும், கடமையுமாகும்.

இன்று இக்கட்சி வெளிநாட்டு சக்திகளின் கைகளுக்குள் அகப்பட்டு நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இவர்களின் போலிச்செயற்பாடுகளிலிருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டியது மூத்த முன்னணி உறுப்பினர்கள் என்ற ரீதியில் எமது பொறுப்பாகும். இதனைத்தான் நாம் தற்போது செய்து வருகின்றோம்.

இந்த அடிப்படையில் தமிழ் மக்களிடமும் நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். கடந்த இருதடவைகள் போன்றல்லாது தமிழ் மக்கள் இம்முறை நன்கு சிந்தித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கு அனுபவிக்க வேண்டும் என்பதற்காக நாம் இங்கு தொடர்ந்தும் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்க முடியாது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எப்போதும் கொள்கையில் உறுதியுடன் இருப்பவர். அவர் எப்போதும் சிந்தித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருபவர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையில் உள்ள நல்லுறவைப்பயன்படுத்தி நமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும்.

உண்ட வீட்டுக் இரண்டகம் செய்த மைத்திரி பாலசிறிசேனவால் ஒருபோதும் ஜனாதிபதியாக வரமுடியாது. தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாத ஐ.தே.க.வால் இந்த நாட்டை ஒரு போதும் ஆட்சி செய்ய முடியாது. ரணில் விக்ரமசிங்க, சந்திரிகா, கரு, ரவூக் இவர்கள் எல்லோரும் பங்குரோத்து அரசியலைச் செய்து வரும் பச்சோந்திகள் இவர்களால் இத்தேர்தலில் ஒரு போதும் வெற்றிபெற்றிட முடியாது.

தமிழ் மக்கள் தவறாகச் சிந்தித்து கடந்த முறைவிட்ட தவறுளைப் போன்று மீண்டும் தவறிழைத்து விடாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். நிச்சயமாக மகிந்த ராஜபக்ஷவே மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவுள்ளார் எனவே தமிழ் மக்களும் இவரின் வெற்றியில் பங்கு தாரர்களாக ஆகவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். இந்நிகழ்வில் இம்முன்னணியின் முக்கியஸ்தர்களான சுனில் ரத்னசிறி கல்யான கருணாரட்ண, டபிள்யூ.ரீ.கருனாரட்ண ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

# தேர்தலை முன்னிட்டு பாடசாலைகள் பூட்டு

பாப்பரசர் முதலாம் பிரான்சிசின் இலங்கை வருகை மற்றும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி எட்டாம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அனைத்து அரசாங்கப் பாடசாலைகளையும் ஜனவரி 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை மூடத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாப்பரசர் வருகையை முன்னிட்டு கொழும்பிலுள்ள 43 பாடசாலைகள் ஜனவரி 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளன.

மேலும் நாளை வெள்ளிக்கிழமை மூன்றாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை விடைத் தாள்கள் திருத்தும் பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 83 பாடசாலைகளும், ஜனாதிபதித் தேர்தல் வாக்கெண்ணும் பணிகளுக்காக மத்திய நிலையமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளும் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி 5 ஆம் திகதி மீளத் திறக்கப்படவுள்ளன.

# நவாலி பாடசாலையில் இன்று பிரியாவிடை

நவாலி சென்பீற்றேஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்ற மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு 306 B1 சர்வதேச லயன் கழக மாவட்டத்தலைவர் லயன் எஸ்.ஜே.செல்வராஜா(ஜே.பி) பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை சமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(21)

### அமைச்சர்களை...

மொன்றும் சில தினங்களில் நடைபெறவுள்ளதாகவும் அதன் பின்னரே இது தொடர்பிலான முடிவுகள் அறிவிக்கப்படுமென்றும் இதற்கு மாகாண சபை அமைச்சு மற்றும் உறுப்பினர்களிடம் தற்போது விருப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, வினைத்திறன் வாய்ந்த மாகாண உறுப்பினர்கள் இவருக்கு சுழற்சி முறையில் அமைச்சு பதவிகள் வழங்க இருப்பதாகவும், இவ்விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுடன் முதல்வர் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும், யாழ்.கிளிநொச்சி குடிநீர் மற்றும் சுகாதார திட்டம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் கிளம்பிய நிலையிலேயே அமைச்சர்கள் மற்றும் குறித்த நிலைப்பாட்டை முதல்வர் விக்னேஸ்வரன் கையில் எடுத்துள்ளதாகத்தெரியவருகிறது.

### கொல்லப்பட்ட...

பொலிஸ் நிலையத்தில் அத்தியட்சகர் பதவி வகித்த ஜயரட்னம் மற்றும் படையினரின் ஓமந்தை சோதனைச் சாவடியில் கப்டன் தரத்தில் பதவி வகித்த லகி என்பவரும் விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் உள்ள புலிகளின் அல்பா 2 மற்றும் அல்பா 5 ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அதே ஆண்டில் மேற்படி இரு அதிகாரிகளுடன் சேர்த்து 80 பேர் முதலாவதாக 30பேர் பேருந்து மற்றும் லொறி ஆகியவற்றில் கொண்டு செல்லப்பட்டு பெரிய இந்து மடு காட்டுப் பகுதியில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாகவும், பின்னர் பொலிஸ் அதிகாரி ஜயரட்னம் வள்ளிபுனம் ஈஸ்டர் வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள காட்டுப்பகுதியில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இன்றைய தினம் வள்ளிபுனம் பகுதியில் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

### வடக்கில்....

வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தி முன்னேற்றும் வகையில் இத்தொழிற்துறைசார்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இவற்றை உரியமுறையில் பயன்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

தொழில் முயற்சியாளர்கள் தமது தொழிற்துறை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு உணவுசார் உற்பத்திகளை சுத்தமானதாகவும், சுகாதாரமானதாகவும், தரமானதாகவும் முன்னெடுக்கவேண்டும்.

உபகரணங்கள் கிடைக்கப்பெற்ற முயற்சியாளர்கள் உரிய பயன்களை பெற்றுக்கொள்கின்றார்களா என்பது தொடர்பில் கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கண்காணிக்க வேண்டுமெனுடன் மேலும் தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென் றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 33 சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு சுமார் 10,000 ரூபா பெறுமதியான தொழிற்துறை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட அதேவேளை, அவர்களது ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் பிராந்திய பணிப்பாளர் சிவகெங்காதரன், மாவட்டதிட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையின் மாவட்டப்பணிப்பாளர் ரவீந்திரன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.